விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

பக்கங்கள்: பதினெட்டு

Valampurii

சங்கு 11 வள்ளுவர் ஆண்டு 2041 புரட்டாதி 30 சனிக்கிழமை (16.10.2010) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 301


ரா
ம்
கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
R A M C O
SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து

# தமிழ்மக்களுக்கு அரசியல் தீர்வை வழங்கும் தருணம் வந்துவிட்டது

## ஜனாதிபதியிடம் மன்மோகன் சிங் வலியுறுத்தல்

(புதுடில்லி)

இலங்கையின் உள்நாட்டுப் போர் முடிபுக்குக் கொண்டுவரப்பட்டுள்ள நிலையில் தமிழ் மக்களுக்கு அரசியல் தீர்வு வழங்க இதுவே சரியான தருணம் என்று ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிடம் இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் வலியுறுத்தியுள்ளார். பொதுநலவாய விளையாட்டு விழாவில் கலந்துகொள்வதற்காக புதுடில்லிக்குப் பயணமாகியுள்ள ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிற்கும் இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்கிற்கும் இடையில் இடம்பெற்ற கலந்துரையாடலின்போதே அவர் மேற்கண்டவாறு வலியுறுத்தியுள்ளார். (18ஆம் பக்கம் பார்க்க)


மகிந்த-மன்மோகன் சந்திப்பின் போது...

# மனித உரிமை அமைப்புக்கள் சாட்சியமளிக்க மறுத்தது தவறு!

## ஜனாதிபதி ஆணைக்குழு காட்டம்

(கொழும்பு)

இலங்கையில் அரசாங்கத்தால் நியமிக்கப்பட்டுள்ள படிப்பினை மற்றும் நல்லிணக்கத்துக்கான ஆணைக்குழுவில் சாட்சியமளிக்க மறுத்திருந்த வெளிநாட்டு மனித உரிமை அமைப்புக்களை அந்த ஆணைக்குழு சாடியுள்ளது. தங்களுடைய தப்பு அபிப்பிராயத்தை அடிப்படையாகக் கொண்டு இவர்கள் ஆணைக்குழுவின் செயற்பாட்டை விமர்சிக்க முடியாது என அது தெரிவித்துள்ளது. இந்த ஆணைக்குழுவின் முன்பு வந்து சாட்சியம் வழங்க விடுக்கப் (18ஆம் பக்கம் பார்க்க)

## துப்பாக்கி சூட்டில் ஒருவர் உயிரிழப்பு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு கொக்கட்டிச்சோலை முனைக்காடு பிரதேசத்தில் நேற்று இடம்பெற்ற துப்பாக்கிப் பிரயோக சம்பவமொன்றில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

குடும்பத் தகராறில் வீடொன்று எரிக்கப்பட்ட சம்பவம் தொடர்பாக பொலிஸார் சந்தேக நபரை கைது செய்ய சென்றபோது இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

மேற்படி சந்தேக நபருக்கும் பொலிஸாருக்கும் (18ஆம் பக்கம் பார்க்க)

# சிறையை உடைத்தெறிந்துவிட்டு நாட்டு மக்களை பாதுகாக்க தயார்



## சரத் பொன்சேகா அறிவிப்பு

(கொழும்பு)

சிறையை உடைத்தெறிந்து விட்டு நாட்டு மக்களை பாதுகாப்பதற்கு தயார் என ஜனநாயக தேசியக் கூட்டமைப்பின் தலைவர் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

நீதிமன்ற விசாரணைகளில் ஆஜராகியபோது ஊடகவியலாளர்களை சந்தித்து அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார். அரசாங்கத்தினால் கைது செய்யப்பட்டுள்ள ஏனைய (18ஆம் பக்கம் பார்க்க)

# வெள்ளைக்கொடி விவகார விசாரணை மின்சாரம் தடைப்பட்டதால் ஒத்திவைப்பு

(கொழும்பு)

சரணடைந்த தமிழீழ விடுதலைப் புலிகளை சுட்டுக்கொல்ல பாதுகாப்புச் செயலர் உத்தரவிட்டதாக கூறிய சரத் பொன்சேகாவின் வழக்கு விசாரணை நேற்று 5 ஆவது நாளாகவும் கொழும்பு மேல் நீதிமன்றத்தில் நடைபெற்றபோது திடீரென மின்சார விநியோகம் தடைப்பட்டதன் காரணமாக வழக்கை ஒத்திவைக்க நேரிட்டது.

வழக்கின் பிரதிவாதியான சரத் பொன்சேகாவின் சார்பில் ஆஜரான சட்டத்தரணி நலின் லதுவாஹெட்டி சண்டே லீடர் ஆசிரியர் பிரட்றிக்கா ஜேன்ஸிடம் நேற்று குறுக்கு விசாரணை மேற்கொண்டார்.

இந்தத் தருணத்திலேயே மின்சாரத் தடை ஏற்பட்டுள்ளது. இதனையடுத்து மூன்று பேரைக் கொண்ட நீதிபதிகள் குழு விசாரணையை எதிர்வரும் (18ஆம் பக்கம் பார்க்க)

## உள்ளே

புலிகளின் இரகசிய முகாம் மட்டக்களப்பில் கண்டுபிடிப்பு

யாழ்.-கொழும்பு பஸ் சேவைக் கட்டணம்

தமிழ்ப் போராளிகள் சங்கமித்த திருமணம்

சீனாவின் அமைதியைக் கெடுத்த நோபல் பரிசு

# வெடிபொருட்களால் ஏற்படும் விபத்துக்கு மக்களே காரணம்!

## மிதிவெடி செயற்பாட்டு அலுவலர் குற்றச்சாட்டு

(யாழ்ப்பாணம்)

பொது மக்களின். பொறுபற்ற நடவடிக்கையே அண்மைக் காலமாக இடம்பெற்று வரும் வெடி விபத்துக்களுக்கு காரணமென யாழ். மாவட்ட மிதிவெடி செயற்பாட்டு அலுவலகர் வ.முருகதாஸ் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

அண்மைக்காலமாக வெடிக்காமல் காணப்படும் வெடிபொருட்களால் ஏற்படும் விபத்துக்களினால் உயிரிழப்புக்களும், அங்கவீனங்களும் ஏற்படுகின்றது.

எனினும் இவ்வாறு ஏற்படும் விபத்துக்கள் மிதிவெடியினால் தான் ஏற்பட்டது எனப் பொது மக்கள் எண்ணுகின்றனர்.

ஆனால் மிதிவெடிகளின் விபத்துக்களினால் அங்கவீனம் ஏற்படுமே தவிர, உயிரிழப்புக்கள் ஏற்பட அது (18ஆம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## ஊடகவியலாளர்கள் மீது தாக்குதல்
## மனித உரிமை கேந்திர நிலையம் கண்டனம்

(கொழும்பு)

உயர் கல்வி அமைச்சுக்கு அருகில் நேற்று முன்தினம் நடைபெற்ற மாணவர்களின் ஆர்ப்பாட்டம் தொடர்பான செய்திகளை சேகரிக்க சென்ற ஊடகவியலார்கள் மீது பொலிஸார் நடத்திய தாக்குதலை கண்டிப்பதாக இலங்கை மனித உரிமைகளுக்கான கேந்திர நிலையத்தின் பணிப்பாளர் கீர்த்தி தென்னக்கோன் தெரிவித்துள்ளார்.

லங்காதீப பத்திரிகையின் பிந்துன் மேனக்க, ரிவிர பத்திரிகையின் ஷமல் குணரத்ன, டெய்லி மிரர் பத்திரிகையின் புகைப்படப் பிடிப்பாளர் பிரதீப் தில்ருக்ஷன, நெத் எப்.எம்.வானொலியின் சந்த ருவான் யட்டிகிந்த, சிரச தொலைக் காட்சியின் வீடியோ படப்பிடிப்பாளர் சுப்ரமணியம் குணரத்னம் ஆகிய ஊடகவியலாளர்களே பொலிஸாரின் தாக்குதலுக்கு உள்ளாகியுள்ளனர்.

ஊடகவியலாளர்கள்தமது அடையாளத்தை உறுதிப்படுத்திய பின்னரும் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. ஊடகவியலாளர்கள் சுதந்திரமாக தமது பணிகளை மேற்கொள்வதற்காகவே அரசாங்க தகவல் திணைக்களம் ஊடகவியலாளர்களுக்கு அடையாள அட்டைகளை வழங்குகிறது. இந்த அடையாள அட்டைகளை காண்பித்த பின்னரும் பொலிஸார் தாக்குதல் நடத்தியமையானது, அவர்களின் பணிகளுக்கு இடையூறு விளைவிக்கும் நிலைமையாகும். மக்களின் கவனத்தை ஈர்க்கும் சம்பவங்கள் குறித்து செய்தி சேகரிக்கும் ஊடகவியலாளர்களுக்கு கடந்த சில மாதங்களாக கடும் தடைகளை எதிர்நோக்க வேண்டியேற்பட்டுள்ளது என அவரது அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-5)

## புலிகளின் இரகசிய முகாம் ஒன்று மட்டக்களப்பில் கண்டுபிடிப்பு
## இணையத் தளங்களில் செய்தி

(கொழும்பு)

மட்டக்களப்பு தொப்பிகலை பிரதேசத்தின் அலியாஓடை பகுதியில் விடுதலைப் புலி உறுப்பினர்களைக் கொண்ட இரகசிய முகாம் ஒன்று அமைந்துள்ளதாக விசேட அதிரடிப் படையின் புலனாய்வுப் பிரிவினர் கண்டுபிடித்துள்ளனர்.

புலிகளால் குறித்த முகாமுக்கு போ சிக்ஸ் என்று பெயரிடப்பட்டிருந்ததாகவும் அறிய முடிகின்றது. விடுதலைப் புலிகள் கிழக்கில் பலமாகச் செயற்பட்ட காலத்தில் அந்த முகாம் அருணா, குமாரப்பன், நியூட்டன் மற்றும் கருணா அம்மான் எனப்படும் விநாயகமூர்த்தி முரளிதரன் ஆகியோரின் கட்டுப்பாட்டில் இயங்கி வந்ததாகவும் 'மேலதிக தகவல்கள் தெரிவிக்கின்றன.

போ சிக்ஸ் முகாமில் ஏராளமான புலி உறுப்பினர்கள் தங்கியிருந்ததுடன் முகாமிலும் அதனைச் சுற்றிய பகுதியிலும் பெருமளவான கண்ணிவெடிகள் புதைக்கப் பட்டிருப்பதாகவும் விசேட அதிரடிப்படை புலனாய்வுத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அதற்கு மேலாக முகாமைச் சுற்றிலும் கொடிய முதலைகளைக் கொண்ட நீர் அகழி அமைந்திருப்பதன் காரணமாகவும் அப்பிரதேசத்தில் காணப்படும் மலைக்குகைகள் காரணமாகவும் கிழக்கை விடுவிக்கும் இராணுவ நடவடிக்கையின் போது இராணுவத்தினரால் குறித்த முகாமை கைப்பற்ற முடியாது போயிருந்தது.

ஆயினும் அரசாங்கம் அதனை வெளிக்குத் தெரியா வண்ணம் மூடிமறைத்திருந்தது. புலிகளின் வீழ்ச்சியைத் தொடர்ந்து குறித்த முகாமில் இருக்கும் புலி உறுப்பினர்களுடன் அரசாங்கத்தின் இன்றைய பிரதியமைச்சர் ஒருவர் தொடர்புகளை ஏற்படுத்திக் கொண்டதாகவும் தற்போது அவர்கள் அனைவரும் அவரது கட்டுப்பாட்டின் கீழ் இயங்கி வருவதாகவும் அதிரடிப் படையினர் உறுதிப்படுத்தியுள்ளனர்.

மேலும் பாகிஸ்தான் ஆதரவு பெற்ற தீவிரவாதிகள் உட்பட கிழக்கில் அரச ஆதரவுடன் செயற்படும் ஆயுதக் குழுக்களுக்கும் அங்கு வைத்தே ஆயுதப் பயிற்சியளிக்கப்படுவதாகவும் உறுதிப்படுத்தப்படாத தகவல்கள் தெரிவிக்கின்றன.

போ சிக்ஸ் முகாம் தொடர்பான தகவல்கள் கசியத் தொடங்கிய காரணத்தால் அப்பிரதேசத்திற்குப் பொறுப்பாக இருந்த விசேட அதிரடிப்படையினரை விலக்கி விட்டு அப்பிரதேசத்தை முழுமையாக இராணுவத்தின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதற்கு அரசாங்கம் உடனடி முயற்சிகளை மேற்கொண்டு வருவதாகத் தெரிகின்றது என அந்தச் செய்தியில் தெரிவிக்கப்பட்டிருந்தது. (ச-5)

## ஆயிரம் மாணவர்கள் என்றால் என்ன கைது செய்ய அரசாங்கம் தயங்காது
## உயர்கல்வி அமைச்சர் எச்சரிக்கை

(கொழும்பு)

போராட்டங்களில் ஈடுபடும் ஓரிரு மாணவர்களை மாத்திர மல்ல 500 முதல் ஆயிரம் மாணவர்களை சிறையில் அடைக்கவும் அரசாங்கம் தயங்காது என உயர்க் கல்வி அமைச்சர் எஸ்.பி.திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் நேற்றுமுன்தினம் உயர்கல்வி அமைச்சுக்கு எதிரில் நடத்தி ஆர்ப்பாட்டம் தொடர்பாக ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும் போதே அமைச்சர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

மாணவர்களுக்கிடையிலான மோதல் காரணமாக ரஜரட்ட பல்கலைக்கழக மாணவர்கள் கைது செய்யப்பட்டனர். பேராதனை பல்கலைக்கழகத்திற்கு தான் சென்றிருந்த போது சத்தமிட்டு கல்வீச்சு நடத்திய மாணவர்களே கைது செய்யப்பட்டனர் எனவும் அமைச்சர் திஸாநாயக்க குறிப்பிட்டுள்ளார்.

இந்த மாணவர்கள் பகிடிவதை மற்றும் சட்டத்தின் கீழ் நீதிமன்றத்தில் நிறுத்தப்பட்டுள்ளனர். இந்த சட்டத்தில் கைது செய்யப்பட்டால் நீதவான் நீதிமன்றம் பிணை வழங்க முடியாது. மேல் நீதிமன்றம் மாத்திரமே பிணை வழங்க முடியும். இதற்கு காலம் செல்லும். அதுவரை அவர்கள் சிறையில் இருக்கவேண்டும். இந்த சட்டத்தின் மூலம் 7 ஆண்டுகள் சிறையில் அடைக்க முடியும் எனவும் உயர்கல்வி அமைச்சர் மேலும் கூறியுள்ளார். (ச-5)

## பாணின் விலை உயர்வினால் உயிரிழப்பு ஏற்படாது - விமல்

பாண் விலை உயர்வினால் எவரும் உயிரிழக்கப் போவதில்லை என வீடமைப்பு அமைச்சர் விமல் வீரவன்ச தெரிவித்துள்ளார்.

பாண் விலை அதிகரிக்கப்படுவதனால் எவரும் பட்டினியில் உயிரிழக்க மாட்டார்கள் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஒருவிலவில் நடைபெற்ற வப்மகுல் நிகழ்வில் கலந்து கொண்ட போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

நாட்டின் இறையாண்மையைப் பாதுகாப்பது மிகவும் அவசியமானது. உணவுப் பாதுகாப்பு மிகவும் முக்கியமானது அதற்காக அனைவரும் படுபடவேண்டும். கடந்த காலங்களில் கோதுமை மாவிற்கு அரசாங்கங்கள் மானியங்களை வழங்கியுள்ளது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.


### விற்பனைக்கு

வடமராட்சி பருத்தித்துறை வீதி வல்வெட்டித்துறை ஊறணி ஆஸ்பத்திரிக்கும் பொலிகண்டிச் சந்திக்கும் இடையில் பிரதான வீதியில் அமைந்துள்ள 3 1/2 பரப்புக் காணியும் வீடும் உடனடியாக விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு :
T.P : 0775097845
(2667)

### மணமகள் தேவை

வயது 31 B.Sc(Computer Science), MCSA (Messaging), MCSE படித்த அரச நிறுவனத்தில் பணிபுரியும் மணமகனுக்கு A/L படித்த பெண் தேவை.

தொடர்புகளுக்கு :
0712924878
(2682)

### BARATHY
சித்தன்கேணி

சிறந்த பெறுபேறுகளை பெற்ற எம் மாணவர்களை வாழ்த்தி

விஜயதசமி நன் நாளில் புதிய வகுப்புக்கள்

தரம் - 5
புலமைப்பரிசில் வகுப்பு

ஆசிரியர் திரு. கலாமோகன்
(B.A, Dip.in TEACH)

ஆரம்பம் :- 17.10.2010 ஞாயிறு
4.30 p.m
உங்கள் அனுமதிகளைப் பெற்றுக் கொள்ளவும். (சி/1421)

### தனியார் நிறுவனங்களை பதிவு செய்தல்

பெறுமதி மிக்க உங்கள் வியாபார நிறுவனத்துக்கான கௌரவத்தையும் நம்பிக்கையையும் பெற்றுக் கொள்வதற்காக உங்கள் தனியார் நிறுவனங்களை இலகுவான முறையில் பதிவு செய்து கொள்ள நாடுங்கள்,

VTL MANAGMENT
Daanston House
Colombo -03
T.P. 072 9994777
(சி/1384)

### செல்லா சினிமா

மம்முட்டி அர்ஜுன் சினேகா மற்றும் பலர் நடிப்பில்



மூன்று ரிக்கெற் வாங்கினால் ஒரு ரிக்கெற் இலவசம்

இந்திய இலங்கை ஒரேதின வெளியீடு

வந்தே மாதரம்
அக்ஷன் காட்சிகள் நிறைந்த படம்

D.இமான் ஜெஹன்றி அரவிந்த்.T.

பாடல்கள் : வைரமுத்து, நந்தலாலா, சினேகன், விவேகா.

காட்சி-நேரம்:- 10.30, 2.30, 6.00, 9.00

### விஜயதசமி

நாள் வகுப்பு

கீதவாஹினி இசைக் கல்லூரியின் நாள் வகுப்பு பி.ப.3.00 மணி ஆரம்பமாகும்.

54 , விபுலானந்தர் வீதி, கொழும்புத்துறை.
96 ,செட்டித்தெரு, நல்லூர்.
(சி/1422)

### ஊர்காவற்றுறை ப.நோ.கூ.சங்கம்

### பதவி வெற்றிடம்

#### தட்டெழுத்தாளர்

01.சம்பளக்குறியீட்டு இல. - 305/15
02.சம்பளத்திட்டம் - 9450-75 X10 - 80X10 - 11000
03.வயதெல்லை - 18 தொடக்கம் 45 வரை
04.விண்ணப்ப முடிவுத்திகதி - 31.10.2010
05.தகைமைகள்
க/பொ/த (சாதாரண தரம்) சான்றிதழ் தொடர்பு பட்ட மொழி உட்பட 6 பாடங்களில் சித்தியும், சிங்கள தமிழ் தட்டெழுத்து நிமிடத்துக்கு 20 சொற்கள், ஆங்கிலமாயின் 30 சொற்கள்.
06. (1) சங்க எல்லைப்பரப்பில் வசிப்பவர்களுக்கும் கணனி அறிவு உடையவர்களுக்கும் முன்னுரிமை வழங்கப்படும்.
(2) வேறு சங்கங்களில் இருந்து விண்ணப்பிப்பவர்கள் தங்கள் சங்கங்கள் ஊடாகவே விண்ணப்பிக்க வேண்டும்.
(3) சங்கப் பணியாளர்களுக்கு வயதெல்லை கவனிக்கப்பட மாட்டாது.
(4) சங்கத்தால் கோரப்படும் பிணையை செலுத்தல் வேண்டும்.
07.விண்ணப்பங்கள் யாவும் பொது முகாமையாளர், ஊர்காவற்றுறை ப.நோ.கூ.சங்கம் என்ற முகவரிக்கு நேரிலோ அல்லது பதிவுத் தபாலிலோ 31.10.2010 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைக்கவும்.

பொது முகாமையாளர்,
ஊர்காவற்றுறை ப.நோ.கூ.சங்கம்,
ஊர்காவற்றுறை. (சி/1419)

4வது வருட பூர்த்தியை முன்னிட்டு UNI கணனி நிறுவனம் தற்போது சர்வதேச வலைப்பின்னலில் இணைக்கப்பட்டுள்ளது......

இன்று முதல் எமது UNI கணனி நிறுவனம் சர்வதேச வலைப்பின்னலில்...
4th www.uniictcampus.com 4th
என்னும் முகவரியில் பார்வையிட முடியும் என்பதை எமது மாணவர்கள் மற்றும் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்

இதன் மூலம் எமது நிறுவனத்தின் சர்வதேச தரம் மற்றும் அரச அங்கீகாரம் என்பவற்றை நீங்கள் இணையம் மூலம் அறிந்து கொள்ள முடியும்.

UNI - ICT CAMPUS
No :- 83, Palaly Road,
Kantharmadam, Jaffna

UNI - ICT Education Trainers
Jaffna Road, Manipay.
(மானிப்பாய் பிரதேச சபை முன்பாக)

# இன்று ஒரு தகவல்

## குதிரை

"குதிரைக்கும் கழுதைக்கும் என்ன வித்தியாசம்?" என்று கேட்டார் ஒருத்தர்.

"குதித்து ஓடத்தெரிந்தால் அது குதிரை. கனைத்துக் கொண்டே சுமக்கத் தெரிந்தால் அது கழுதை." என்று அதற்கு வேடிக்கையான விளக்கம் கொடுத்தார் இன்னொருத்தர்.

இந்த உலகத்தில் சுமப்பதற்கென்றே பிறந்தது கழுதை. ஓடுவதற்கென்றே பிறந்தது குதிரை. அடுத்தவர்களின் முதுகில் சவாரி பண்ணுவதற்கென்றே பிறந்தவன் மனிதன்.

அதனால் தான் குதிரையின் முதுகில் ஏறி உட்கார்ந்து கொள்கிறான். அது மட்டுமல்ல, அது அங்குமிங்கும் பார்க்காமல் வேகமாக ஓட வேண்டுமென்பதற்காக அதற்கு கண்ணடக்கம் மாட்டிவிடுகிறான். குதிரையின் கண் இருக்கிறதல்லவா அது கொஞ்சம் வித்தியாசமானது.

குதிரையின் தலையில் கண் பக்கவாட்டில் இருக்கும். இதனால் அதற்கு இரண்டு ஒற்றைக்கண் பார்வை கிடைக்கிறதாம். அது ஒரே சமயத்தில் தன்னுடைய இரண்டு பக்கவாட்டுத் திசைகளிலும் பார்க்க முடியுமாம். அதுமட்டுமல்ல, தனக்குப் பின்னால் என்ன நடக்கிறது என்பதையும் அதனால் பார்க்க முடியுமாம். நம்மால் அதனைப் போன்று பார்க்க முடிந்தால் எவ்வளவு சௌகரியமாக இருக்கும். அதன் உடம்பால் மறைக்கப்படும் பின்பகுதியை மட்டும் தான் குதிரையால் பார்க்க முடிவதில்லை. தனக்கு முன்னாள் உள்ள ஒரு பொருளை இரண்டு கண்களாலும் பார்க்கும் போது கண்களை முன்பக்கம் திருப்பி பார்வையைக் குவியப்படுத்தும், அப்பொழுது அதற்கு பக்கவாட்டுப் பார்வையும் பின்புறப்பார்வையும் மறைந்துவிடும்.

அப்படி அது இரண்டு கண்களின் பார்வையையும் குவித்துப் பார்க்கும் போது அதனுடைய கண்கள் சுமார் 1.2 மீற்றருக்கு குறைவான தொலைவிலிருக்கும் பொருட்களை குவியப்படுத்த முடியாதாம். அதனால் அதுதான் உண்ணும் இரையைக் கூட பார்ப்பதே இல்லையாம். வேடிக்கையாகத் தான் இருக்கிறது.

நாம் கூட பல சமயங்களில் அவசரமாக சாப்பிடும் போது சாப்பிடுவது என்னவென்பதை கவனித்தா சாப்பிடுகிறோம்? சாப்பிடுவது என்னவென்பது கைக்கும் வாய்க்கும் தான் வெளிச்சம். குதிரைக்கும் நமக்கும் இப்படி ஒரு ஒற்றுமை.

குதிரையை வண்டியில் கட்டும் போது, சவாரி செய்யும் போதெல்லாம் அதன் கண்ணுக்கு- கண்ணடக்கம் என்று சொல்லி திரைபோட்டு மறைத்து விடுவது எதற்கென்றால்...

அப்பொழுது தான் அது போகும் திசையில் மட்டும் கவனத்தை வைத்துக் கொண்டு ஓடும். பக்கத்திலும் பின்னாலேயும் என்ன நடக்கிறதென்பதே அதற்குத் தெரியாது. குதிரைப் பந்தயத்தில் தடை தாண்டும் போட்டிகளை பார்த்திருக்கிறீர்களா? நடுவில் வைத்திருக்கும் தடைகளை தாண்டி ஓடும்.

அந்த சமயத்திலெல்லாம் அது தரையையோ தடையையோ பார்க்க முடியாதாம். ஏதோ ஒரு குருட்டாம் போக்கில் தான் தாண்டுமாம். ஆனால் ஒரு விடயம்.

எந்த நேரத்தில் கால்களைத் தூக்கி எழும்பவேண்டுமென்பதை குதிரை மீது உட்கார்ந்திருப்பவர் சைகைகள் மூலமாக தெரிவித்துவிடுகிறார். அதைப் புரிந்து கொண்டு அது தாண்டிவிடுகிறது. அவ்வளவுதான். அவர் தவறுதலாக ஏதாவது காட்டிவிட்டால் குப்புற விழவேண்டியது தான். குதிரையின் கண்களை விட உயர்ந்த மட்டத்திலிருக்கும் பொருளையும் அதனால் தெளிவாக பார்க்க முடியாது. மிகத் தூரத்திலுள்ள பொருளையும் விபரமாக பார்க்க முடியாது. அது மட்டுமல்ல நிறங்களையெல்லாம் அதனால் கண்டுபிடிக்க முடியாது. (நிறக்குருடு) சரி, இப்படியெல்லாம் இருந்தும் குதிரை எப்படி சமாளிக்கிறது? இதற்கு கைகொடுப்பது அதனுடைய கழுத்து. அதற்கு நீளமான கழுத்து. அதன் உதவியால் தலையை அவ்வப்போது தகுந்த நிலைமைக்கு மாற்றி திருப்பி தன்னுடைய கண்ணில் பொருள் தெளிவாக தெரியும் படி பண்ணிக் கொள்கிறது.

தலையைத் தூக்கிவிட்டால் தூரத்தில் உள்ளதைப் பார்க்கும். தாழ்த்திவிட்டால் அண்மையிலுள்ளதை பார்க்கும்.

கண்ணில் விழித்திரை ஒன்று இருக்குமல்லவா, அது மற்ற விலங்குகளுக்கு குழிவாக இருக்கும். குதிரைக்கு தட்டையாக இருக்கும். அதனால் தான் தலையைத் திருப்பி விம்பம் விழுவது மாதிரி ப்ண்ணிக் கொள்ள முடிகிறதாம்.

ஒரு நல்ல தரமான குதிரை எப்படி இருக்க வேண்டும்? நெற்றி குறுகலாக இருக்க வேண்டும். இரண்டு பக்கமும் கண் சமமாக சரியாக இருக்க வேண்டும். இப்படி இருந்தால் அந்தக் குதிரை தன் தலைக்கு முன்னால் இருப்பதை தெளிவாக பார்க்க முடியும். அதுதான் உயர்தரமான குதிரை.

குதிரைக்கு பழக்கமும் பயிற்சியும் மிக முக்கியம். ஒருத்தர் ஒரு குதிரைக்குப் பயிற்சி கொடுத்து கொண்டிருந்தார். அந்தக் குதிரை முன்னால் நின்று கொண்டிருக்கும் இவர் பின்னால் கொஞ்ச தூரத்தில் இருந்து வேகமாக ஓடிவந்து ஒரு 'ஜம்ப்' பண்ணுவார். அப்படியே உயரே ஆகாயத்தில் எழும்பி குதிரையின் முதுகில் போய் பொத்தென்று உட்காருவார். அதே வினாடி அந்தக் குதிரை பாய்ந்து ஓட ஆரம்பித்து விடும். அப்படி ஒரு பயிற்சி.

இதைப் பார்த்த ஒரு பெரியவர் "இப்படி பொத்தென்று அதன் முதுகில் போய் விழுந்தால் குதிரையின் இடுப்பு என்னத்துக்கு ஆகும் உடைந்து விடாதா?" என்றார். இவர் அதையெல்லாம் காதில் வாங்கிக் கொள்ளவில்லை.

கொஞ்ச நாள் கழித்து, பயிற்சி கொடுத்தவர் அந்தப் பெரியவரை மறுபடியும் பார்த்தார்.

"ஐயா, நீங்கள் சொன்னது மாதிரியே இடுப்பு உடைந்து போய் விட்டது" என்றார்.

"குதிரைக்கா?" என்று கேட்டார் அவர்.

"இல்லை... எனக்கு!" என்றார் இவர்.

பார்த்தால் இடுப்பு வளைந்து போயிருந்தது.

"எப்படி?" என்று கேட்டார் அவர்.

"குதிரைக்கு பயிற்சியெல்லாம் நல்லாத்தான் கொடுத்தேன். அது முடிந்த பின் ஒரு தடவை நான் வழக்கம் போல பின்னாலிருந்து ஓடி வந்து ஸ்டைலாக 'ஜம்ப்' பண்ணி ஆகாயத்தில் எழும்பிகுதிரையின் முதுகில் உட்காரப் போனேன். நான் உட்காருவதற்கு முன் குதிரை ஓட ஆரம்பித்து விட்டது. தரையில் உட்கார்ந்து விட்டேன். அது தான் இப்படி ஆகிவிட்டது" என்றார்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# கனேடிய காவல்துறை அலுவலகம் கொழும்பில் திறக்கப்படவுள்ளது

இலங்கையில் இருந்து கனடாவுக்கு அகதிகள் வருவதை தடுப்பதற்காக கனடாவின் ஆர்.சீ.எம்.பி. காவல்துறையின் அலுவலகம் ஒன்று கொழும்பில் திறக்கப்படவுள்ளதாக ரொரண்டோ ஸ்டார் இணையத்தளம் செய்தி வெளியிட்டுள்ளது.

தமது நாட்டுக்கு வரும் இலங்கை அகதிகளை கட்டுப்படுத்தும் முகமாக தாய்லாந்தில் 155 இலங்கை அகதிகளை கனேடிய அரசாங்கத்துடன் தாய்லாந்து கொமாண்டோக்கள் இணைந்து கைது செய்தமை இதன் முதல் நடவடிக்கை என்றும் ரொரண்டோ ஸ்ரார் குறிப்பிட்டுள்ளது. இதேவேளை இலங்கையில் அச்சமான சூழ்நிலை இருப்பதாக கனடாவுக்கு வரும் இலங்கை அகதிகள் கூறுவது ஏற்புடையதல்ல என வெளி யுறவு அமைச்சர் ஜி.எல். பீரிஸ் தெரிவித்துள்ளார். கனடாவின் ரொரண்டோ ஸ்டார் இணையத்தளத்திற்கு வழங்கிய செவ்வியில் அமைச்சர் இதனை குறிப்பிட்டுள்ளார்.

கனடாவுக்கு வரும், இலங்கைக்கு வரும் அகதிகள் பொருளாதாரத்தை மையமாக கொண்டு வரும் அகதிகளாகும். அவர்களை அச்சத்தினால் கனடாவுக்கு வந்த அகதிகள் என்ற நிலையில் பார்ப்பது நியாயமாகாது என்றும் இலங்கையில் பயமிக்க சூழ்நிலை தற்போது முழுமையாக அகற்றப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். அத்துடன் அவுஸ்திரேலியா, இலங்கை அகதிகளின் விண்ணப்பங்களை பரிசீலிப்பதை இடை நிறுத்தியுள்ளமையை அமைச்சர் பீரிஸ் சுட்டிக்காட்டியுள்ளார். (ஸ்ரீ-2)

# நவராத்திரி விழாவும் பரிசளிப்பு விழாவும்

யாழ்/புன்னாலைக் கட்டுவன் மகா வித்தியாலயத்தின் நவராத்திரி விழாவும் பரிசளிப்பு வைபவமும் இப்பாடசாலை அதிபர் இரா. ஜெயக்குமார் தலைமையில் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வின் பிரதம விருந்தினராக இப்பகுதிக் கிராம அலுவலர் சோ.பரமநாதன் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளார்.

சிறப்பு விருந்தினராக இப்பாடசாலை ஸ்தாபகரின் மகன் எஸ். அரசாரத்தினம் கலந்து கொள்ளவுள்ளதாக பாடசாலை அதிபர் அறிவித்துள்ளார். (ஸ்ரீ-2)

# முகாமைத்துவ கற்கைகள் வணிகபீடத்தில் நான்கு துறைகள் வைபவரீதியாக ஆரம்பம்

யாழ். பல்கலைக்கழக முகாமைத்துவ கற்கைகள் வணிக பீடத்தின் கீழ் அரசினால் பிரசுரிக்கப்பட்ட வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் கணக்கியல் துறை, சந்தைப்படுத்தல் துறை நிதிமுகாமைத்துவத்துறை மற்றும் மனிதவள முகாமைத்துவத்துறை ஆகிய நான்கு துறைகள் உருவாக்கப்பட்டுள்ளன.

மேற்குறித்த துறைகளின் வைபவ ரீதியான ஆரம்ப நிகழ்வுகளை நாளை ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12 மணிக்கு துணைவேந்தர் பேராசிரியர் என்.சண்முக லிங்கன் ஆரம்பித்து வைக்கவுள்ளார் என வணிகபீட முகாமைத்துவ கற்கைக்ள் பீடாதி பதி பேராசிரியர் க. தேவராஜா அறிவித்துள்ளார். (ஸ்ரீ-2)

# இராசி பலன்

16.10.2010
(புரட்டாதி 30, சனிக்கிழமை)
நவமி முன்னிரவு 8.48 மணிவரை
உத்தராடம் காலை 7.37 மணிவரை
இராகுகாலம் 9.02-10.32 மணிவரை
சுபநேரம் 3.02-4.32 மணிவரை
ஐந்தாம் புரட்டாதிச் சனி
மகா நவமி விரதம்.

**மேடம்** புத்தி சாதூரியமான செயற்பாடுகளால் புகழ் அதிகரிக்கும், எடுத்த காரியத்தை எளிதில் நிறைவேற்றுவீர்கள், வீட்டை சீரமைப்பதில் அக்கறை காட்டுவீர்கள், இனிய செய்திகள் வந்து சேரும் நாள், தேக நலன் சீராக காணப்படும்.

**இடபம்** மாற்று கருத்துடையோர் மனம் மாறும் நாள், பயண நன்மையுண்டு, தந்தை வழி உறவினர் மூலம் சில நன்மைகள் ஏற்படலாம், பொருளாதார நிலை சுமுகமாக காணப்படும்.

**மிதுனம்** பிரயாண பயமுண்டு, தேகநலனில் கவனம் தேவை, கூட்டாளிகளிடையே கருத்து வேறுபாடுகள் ஏற்படலாம், கௌரவக் குறையுண்டு, உறவினரை அனுசரித்து நடப்பது நல்லது.

**கடகம்** சென்ற இடத்தில் செல்வாக்குண்டு, புதிய பொருட் சேர்க்கையுண்டு, வருமானம் திருப்தி தரும், உறவினர் வருகையால் அனுகூலமுண்டு, சுப செய்திகள் வந்து சேரும்.

**சிங்கம்** நல்லவர்களின் தொடர்பால் மனம் மகிழ்வீர்கள், கடன்சுமை குறைய வழிவகை செய்து கொள்வீர்கள், குடும்பத்தில் மகிழ்ச்சி அதிகரிக்கும், பகைவர்கள் மனம் மாறுவர்.

**கன்னி** இல்லத்தில் நல்ல சம்பவங்கள் நடைபெறுவதற்கான அறிகுறி தோன்றும், பிள்ளைகளின் வழியில் சுப நிகழ்ச்சிகளை நடத்த ஏற்பாடு செய்வீர்கள், உஷ்ண நிலையுண்டு.

**துலாம்** நண்பர்களின் சந்திப்பால் நன்மையடைவீர்கள், அந்நியர் வழியில் மகிழ்ச்சிக்குரிய செய்தி வந்து சேரும், சுப செலவுகள் ஏற்படலாம், வாகன சுகம் கிட்டும்.

**விருச்சிகம்** வருமானம் இருமடங்காகும், இனிய செய்திகள் இல்லம் தேடி வரும், பணத் தேவைகள் பூர்த்தியாகும், எடுத்த கருமங்கள் எளிதில் நிறைவேறும் நாள்.

**தனுசு** புதிய தொழில் தொடங்கும் எண்ணம் தோன்றும், விலை உயர்ந்த பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள், சுப நிகழ்வுகள் நடைபெறுவதற்கான அறிகுறி தோன்றும், புகழ் அதிகரிக்கும் நாள்.

**மகரம்** வியாபார நன்மை கருதி புதிய நண்பர்களை சந்திக்கும் சூழ்நிலை உருவாகும், திடீர் பயணம் உருவாகலாம், கவர்ச்சியான பேச்சால் காரியம் சாதிக்க வேண்டிய நாள்.

**கும்பம்** பணப்பற்றாக்குறை ஏற்படலாம், காரிய அலைச்சல் மனச்சஞ்சலத்தை உருவாகும், நண்பர்கள் சந்திப்பால் பண விரயம் ஏற்படலாம், பெரியோரை அனுசரித்து செல்வது நல்லது.

**மீனம்** குடும்ப மகிழ்ச்சி அதிகரிக்கும், பொழுதுபோக்கு விடயங்களில் நாட்டம் அதிகரிக்கும், வருமானம் மேலோங்கும், உறவினர் வருகையால் மன மகிழ்ச்சி உண்டு.

வளவன்

# கொழும்பு-யாழ்ப்பாணத்திற்கு இடையிலான பஸ் கட்டணங்கள் நிர்ணயிக்கப்பட்டுள்ளன

கொழும்பு-யாழ்ப்பாணம் ஆகியவற்றுக்கு இடையிலான பஸ் கட்டணங்கள் தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவினால் நிர்ணயிக்கப்பட்டுள்ளதாக கொழும்பு ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இலங்கையின் போக்குவரத்து ஆணைக்குழுவினால் நிர்ணயிக்கப்பட்டுள்ளதாக வெளியிடப்பட்டுள்ள கட்டணங்களின் படி ,

அதி சொகுசு பஸ் கட்டணம் 1035 ரூபா (புத்தளம் வழியாக), அதி சொகுசு பஸ் கட்டணம் 1015 ரூபா (குருணாகல் வழியாக), சொகுசு பஸ் கட்டணம் 700 ரூபா (புத்தளம் வழியாக), சொகுசு பஸ் கட்டணம் 740 ரூபா (குருணாகல் வழியாக), குறைசொகுசு பஸ் கட்டணம் 516 ரூபா(புத்தளம் வழியாக), குறைசொகுசு பஸ் கட்டணம் 552 ரூபா (குருணாகல் வழியாக )அறவிடப்படவுள்ளது.

புதிய கட்டண நிர்ணயங்களுக்கு அமைவாகவே யாழ் -கொழும்பு பஸ் போக்குவரத்து நடைபெற வேண்டுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

இதே வேளை போக்குவரத்தில் ஈடுபடும் பஸ்களுக்கு வருடாந்தம் 11இலட்ச ரூபா வீதி அனுமதிப்பத்திரக் கட்டணமாக அறவீடு செய்யப்படவுள்ளது. (ஸ்ரீ-2)

# குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | யாழ்ப்பாணம் |
|---|---|---|
| 1 Kg | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 120 | 140 |
| உருளைக்கிழங்கு | 90 | 100 |
| பச்சைமிளகாய் | 100 | 140 |
| தக்காளி | 60 | 100 |
| மரவள்ளிக்கிழங்கு | 40 | 50 |
| கோவா | 70 | 80 |
| கரட் | 70 | 100 |
| பூசணி | 40 | 40 |
| புடோல் | 50 | 80 |
| வாழைக்காய் | 40 | 50 |
| சின்ன வெங்காயம் | 90 | 80 |
| பெரிய வெங்காயம் | 80 | 80 |
| பாகற்காய் | 150 | 140 |
| வெண்டிக்காய் | 100 | 100 |
| கருணைக் கிழங்கு | 50 | 70 |
| பயற்றங்காய் | 100 | 120 |
| லீக்ஸ் | 120 | 130 |
| பீற்றூட் | 30 | 50 |
| கறிமிளகாய் | 120 | 160 |
| முருங்கைக்காய் | 150 | 140 |
| போஞ்சி | 150 | 160 |
| கத்தரிதம்புள்ள | 70 | 120 |
| கீரை - 1 பிடி | 30 | 35 |
| தேசிக்காய் | 80 | 100 |
| தேங்காய் (ஒன்று) | 40-45 | 40-50 |



மாதகல் சென்.ஜோசப் மகாவித்தியாலயத்தில் அண்மையில் நடைபெற்ற ஆசிரியர் தினவிழாவில் மாணவர்களின் பாண்ட் வாத்திய இசையுடன் அதிபர், ஆசிரியர்கள் அழைத்துவரப்படுவதையும் மாணவர்களின் கலைநிகழ்வையும் படங்களில் காணலாம். (படங்கள்:- மாதகல் செய்தியாளர்)

## சிறப்புச் சொற்பொழிவு

(மருதங்கேணி)

வடமராட்சி ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் ஆலயச் சூழலில் அமைந்திருக்கும் பெரியாழ்வார் ஆச்சிரமத்தில் பிரதி ஞாயிற்றுக்கிழமை தோறும் நடைபெற்றுவரும் ஆன்மீக நிகழ்வுத் தொடரில் நாளை ஞாயிற்றுக்கிழமை பகல் 10 மணி பூசை முடிவுற்றதும் ''கண்ணன் சொன்னது என்ன?'' எனும் விடயம் பற்றி ஆஞ்சநேயர் பாடசாலை ஆசிரியை செல்வி சிவயோகராணி கதிரவேலு சிறப்புச்சொற்பொழிவாற்றவுள்ளார். (ஸ்ரீ-35)

## நவராத்திரி விழா

(யாழ்ப்பாணம்)

இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம் நடாத்தும் நவராத்திரி விழா இன்று சனிக்கிழமை இணுவில் பரராசசேகரப் பிள்ளையார் அறநெறிப் பாடசாலையில் அபிவிருத்தி உதவியாளர் த.பிரதீஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வின் பிரதம விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக வணிக முகாமைத்துவ கற்கைகள் பீடாதிபதி க.தேவராசா கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளார்.

அத்துடன் வரம்பல நல்கிடும் பராசக்தி எனும் தலைப்பில் கு.பாலசண்முகன் சிறப்புச் சொற்பொழிவாற்றவுள்ளார். (ஸ்ரீ-2)

## விஜயதசமியும் வித்தியாரம்பமும்

(யாழ்ப்பாணம்)

நல்லூர் இளங்கலைஞர் மன்றம் நடாத்தும் விஜயதசமியும் வித்தியாரம்பமும் நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு மன்றக் கலாமண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வைத் தொடர்ந்து மன்றத்தின் இலவச இசை வகுப்புகளில் இணைய விரும்பும் பிள்ளைகளுக்கு வித்தியாரம்பம் செய்து கொடுக்கப்படும் எனவும் பெற்றோர்களையும் பிள்ளைகளையும் கலந்து கொள்ளுமாறு மன்றச் செயலாளர் அறிவித்துள்ளார். (ஸ்ரீ-2)




## புலமைப்பரிசில் பெறுபேறுகள்

**யா/மாதகல் விக்னேஸ்வரா வித்தியாலயம்**

சு.பூர்வஜா-157, ப.புவித்திரா-151, சி.அஜந்தனா-149, இ.யோகதாஸ்-146, ஞா.குகப்பிரியன்-145

மேலும் 5 மாணவர்கள் 100 புள்ளிகளுக்கு மேல் பெற்றுள்ளார்கள்.

**யா/மாதகல் சென்தோமஸ் பாடசாலை**

ஓ.றெனால்ட் ஜனுசன்-161, எ.துவாரகா-157, செ.மதுசாயினி-157, ம.நாகதீபன்-154, அ.திவியராஜ்-153, வ.வரணியா-150 (ஸ்ரீ-40)

### எங்களைப் பற்றியும் சிந்திப்பார்களா?

# மீள்குடியமர்ந்த மாரீசன்கூடல் —மக்களுடைய கோரிக்கை—

(இளவாலை)

கடந்த காலங்களால் ஏற்பட்ட யுத்தம் காரணமாக வன்னியில் இருந்து இடம் பெயர்ந்து சுமார் 16 குடும்பங்கள் வரையில், சண்டிலிப்பாய்ப் பிரதேச செயல்கப் பிரிவில் உள்ள மாரீசன் கூடல் கிராமத்தில் மீளக்குடியமர்ந்துள்ளனர்.

எனினும் இவர்களுக்கான எந்தவித அடிப்படை வசதிகளும் வழங்கப்படவில்லையென மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

ஆனால் சண்டிலிப்பாய்ப் பிரதேச செயலகத்திற்குட்பட்ட மாதகல் கிராமத்தில் இடம் பெயர்ந்து மீளக்குடியமர்ந்த மக்களுக்கு தற்காலிக வீட்டுத் திட்டமும் மலசலகூட வசதிகளும் வழங்கப்பட்டுள்ளது.

எனவே, இதே செயலக பிரிவில் காணப்படுகின்ற மாரீசன்கூடல் கிராமத்தில் இடம் பெயர்ந்தவர்களுக்கான திட்ட உதவிகள் வழங்கப்படாமையால், சம்பந்தப்பட்ட அதிகாரிகள் அக்கறை செலுத்துமாறு அப் பகுதி வாழ் மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (ஸ்ரீ-2-32)

# மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவிலின் திருத்தல வரலாற்று நூல் அறிமுகவிழா

(யாழ்ப்பாணம்)

வரலாற்றுப் பெருமை மிக்க மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவில் பற்றிய திருத்தல வரலாற்று நூல் அறிமுகவிழா இன்று காலை 9 தொடக்கம் 11 மணிவரை வெள்ளவத்தை உருத்திரா மாவத்தையிலுள்ள கொழும்பு தமிழ் சங்க மண்டபத்தில் ஓய்வு நிலை பெற்ற மகரகம தேசிய கல்விநிறுவக உதவிப் பணிப்பாளர் நாயகம் கலா பூஷணம் கலாநிதி குமாரசாமி சோமசுந்தரம் தலைமையில் இடம்பெறவுள்ளது.

நிகழ்வின் வரவேற்புரையை கணக்காளர் எஸ்.யு.சந்திரகுமாரன் நிகழ்த்த ஆசியுரையை மாவை ஆதீன கர்த்தா மஹாராஜ ஸ்ரீ சு.து.ஷண்முகநாதக் குருக்கள் ஆற்றுவார்.

வாழ்த்துரையை கலாசூரி ஆ.சிவநேசச் செல்வன் நிகழ்த்தவுள்ளார்.

வெளியீட்டுரையை அகில இலங்கை இந்துமாமன்ற உபதலைவரும் கொழும்பு தமிழ்ச் சங்கத் தலைவருமான மு.கதிர்காமநாதன் ஆற்ற முதற்பிரதியை திருப்பணித் தவமணி சி.தியாகராசா பெற்றுக்கொள்வார்.

நூல் நயப்புரையை ஓய்வுபெற்ற உதவிக் கல்விப் பணிப்பாளரும் பிரபல எழுத்தாளருமான திருமதி கோகிலா மகேந்திரன் நிகழ்த்துவார். (ஸ்ரீ-2)

## ஸ்ரீ அம்மா பகவான் பாதபூஜை நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

சுழிபுரம் ஸ்ரீ அம்மா பகவன் சற்சங்க ஆன்மீகப் பிரார்த்தனை மையத்தில் விஜயதசமியை முன்னிட்டு நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு ஸ்ரீ அம்மா பகவான் திருப்பாத பூசை நிகழ்வு நடைபெறவுள்ளது. (ஸ்ரீ-2)

## புகுமுக மாணவர்களுக்கான வழிகாட்டல் நிகழ்வு

(யாழ்ப்பாணம)

யாழ். பல்கலைக்கழக முகாமைத்துவக் கற்கைகள் வணிக பீடத்தின் புகுமுக மாணவர்களுக்கான வழிகாட்டல் நிகழ்வு நாளை மறுதினம் திங்கட்கிழமை காலை 8 மணிக்கு நடைபெறவுள்ளது.

பல்கலைக்கழக வளாகத்தில் அமைந்துள்ள பரமேஸ்வரன் ஆலயத்தில் நடைபெறும் விசேட வழிபாட்டுடன் மாணவர்கள் பீடத்திற்கு அழைத்து வரப்பட்டு வழிகாட்டல் நிகழ்வுகள் இடம் பெறுமென வணிகபீட முகாமைத்துவக் கற்கைகள் பீட பீடாதிபதி பேராசிரியர் க. தேவராஜா தெரிவித்துள்ளார். (ஸ்ரீ-2)

## மோட்டார் சைக்கிள்-பஸ் விபத்தில் பெண் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

பளை பகுதியில் மோட்டார் சைக்கிளும் தென்னிலங்கை சுற்றுலாப் பயணிகள் பஸ் ஒன்றும் மோதியதில் குடும்பப் பெண் ஒருவர் படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் நேற்று காலை 8 மணிக்கு இடம் பெற்றது.

குறித்த விபத்தில் அரியாலையைச் சேர்ந்த இந்திரகுமார் ஜெயராணி (வயது 33) என்ற மூன்று குழந்தையின் தாய் படுகாயம் அடைந்துள்ளார். (ஸ்ரீ-2-6)

## சித்திர வித்தியாரம்பம்

(யாழ்ப்பாணம்)

ஆத்திசூடி வீதி,கந்தர்மடத்தில் இயங்கும் ஐ.ஏ.ரி.சித்திரப்பயிற்சி நிறுவனத்தில் விஜயதசமி தினமான நாளை ஞாயிற்றுக்கிழமை சித்திர வித்தியாரம்பம் நடைபெறவுள்ளது.

எனவே பயில விரும்பும் தரம் 3 க்கு மேற்பட்ட மாணவர்கள் அனைவரையும் அன்றைய தினம் காலை 10 மணிக்கு வருகை தருமாறு நிறுவன இயக்குநர் அறிவித்துள்ளார். (ஸ்ரீ-2)

## வாணி விழா

(யாழ்ப்பாணம்)

யாழ் / அனலைதீவு சதாசிவ வித்தியாலயத்தில் வாணிவிழா எதிர்வரும் 19 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 10.30 மணிக்கு பாடசாலையின் பிரதான மண்டபத்தில் அதிபர் வீ. ஓங்காரலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் யாழ் / வல்வை சிவகுரு வித்தியாலய அதிபர் ஆ.சிவநாதன் " கடைக்கண்களே" எனும் தலைப்பில் சிறப்புச் சொற்பொழிவொன்றை ஆற்றவுள்ளார்.

தொடர்ந்து இந்துமா மன்றத்தினரால் ஒழுங்கமைக்கப்பட்ட கலைநிகழ்வுகளும் இடம்பெறும் எனப் பாடசாலை முதல்வர் அறிவித்துள்ளார். (ஸ்ரீ-2)

✠✠✠

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறை வேலாயுதம் மகா வித்தியாலய வாணி விழா இன்று சனிக்கிழமை காலை 9 மணிக்கு அதிபர் ச.திரவியராசா தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் மாணவர்களின் கலை நிகழ்வுகள் இடம்பெறவுள்ளதுடன் சொல்லின் சிகரம் பொன்.சுகந்தன் " நவராத்திரி விரத மகிமை'' எனும் தலைப்பில் சொற் பொழிவொன்றை நிகழ்த்தவுள்ளார். (ஸ்ரீ-2)

## கலைநிலா அரங்கும் வாணி விழாவும்

(யாழ்ப்பாணம்)

உரும்பிராய் ஸ்ரீ சாயி கலைக்கழகத்தின் 14 ஆவது கலைநிலா அரங்கும் வாணி விழாவும் இன்று காலை 9 மணிக்கு உரும்பிராய் காமாட்சி அம்பாள் கல்யாண மண்டபத்தில் யாழ்/உரும்பிராய் இந்துக் கல்லூரி அதிபர் அ.ஈஸ்வரநாதன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வின் பிரதம விருந்தினராக உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திருமதி மதுமதி வசந்தகுமார்,சிறப்பு விருந்தினராக இளைப்பாறிய அதிபர் அன்னைதாஸன் ஆனந்தராஜா ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

ஆசியுரையை சமாதான நீதவானும் ஓய்வுபெற்ற கிராம அலுவலருமான அ.த.க. கிருஷ்ணராஜா வழங்கவுள்ளார்.

அத்துடன் சிறப்பு இசை அரங்கு நிகழ்வும் இடம்பெறவுள்ளது. (ஸ்ரீ-2)

## இலவச தேவாரப் பண்ணிசை வகுப்புக்கள் ஆரம்பம்


(யாழ்ப்பாணம்)

அகில இலங்கைத் திருமுறை மன்றத்தால் நடத்தப்பட்டுவரும் இலவச தேவார பண்ணிசை வகுப்புக்களுக்கு விஜயதசமியை முன்னிட்டு புதிய மாணவர்கள் சேர்த்துக்கொள்ளப்படவுள்ளனர்.

இவ்வகுப்புக்கள் நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு யாழ். இந்து மகளிர் கல்லூரியிலும் மாலை 4 மணிக்கு யாழ்.சிவ தொண்டன் நிலையத்திலும் ஆரம்பமாகவுள்ளன.

எனவே இதில் பழைய மாணவர்கள் மற்றும் புதிய மாணவர்களை சமுகமளிக்குமாறு மன்ற அமைப்பாளர் சி.கிருஷ்ணமூர்த்தி கேட்டுக்கொள்கின்றார். (ஸ்ரீ

# தமிழ்ப் போராளிகள் சங்கமித்த திருமணம்!




மணமக்கள்

தமிழ்த் தீவிரவாதி மாறனை யாரும் மறந்திருக்க முடியாது. கன்னட நடிகர் ராஜ்குமாரை, சந்தனக் கடத்தல் வீரப்பன் கடத்திச் சென்ற காலகட்டத்தில் காடுகளில் இருந்து நாட்டைக் கலக்கிய மனிதர்களில் மாறனும் ஒருவர். அதன்பிறகு, விவசாயியாகத் தன்னை அடையாளம் காட்டினார். இப்போது சம்சாரியாக மாறி... மாறனுக்குக் கல்யாணம்!

கும்பகோணம் அருகே அணைக் கரையில் "தமிழ்த் தீவிரவாதி மாறன்" என்று அழைக்கப்படுகிற செங்குட்டுவனுக்கும், கடலூர் மாவட்டம் சென்னிநத்தம் ஊரைச்

## ஜூனியர் விகடன்

சேர்ந்த ஜெயந்திக்கும் கடந்த 10 ஆம் திகதி திருமணம் நடந்தது. தமிழர் தேசிய இயக்கத்தின் தலைவர் பழ.நெடுமாறன் தலைமையில் நடந்த இந்தத் திருமணத்தை 'இணையேற்பு விழா' என்று சொன்னார்கள். திருமண தினத்தின் காலையிலேயே தமிழ் உணர்வாளர்களும், சிறைத் தோழர்களும் செந்திலாண்டவன் திருமண மண்டபத்தில் குவியத் தொடங்கினர்.

அழைப்பிதழ் முகப்பில் தமிழ்நாடு விடுதலை இயக்கத் தலைவராக இருந்த " பொன்பரப்பி " தமிழரசனின் படமும், உள்பக்கம் சேகுவேரா மற்றும் பிரபாகரன் படங்களும் இருந்தன. திருமண மண்டபத்தில் பல இடங்களில் புத்தகங்கள், தமிழ் இனப் போராட்டம் தொடர்பான சி.டிக்கள் மற்றும் மூலிகை மருந்துகள் விற்பனை செய்யப்பட்டன. தமிழ்முறைப்படி திருமணம் நடைபெற்றதுடன், விழாவுக்கு வந்தவர்களுக்கு மரக்கன்றுகளும் வழங்கப்பட்டன.

இந்திய தேசிய லீக் அமைப்பாளர் 'தடா' ரகீம், ஆலப்பாக்கம் ' தடா' முருகேசன்,பெரியார் திராவிடர் கழகத் தலைவர் தா.செ.மணி, தமிழ்த் தேச விடுதலை இயக்கத் தலைவர் தியாகு என தடா, பொடா ஆட்களாகக் குவிந்திருந்தார்கள்.

"இது தமிழ்ப் போராளிகள் சங்கமித்த விழா..." என பேசத் தொடங்கிய தமிழர் கழகத்தின் தலைவர் புதுக்கோட்டை இரா.பாவணன், 'மாறன், ஓர் உண்மையான போராளி. ஆடம்பரத்தை விரும்பாமல், பசியோடும் பட்டினியோடும் வாழ்ந்தவர். சிறையில் இருக்கும்போதே தமிழில் முதுகலைப் பட்டமும், ஆய்வுப் பட்டமும் பெற்றவர். தமிழ்த் தேசியத்தோடு பொதுவுடைமை மலரவேண்டும் என்பதில் உறுதிகொண்டவர். ' தமிழர் விடுதலைப் படை' தடை செய்யப்பட்ட பிறகு, பல்வேறு குழுக்கள் இதில் இருந்து வந்தாலும் அவை கட்டப் பஞ்சாயத்து இயக்கங்களாக மாறின. ஆனால், இவர் மட்டும் உண்மையானவர் என்பதால் தான், அனைவரும் ஒன்றுபட்டு வந்திருக்கிறோம்! ' என்றார்.

"மாறன், தீவிரவாதப் பாதையில் இருந்து மாறி விட்டார்..." என பேசத் தொடங்கிய மாறனின் நண்பர்கள், " தமிழ்த் தீவிரவாத அமைப்புகளில் குறிப்பிடத்தக்க அடையாளம் பெற்றவர் மாறன். வீரப்பனை தமிழ்த்தேசிய அரசியலில் கொண்டு வந்ததிலும் மாறனின் பங்கு குறிப்பிடத்தக்கது. பொலிஸாரால் "மாஸ்டர் பிரெயின் மாறன்"என சித்திரிக்கப்பட்டவர். தமிழரசன், வீரப்பன் ஆகியோரிடம் நெருக்கமான உறவு வைத்திருந்த மாறன், அடுத்தடுத்துப் பல்வேறு வழக்குகளில் சிக்கவைக்கப்பட்டார். தலைமறைவு வாழ்க்கையும், சிறையுமாகத் தனது இளம் பருவ வாழ்க்கையை

## வழக்குகள் நிலுவையில்; ஜாமீனில் மணமகன்!

முற்றிலுமாக இழந்துவிட்டார்.

தற்போது, ' தமிழகத்தில் ஏற்பட்டு இருக்கும் சமூக மாற்றங்களும் , தமிழர்களுக்காகப் போராடுபவர்களே பிரிந்து கிடக்கும் நிலையிலும்... ஆயுதம் ஏந்திய போராட்டம் இனி சரியான வழியாக இருக்காது!' என நினைத்த மாறன், விவசாயத்தின் பக்கம் தனது கவனத்தைத் திருப்பினார். ஆனாலும், அரசும் காவல் துறையும் தொடர்ந்து அவரது நடவடிக்கைகளைக் கண்காணித்து வந்தன.




திருமண விழாவில்...

இந்த நிலையில்,தற்போது நிகழ்ந்த விழுப்புரம் தண்டவாளத் தகர்ப்பு சம்பவத்தில் கூட பொலிஸாரால் அவர் விசாரிக்கப்பட்டார். ' மாறன் இன்னும் தீவிரவாதப் பாதையில் இருந்து விலகவில்லையா?" என்கிற கேள்வி எல்லோரிடமும் மீண்டும் எழுந்தது. ஆனால், தீவிர விசாரணைகளுக்குப் பிறகு, ' மாறனுக்கும் இதற்கும் சம்பந்தம் இல்லை!' என விடுவிக்கப் பட்டார். இல்லற வாழ்க்கைக்குத் திரும்பி இருப்பதன் மூலம், தான் அமைதியாக வாழ விரும்புவதை மேலும் தெளிவுபடுத்தி இருக்கிறார்!' என்று சொல்கிறார்கள்.

புதுமாப்பிள்ளை மாறனுக்கு வாழ்த்துக்கள் தெரிவித்துவிட்டு அவரிடம் பேசினோம் 'இது நிச்சயிக்கப்பட்ட திருமணம். என்னுடன் சிறையில் இருந்த தோழர் உத்திராபதியின் உறவினர் பெண் ஜெயந்தி -தமிழ்த் தேசிய சிந்தனைகளை பொதுமக்களிடம் கொண்டு செல்லும் தோழர்கள் அனைவரையும் அழைத்துப் பெருமைப்படுத்த நினைத்தேன். அதன்படி, அனைவரும் விழாவுக்கு வந்தனர்.

என் மீது வழக்குகள் இன்னும் நிலுவையில் உள்ளன. ஜாமீனில்தான் வந்திருக்கிறேன்...' என்றார் மிகத் தெளிவான தொனியில்! □

# முதுமையில் மூளை சுருங்குவதை தடுக்கும் நடைப் பயிற்சி

## ஆராய்ச்சியில் தகவல்

(சிக்காகோ)

முதுமைப் பருவத்தில் மூளைசுருங்குவது வழக்கம். நடைப்பயிற்சி செய்தால் அது மூளை சுருங்குவதைத் தடுக்கும் என்று விஞ்ஞானிகள் தெரிவித்திருக்கிறார்கள்.

இது தொடர்பாக, அமெரிக்காவில் பிட்ஸ் பர்க் நகரில் ஒரு ஆராய்ச்சிக் குழுவினர் 300 பேரை ஆராய்ச்சிக்கு எடுத்துக் கொண் டது. அவர்கள் எவ்வளவு நேரம் நடைப்பயிற்சி செய்கிறார்கள் என்பதைக் கண்காணித்தது. வாரம் 9.6 கி.மீ.தொலைவுக்கு நடைப் பயிற்சி மேற்கொண்டவர்களுக்கு மூளை சுருங் குவது என்பது குறைவாக இருந்தது என்பது கண்டுபிடிக்கப்பட்டது.

மூளை சுருங்குவதால் நினைவு குறைவு ஏற்படுகிறது.

அல்ஜீமர் நோய் மூளை செல்களை கொஞ்சம் கொஞ்சமாக கொன்று விடுகிறது என்றும் விஞ்ஞானிகள் தெரிவித்த னர். (ஸ்ரீ-2)

# கையடக்கத் தொலைபேசியின் உதவியால் உலகில் வறுமை நிலை குறைகின்றது

## ஐ.நா. சபை தகவல்

(நியூயோர்க்)

உலக நாடுகளில் கையடக்கத் தொலை பேசி பயன்படுத்துவோரின் எண்ணிக்கை இந்த ஆண்டு இறுதிக்குள் 500 கோடியை எட்டி விடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

அதாவது விரைவில் ஒவ்வொருவரிடமும் ஒரு கையடக்கத் தொலைபேசி இருக்கும் அளவுக்கு வளர்ச்சி ஏற்பட்டு வருகிறது. தற் போது வளர்ச்சி அடைந்து வரும் நாடுகளில் 100 பேருக்கு 58 பேரிடமும் ஏழை நாடுகளில் 100 பேரில் 25 பேரிடமும் கையடக்கத் தொலைபேசி உள்ளது.

இதன் உபயோகத்தால் உலக நாடுகளில் வறுமை குறைந்து வருகிறது என்று ஐ.நா. சபை ஆய்வு ஒன்று தெரிவிக்கிறது. கைய டக்கத் தொலைபேசி வைத்திருப்பவர்கள் தங்களுக்குத் தேவையான தகவல்களை எளிதாகப் பெற்று விடுகின்றனர்.

இதனால் அவர்கள் குறிப்பிட்ட இடத்துக்கு பணம் செலவுசெய்து செல்ல தேவையில் லை எனவும் இதனால் வீண் அலைச்சல் குறைகிறது. இதுபோன்ற காரணங்களால் மக்களுக்கு பல வழிகளில் செலவுகள் குறைகின்றன. எனவே வறுமை நிலையும் குறைகிறது என்று ஐ.நா அறிக்கை கூறுகின்றது.

கையடக்கத் தொலைபேசி மூலம் ஏராள மான மக்களுக்கு வேலை வாய்ப்பு கிடைத்து இருப்பதாகவும் அநற்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. (ஸ்ரீ-2)

## ரஞ்சன் ராமநாயக்கவுக்கு விளக்கமறியல்

(கொழும்பு)

ஐ.தே.க நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்கவை நாளை மறுதினம் வரை விளக்கமறியலில் வைக்குமாறு கண்டி நீதவான் நேற்று உத்தரவிட்டார்.

நாடாளுமன்ற உறுப்பினரும் பிரபல நடிகருமான ரஞ்சன் ராமநாயக்க மோசடி குற்றச்சாட்டொன்றின் காரணமாக நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டார்.

நேற்று கண்டி நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்ட போதே நீதவான் மேற்படி உத்தரவை பிறப்பித்தார்.

ஆசிரியர் ஒருவரை திருமணம் செய்வதாகக்கூறி 10 இலட்சம் ரூபாவை மோசடி செய்ததாக ரஞ்சன் ராமநாயக்கவுக்கு எதிராக முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

(ஸ்ரீ-2)

# போர் முடிவுற்ற போதிலும் சமாதானம் என்பது கேள்விக்குறியாகவேயுள்ளது

## தேசிய சமாதானப் பேரவையின் பணிப்பாளர் தெரிவிப்பு

(கொழும்பு)

மழை ஓய்ந்தாலும் தூவானம் விடவில்லை என்பதுபோல் போர் முடிவுற்றாலும் மக்கள் மத்தியில் அமைதியும் சமாதானமும் ஏற்பட்டுள்ளதா என்பதுதான் இன்று எம் மத்தி யில் எழுந்துள்ள கேள்வியாகும் என தேசிய சமாதான பேரவை நிறைவேற்று பணிப்பாளர் கலாநிதி ஜெகான் பெரேரா தெரிவித்தார்.

கடந்த 9 ஆம் திகதி மன்னாரில் நடைபெற்ற சர்வமத இணக்கப்பாட்டினூடாக மனிதநேயத் தீர்வுகளை சாத்தியமாக்கல் சம்பந்தமான கருத்துப் பரிமாற்றல் கூட்டம் ஒன்றில் பேசுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார். அவர் அங்கு மேலும் பேசுகையில்,

இந்த சமாதானப் பேரவையானது 1995 ஆம்ஆண்டு முக்கிய யுத்த காலப்பகுதியில் ஆரம்பிக்கப்பட்டது.

இதில் உள்ளீடக்கப்பட்ட முக்கிய விடயங்களாக இனப் பிரச்சினையை எவ்வாறு பேச்சு வார்த்தைகள் மூலம் தீர்ப்பது. அடுத்து சமாதானத்தை எவ்வாறு அரசியல் தீர்வு மூலம் கொண்டு வரலாம் என்பதாகும்.

இருந்தும் எதிர்பார்க்காதபடி அரசியல் தீர்வு இன்றி சண்டை மூலமே அது ஒரு முடிவுக்கு வந்தது. தற்பொழுது போர்முடிந்துவிட்டது.

போர் முடிந்தும் சமாதானம் கிடைக்கவில்லையென்பதுதான் மக்கள் மனதில் நிலைத்திருக்கின்றது.

சமதானத்துக் காக வடக்கையும் தெற்கையும் எப்படி ஒற்றுமையுடன் செயல்படுத்தலாம் என்பதுதான் எமது முயற்சியாக இருக்கின்றது.



இப்பொழுது நாங்கள் கொழும்பிலிருந்து மன்னாருக்கு வரும் பொழுது தெருக்கள் சீராக அமைக்கப்பட்டுள்ளன. இதைப் பார்த்தபொழுது நாங்கள் மகிழ்ச்சி அடைந்தோம். முன்பு இங்கு வருவதென்றால் சீரற்ற பாதை கள், பல சோதனைச் சாவடிக ளைக் கடந்தே வர வேண்டியிருந்தது. இது ஒரு முன்னேற்றம் தான். இங்கு மக்கள் அடிப்படை தேவைகள் இன்றி வாழ்வது இங்கு வந்து பார்த்த பின்பு தான் புரிகின்றது.

இதை அரசுக்கு நாம் தெளிவுபடுத்துவோம். சில சமயம் அரசுக்கு கிராம மட்டத் தில் நிலவும் பிரச்சினைகள் பற்றி தெரியாமல் இருக்கலாம் என்றார்.

(ஸ்ரீ-2)

# புதிய கட்சிகளாக பதிவு செய்ய 82 கட்சிகள் விண்ணப்பம்

(கொழும்பு)

புதிய அரசியல் கட்சிகளை பதிவு செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதற்கான நேர்முகப் பரீட்சைகள் அடுத்த வாரத்தில் நடைபெறுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

அரசியல் கட்சியாக அனுமதி கோரி இது வரையில் 82 விண்ணப்பங்கள் தேர்தல் ஆணையாளரிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

எனினும் தெரிவுசெய்யப்பட்ட விண்ணப்பதாரர்களுக்கு மாத்திரம் இதற்கான அழைப்பு விடுக்கப்படவுள்ளது.

தேர்தல்கள் திருத்தச் சட்டத்தின் பிரகாரம் அரசியல் கட்சிகளை பதிவு செய்வதற்காக வழங்கப்பட்டுள்ள பிரமாணங்களுக்கு ஏற்ப தகைமைகளைப் பூர்த்தி செய்யாத விண்ணப்பதாரர்களுக்கு அழைப்பு விடுக்கப்படமாட்டாது என தேர்தல் திணைக்களம் தெரிவிக்கின்றது.

(ஸ்ரீ-2)

# உலகின் குள்ளமான மனிதராக கஜேந்திர தாபா மகர் தெரிவு

(பொகாரா)



உலகின் மிகக் குறைந்த உயரம் கொண்ட குள்ளமான மனிதராக நேபாளத்தைச் சேர் ந்த கஜேந்திர தாபா மகர் தெரிவு செய்யப்பட்டுள்ளார். இவரது வயது 18 ஆகும். உயரம் 25.8 அங்குலம் (65.5 செ.மீ என்பதுடன் எடை 5.5 கிலோவாகும்.

இதுவரையில் உலகின் மிகக் குறைந்த உயரம் கொண்ட குள்ள மனிதராக கொலம் பியாவின் எட்வர்ட் நினோ ஹெர்னான்டஸ் இருந்தார். 24 வயதாகும் நினோ நேபாளத்தின் கஜேந்திர தாபா மகரை விட 2 அங்குலம் கூடுதல் உயரமானவர். அதாவது நினோவின் உயரம் 27.8 அங்குலமாகும்.

உலக சாதனைப் புத்தகமான கின்னஸில் கஜேந்திர தாபா இடம்பெற்றுள்ளார். இவரது உயரத்தை பரிசீலித்து கஜேந்திர தாபாவைக் குள்ளமான மனிதராக அறிவித்துள்ளது.

நேபாளத்தில் உள்ள கிராமத்தில் பழ வியாபாரியின் மகனாகப் பிறந்த கஜேந்திர தாபாவின் கனவு திருமணம் செய்து கொண்டு மனைவியுடன் உலகை வலம்வர வேண்டும் என்பது தான். உலகின் குள்ள மனிதருக்கான அங்கீகாரச் சான்றிதழ் விரைவில் இவருக்குக் கிடைக்கும்.

நேபாளப் பிரதமரை பலமுறை சந்தித்துள்ள கஜேந்திர தாபா நேபாள சுற்றுலாவை மேம்படுத்துவதற்காக அந்நாட்டு சுற்றுலாத் துறை விளம்பர தூதராக நியமிக்கப்பட்டுள்ளார். கடந்த மாதம் நியூயோர்க் மற்றும் லண்டனில் சுற்றுப் பயணம் மேற் கொண்டார்.


உலகின் குள்ளமான மனிதராக கஜேந்திர தாபா மகரை அறிவிக்கக் கோரி சில மாதங்களுக்கு முன்னர் இவரது குடும்பத்தினர் கோரிக்கை விடுத்தனர். ஆனால் அப்போது இவருக்கு 18 வயதாவில்லையெனவும் ·18 வயது நிரம்பிய பின் அறிவிப்பதாக தெரிவிக்கப்பட்டது.

கஜேந்திர தாபா உருவில் சிறியவராயினும் மிகப் பெரிய பெயரை எடுத்துள்ளார் என்று அவரது தந்தை ரூக் பகதூர் தாபா மகர் குறிப்பிட்டுள்ளார். சுற்றுலாப் பகுதியான பொகாராவுக்கு வரும் பயணிகள் தனது மகனுடன் புகைப்படம் எடுத்துக்கொள்வதற்கு மிகுந்த ஆர்வம் காட்டுவதாக அவர் மேலும் தெரிவித்தார்.

(ஸ்ரீ-2)

# உயர்கல்வியமைச்சில் இடம்பெற்ற மோதலுக்கு ஜே.வி.பி.யின் தூண்டுதலே காரணமாகும்

## பிரதி உயர் கல்வி அமைச்சர் குற்றச்சாட்டு



(கொழும்பு)

மக்கள் விடுதலை முன்னணியின் தூண்டுதலின் காரணமாகவே பல்கலைக் கழக மாண வர் ஒன்றியம் செயற்பட்டதாக பிரதி உயர் கல்வியமைச்சர் நந்திமித்ர ஏக்க நாய க்க தெரிவித்துள்ளார்.

உயர் கல்வியமைச்சில் நேற்று முன்தினம் இடம்பெற்ற மோதல் சம்பவத்தையடுத்தே அவர் இதனைக் கூறினார்.

மாணவர்களால் அமைச்சு தாக்கப்பட்டது இதுவே முதல் தடவையென்பதுடன் இந்தச் சம்பவத்திற்கு பின்னால் எவருள்ளனர் என்பது தமக்குத் தெரியும் எனவும் கூறினார்.

பல்கலைக்கழகங்களுக்குள் சிறியதொரு அரசாங்கத்தை அமைப்பதற்கு மக்கள் விடுதலை முன்னணி முயற்சிப்பதுடன் தமது அரசியல் இலாபங்களுக்காக பல்கலைக் கழக மாணவர்கள் மூளைச்சலவை செய்யப்படுவதாகவும் நந்திமித்ர ஏக்கநாயக்க தெரிவித்தார்.


மக்கள் விடுதலை முன்னணியுடன் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்திற்கு நீண்ட கால தொடர்பு இருப்பதாகவும் கைது செய்யப்பட்டு பொலிஸ் பாதுகாப்பிலுள்ள பேராதனைப் பல்கலைக்கழக மாணவர்களை விடுவிப்பதற்கான எந்தவித அதிகார மும் தமக்கு இல்லையெனத் தெரிவித்த அவர் அமைச்சர், பிரதியமைச்சர் அல்லது பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுத் தலைவரால் எவ்வாறு இவர்களை விடுதலை செய்ய முடியுமெனவும் கேள்வி யெழுப்பினார்.

(ஸ்ரீ-2)





தேசிய சேமிப்பு வங்கியின் நாட்டிற்காக அதிகம் சேமிப்போம் என்ற தொனிப்பொருளிலான நிகழ்வு கடந்த ஞாயிற்றுக்கிழமை காரைநகரில் நடைபெற்றது. காரைநகர் கிளையின் முகாமையாளர் அ.கெங்காதரன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் தேசிய சேமிப்பு வங்கியின் சந்தைப்படுத்தல் முகாமை யாளர் எஸ்.உபேந்திரா, யாழ்ப்பாணக் கிளை முகாமையாளர் வி.அருளானந்தம், வடக்கு வலய முகாமையாளர் யு.எல்.ரவிக் ஆகியோர் காரை .கிட்ஸ்பார்க் மாணவர்களின் பாண்ட் வாத்திய அணிவகுப்புடன் அழைத்துவரப்படுவதையும் கொழும்பு வடக்கு வலய முகாமையாளர் லால் கருணாதிலக மங்கல விளக்கேற்றி ஆரம்பிப்பதையும் பாரிய சேமிப்பு வண்டியில் வாகனத்துடன் காரைநகர் கிளை உத்தியோகத்தர்களையும் கிட்ஸ் பார்க் மாணவர்களையும் படங்களில் காணலாம்.(படங்கள்:-காரைநகர் செய்தியாளர்)

# சீனாவின் அமைதியை கெடுத்த நோபல் பரிசு!



வென் ஜியாபோ

லியூ ஷியோபோ



அமைதிக்கான நோபல் பரிசுக்காக இந்த ஆண்டு தேர்ந்தெடுக்கப்பட்டிருப்பவர், சீனாவின் அறிஞர் லியூ ஷியோபோ! எந்த ஒரு நாட்டுக்கு இப்படி ஒரு நோபல் பரிசு கிடைத்திருந்தாலும், அந்த நாட்டில் கொண்டாட்டங்கள் கொடி கட்டிப் பறக்கும். வீதிகள் எல்லாம் விழாக்கோலம் பூணும். ஆனால், லியூ ஷியோபோ என்ற 55 வயது அறிஞர், நோபல் பரிசுக்கர்கத் தேர்ந்தெடுக்கப்பட்ட அறிவிப்பு வெளிவந்தபோது, சீனாவின் கம்யூனிஸ்ட் ஆட்சியாளர்கள் டென்ஷன் ஆனார்கள். இந்த செய்தியை 'அருவருப்பான அசிங்கம்' என்று கோபத்தைக் காட்டினார்கள்.

சீனாவில் இருக்கும் நோர்வே நாட்டின் தூதரை நேரில் அழைத்து, 'உங்கள் நாட்டில் இருந்து செயற்படும் நோபல் பரிசுக் குழு லியூ ஷியோபோவைத் தேர்ந்தெடுத்து இருப்பது உள்நோக்கம் கொண்டது. இரு நாட்டுக்கும் இடையிலான உறவைப் பாதிக்கக் கூடியது' என்று மிரட்டும் தொனியில் கண்டனம் தெரிவித்தார்கள்.

காரணம்?

சீனாவின் கம்யூனிச ஆட்சியாளர்களின் கட்டுப்பாட்டில் இருக்கும் நீதிமன்றத்தால், 11 ஆண்டுகள் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டு சிறையில் இருக்கும் ஒரு கைதிதான்...லியூ ஷியோபோ!

'இன்னும் எத்தனை ஆண்டுகள் தான் ஒரு கட்சி ஆட்சிமுறை என்ற சர்வாதிகார ஆட்சியை சகித்துக் கொள்வது? பல கட்சி ஜனநாயகம் நம் நாட்டுக்கு வேண்டாமா? மனித உரிமைகள் இங்கு மதிக்கப்பட வேண்டாமா?'

> **தனக்கு நோபல் பரிசு கிடைத்த செய்தியை தெரியாமல் ஒருவர் சிறையில் இருப்பது துரதிர்ஷ்டவசமானது தான்!**

என்பது போன்ற சிக்கலான பல கேள்விகளுக்கு விடை கொடுக்கக் கூடிய பிரகடனத்தை சீனாவின் கம்யூனிஸ்ட் ஆட்சியாளர்களுக்கு எதிராக வெளியிட்டார் லியூ ஷியோபோ. 'சார்ட்டர் 8' என்ற இந்தப் பிரகடனத்துக்கு ஆதரவு திரட்ட பொதுமக்களிடம் கையெழுத்து வேட்டையும் நடத்தினார். இதைப் பொறுத்துக்கொள்ள முடியாமல், சென்ற ஆண்டு டிசம்பர் மாதம் லியூ ஷியோபோவைக் கைது செய்து "11ஆண்டுகள் தண்டனை" என்று நீதிமன்றத்தை வைத்து தீர்ப்பும் சொல்லிவிட்டது, சீனாவின் சர்வாதிகார கம்யூனிச அரசு.

தியான் மென் சதுக்கத்தில் வரிசையாக அணிவகுத்து வந்த பீரங்கி வண்டிகளுக்கு முன்பு படுத்துப் போராடிய மாணவர்களை வழிநடத்திய முக்கிய நான்கு தலைவர்களில்

## தகவலை கொண்டு சென்ற மனைவிக்கு வீட்டுக் காவல்

லியூ ஷியோபோவும் ஒருவர். "மனித உரிமைக்காகக் குரல் கொடுக்கிறார்", "ஒற்றைக் கட்சி ஆட்சி முறை கூடாது" என பிரசாரம் செய்கிறார் என்று சொல்லி, அவரை மீண்டும் மீண்டும் கைது செய்தது. அவ்வளவு ஏன், தனக்கு நோபல் பரிசு கிடைத்திருக்கும் செய்தி லியூவுக்கு தெரிந்துவிடக்கூடாது என்பதற்காகக் கூட சீன அரசு முயற்சித்தது.

இந்த நோபல் பரிசு செய்தி மக்களையும் சென்றடைந்து விடக்கூடாது என்று, பி.பி.சி, சி.என்.என். போன்ற வெளிநாட்டுத் தொலைக்காட்சி சனல்களுக்கு ஏற்கனவே விதிக்கப்பட்டு இருந்த கட்டுப்பாடுகளைக் கடுமையாக்கியது. 'தனக்கு நோபல் பரிசு கிடைத்த செய்தியே தெரியாமல் ஒருவர் சிறைச்சாலையில் இருப்பது துரதிர்ஷ்டமான விடயம்" என்று வெளிநாட்டுத் தொலைக்காட்சிகள் 'ஃப்ளாஷ் நியூஷ்' வெளியிட வேற வழி இல்லாமல்...லியூ ஷியோபோவைச் சந்தித்து இந்த செய்தியைச் சொல்ல,அவரது மனைவிக்கு சீன அரசு அனுமதி கொடுத்தது.

வழியில் அவர் யாருக்காவது பேட்டி கொடுத்துத் தொலைத்தால் என்ன செய்வது என்று அஞ்சி, அவரைத் தன் பொறுப்பில் பொலிஸ் வாகனத்தில் ஏற்றிக்கொண்டு சென்றது. ஆனால், அதன்பிறகு லியூ ஷியோபோவின் மனைவி என்ன ஆனார் என்பது அவர் வக்கீலுக்கே தெரியவில்லை. அவர் வீட்டுக் காவலில் இருப்பதாக ஒரு தகவல். உலகின் மிகப் பெரிய சிறைக்குப் பெயர் சீனாவோ? □

# யுத்தம் பல தமிழர்களை பலி கொண்டுள்ளது

## என்கிறார் பிரதமர்

(கொழும்பு)

யுத்தத்தால் பெரும் எண்ணிக்கையான தமிழ் மக்கள் உயிரிழந்ததாகப் பிரதமர் டி.எம்.ஜயரத்ன தெரிவித்துள்ளார்.

நேற்றுமுன்தினம் அம்பாறை மாவட்டத் திற்கான விஜயத்தை மேற்கொண்டிருந்த பிரதமர் அம்பாறை ஸ்ரீ மாணிக்கப்பிள்ளை யார் ஆலயத்தில் நடைபெற்ற நிகழ்வொன் றில் இதனைத் தெரிவித்தார்.

யுத்தத்தின் போது சுமார் 70 ஆயிரம் பெண்கள் கணவனை இழந்துள்ளதாகவும் ஒரு இலட்சத்திற்கு மேற்பட்ட பிள்ளைகள் தமது பெற்றோரை இழந்துள்ளதாகவும் பிரதமர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

3இலட்சம் பேர் வரையில் நிர்க்கதியான தாகத் தெரிவித்த பிரதமர் சுமார் 2 இலட்சம் பேர் இருப்பிடங்களை இழக்க நேரிட்டுள் ளதாகவும் சுட்டிக்காட்டினார்.

யுத்தத்தால் தமிழ் மக்கள் அதிகம் பாதிக்கப் பட்டுள்ளதால் கவனயீனமாக இருக்கமுடி யாதெனவும் நாட்டிலுள்ள அனைவரையும் நிர்வ கிக்க வேண்டியது அரசாங்கத்தின் பொறுப்பு என்றும் அந்த நோக்கத்திலேயே அரசாங்கம் செயற்படுவதாகவும் பிரதமர் கூறினார். (ஸ்ரீ-2)

# மீன்பிடிப் படகில் அமெரிக்காவுக்கு நுழைய முயன்ற இலங்கையர் உட்பட 31பேர் கைது

(கொழும்பு)

மீன்பிடிப் படகு ஒன்றில் அமெரிக்கா வைச் சென்றடைய முயன்ற இலங்கையர் உட்பட 31 சட்டவிரோத பயணிகளை கடந்த 11ஆம் திகதி அந் நாட்டுக் கடலோரக் காவல் துறையினர் இடைமறித்துப் பிடித்துள்ளார் கள்.

இச் சட்டவிரோத பயணிகளில் 19 பேர் ஹெயிட்டியைச் சேர்ந்தவர்கள் என்றும் 6பேர் பிரேசிலைச் சேர்ந்தவர்கள் எனவும் 4பேர் ஜமெய்க்காவைச் சேர்ந்தவர்கள் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இவர்கள் தெற்கு புளோரிடா மாநிலத் தைச் சென்றடைய முயன்றபோது, போயின ரன் பீச்சை அண்டிய கடல் பரப்பில் வைத்து காவல்துறையினரின் படகுகளால் சுற்றி வளைக்கப்பட்டார்கள்.

சட்டவிரோத பயணிகள் மாத்திரம் அன்றி அவர்களைப் படகில் கொண்டு வந்திருந்த கணவன் - மனைவியும் கைது செய்யப்பட்டி ருக்கின்றார்கள். படகு இவர்களுடையது. மியாமி நாட்டைச் சேர்ந்தவர்களாவர்.

இவர்கள் இதற்கு முன்பும் ஆட்கடத்தல் களில் ஈடுபட்டிருக்கின்றார்கள். சட்டவிரோத பயணிகள் இப் பயணத்துக்காக தலா 5 ஆயிரம் அமெரிக்க டொலர் வரை இவர்களுக்கு கொடுத்துள்ளார்கள் என்று விசாரணைக ளில் இருந்து தெரியவந்துள்ளது. (ஸ்ரீ-2)

# அமைச்சரவைத் தீர்மானங்கள்

### பாதுகாப்பு பிரிவு சீருடை

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் ஆலோச னைக்கமைய பாதுகாப்பு பிரிவினரின் சீருடைத் துணி கொள்வனவு செய்வதற்கு குழு ஒன்றை நியமிக்க அமைச்சரவை தீர்மானம் நிறை வேற்றியுள்ளது.

அதன்படி முப்படைப் பொலிஸ் உட்பட பாதுகாப்புப் பிரிவினருக்கான சீருடைகளை தயாரிப்பதற்கு உள்ளூர் உற்பத்தியாளர்க ளிடம் போட்டி அடிப்படையில் துணி வகைகள் கொள்வனவு செய்யப்படவுள்ளன.

பாதுகாப்பு அமைச்சின் கண்காணிப்பின் கீழுள்ள குறிப்பிட்ட நிறுவனங்களின் பிரதிநிதி களைக் கொண்டு இந்தக்குழு நியமிக்கப்பட வுள்ளது.

### தெதுறு ஓயாத்திட்டதால் இடம்பெயர்ந்தவர்கள் மீள் குடியேற்றம்

அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா ஆலோசனைக்கு ஏற்ப தெதுறு ஓயாத் திட்டத் தால் இடம்பெயர்ந்த 900 குடும்பங்களை மீள் குடியேற்றுவதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

இடம்பெயர்ந்தவர்கள் கனேவத்த பிரதேச செயலகப் பிரிவில் பீட்டா வெலி தோட்டத்தில் மீள்குடியமர்த்தப்படவுள்ளனர்.

குடும்பம் ஒன்றுக்கு வாழ்க்கைச்செலவாக மாதம் ஒன்றுக்கு 6 ஆயிரம் ரூபாவீதம் 6மாத காலத்துக்கு வழங்கப்படும் ஆரம்ப கட்ட கொடுப் பனவு 8ஆயிரம் ரூபாவாகும் அத்துடன் மின்சாரம், உள்ளக வீதி வசதி செய்து கொடுக் கப்படுவதுடன் எதிர்வரும் ஆண்டில் திட்டம் பூர்த்தி செய்யப்படும்.

### விலங்குகளைத் தனிமைப்படுத்தி வைக் கும் நிலையங்கள்

அமைச்சர் ஆறுமுகம் தொண்டமானின் அமைச்சரவைப்பத்திரத்துக்கு ஏற்ப விமான நிலையம் மற்றும் துறைமுகங்களில் உள்ள விலங்கினங்களை தனிமைப்படுத்தி வைக் கும் நிலையங்களை 30 மில்லியன் ரூபா செலவில் விஸ்தரிக்க அமைச்சரவை முடிவு செய்துள்ளது.

அம்பாந்தோட்டை உத்தேச புதிய விமான நிலையம் மற்றும் துறைமுகம் ஆகியவற் றில் இரண்டு நிலையங்களை புதிதாக அமைக்கவும் கொழும்பு கட்டுநாயக்காவில் உள்ளவற்றை நவீனமயப்படுத்தவும் முடிவு செய்யப்பட்டுள்ளது.

### அம்பாந்தோட்டை வைத்தியசாலைக்கு புதிய உபகரணம்

அம்பாந்தேட்டை வைத்தியசாலைக்கு புற்று நோய்க்கு சிகிச்சை அளிப்பதற்கான டெலிகொபோல்ட் பிரிவொன்றை அமைக்க அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

### இலங்கை இந்திய கலாசார ஒத்துழைப்பு

அமைச்சர் பவித்திராவன்னியராச்சியின் பிரேரணைக்கேற்ப இந்திய விஜயத்தின் போது ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ செய்து கொண்ட உடன்படிக்கைக்கு அமைவாக இரு நாடுகளுக்கு இடையிலான கலாசார உறவுகளை முடிவுசெய்யப்பட்டுள்ளது.

### கிராமிய சிரேஷ்ட பிரஜைகள் மன்றங்கள் பதிவு

சமூக சேவைகள் அமைச்சர் பீலிக்ஸ் பெரேராவின் ஆலோசனைப்படி நாடளாவிய ரீதியிலுள்ள 10ஆயிரத்து 88 கிராமிய சிரேஷ்ட பிரஜைகள் மன்றங்களை அங்கீகரித்துப் பதிவு செய்வதற்கு இணக்கம் காணப்பட்டுள்ளது.

இரண்டு மில்லியனுக்குட்பட்ட அரச நிர்மாண ஒப்பந்தங்களை ஏற்கக் கூடிய மன்றங்க ளாக இவை ஏற்றுக் கொள்ளப்படு கின்றன. (ஸ்ரீ-2)

# மிளகாயில் பீடைகளும் முகாமைத்துவமும்

12-VIII

## இனியொரு பசுமைப் புரட்சிக்கு...



கலாநிதி கு.மிகுந்தன்
தலைவர்
உயிரியல்துறை
விவசாய பீடம்
யாழ்.பல்கலைக்கழகம்

### அந்திரக்னோசு நோய்

எங்களூரில் மிளகாய்ப் பயிரில் சேதத்தை ஏற்படுத்துகின்ற நோய்களுள் அந்திரக்னோசு பூஞ்சணநோயும் ஒன்று. இந்நோயின் தாக்கம் ஏனையவற்றைப் போலல்லாது வித்தியாசமானதாக இருப்பதனால் இந் நோயின் அறிகுறிகளை வைத்து சுலபமாக இனங்காண முடியும்.


அந்திரக்னோசு (Anthracnose) என பொதுவான பெயர் கொண்டு அழைக்கப்பட்டாலும் இந்நோயை ஏற்படுத்துவது ஒரு வகைப்பூஞ்சணம் என அவதானிக்கலாம். இப்பூஞ்சணங்களை _கொலற்றோறைக்கம் கப்சிசி_ _Colletotrichum capsici_ என இனங் கண்டுள்ளனர்.

இவ்விரு பூஞ்சணங்களும் மண்ணில் ஏனைய பூஞ்சணங்கள் போல வாழுந் திறனற்றவை என்பது ஒரு புறமிருக்க இன்னொருவகையில் பெரிதாக வீரியம் அதிகம் உள்ள பூஞ்சணங்களல்ல. தாமாக விரைந்து மிளகாய்ப் பயிரில் நோயையேற்படுத்தும் வல்லமையற்றன. இவற்றின் விருத்திக்கும் தொற்று ஏற்படுத்தும் திறனுக்கும் அனுகூலமான காரணிகள் இருக்கும் வரை மட்டுமே இப்பூஞ்சணத்தின் பாதிப்பு அதிகமாக இருக்கும். அனுகூலமான காரணிகளான சூழலின் வெப்பநிலை, ஈரப்பதன், காற்றின் வேகம் என்பவற்றுடன் பயிரிலுள்ள நோயெதிர்ப்பு சக்தி என்பன முக்கியமானவை. எம்மவர்களில் இடங்கொடுத்தால் மடங்கட்டி விடுபவர்கள் போன்ற கதைக்கு ஒப்பானது இது.

மிளகாய்ப் பயிரின் பராமரிப்பு சரிவர இல்லாது விட்டால் பயிர் தேவையானளவு ஊட்டச்சத்து இன்றி இடர்ப்படும் போது பயிர் நொய்ந்து காணப்படும். இந்தத் தருணத்தை இப் பூஞ்சணம் சிறந்த வாய்ப்பாகக் கருதி தொற்று ஏற்படுத்தி விடும்.

பூஞ்சணத் தொற்று ஏற்பட்டுவிட்டால் கிடைக்கின்ற அனுகூலமான சூழல் காரணிகள் உதவிகொண்டு பூஞ்சணம் விரைந்து பெருகிவிடும். பூஞ்சணம் தொற்றுதலாகி இருப்பதை அது மிளகாய்ப் பியரில் தோற்றுவிக்கும் அறிகுறிகளை வைத்து இனங் காணலாம். இங்கே குறிப்பாக கொப்புக்களில் உள்ள இலைகள் உதிர்ந்து பாதிப்புற்ற கிளை மட்டும் இலைகளேதுமின்றி நுனியிலிருந்து மெதுவாக இறக்கத் தொடங்கும்.

நோய் தீவிர தன்மையையடையும் போது மிளகாய்ப் பயிரின் குறிப்பிடத்தக்க பாகம் குறிப்பாக கிளைகள் இறந்து காய்ந்திருக்கும். இறந்த பகுதியில் கறுப்புநிறப் புள்ளிகளாக இப்பூஞ்சணத்தின் வித்திகள் உருவாக்கப்படும். இவ்வித்திகள் காற்றினூடாக விதையினூடாக இலகுவாகப் பரவும் வாய்ப்புக்கள் அதிகம்.




### மிளகாய் - வெள்ளைச் செத்தலாக

எங்களூரில் மிளகாய் ஒரு பணப்பயிர். இதற்கு உள்ளிடப் படும் முதலுக்கு அறுவடை சரியில் லையாயின் பயிர்ச் செய்கை நஷ்டத்தி லேயே முடியும்.

அதுவும் ஏனைய பயிர்க ளில் இழந்த முதலை இவற்றிலிருந்தேயே மீளப் பெற முடியும். இவற்றின் விளைச்சலில் அதிகம் பெற்றாலும் அதனது தரமும் விலையை நிர்ணயிக்கின்ற காரணிகளில் முதன்மையானதாகி விடும்.

அந்திரக்னோசு பூஞ்சண நோயின் ஒரு பக்கத்தில் பயிரில் குறிப்பிட்ட தரை மேல் பகுதி காய்ந்து போவதனால் அதிலிருந்து விளைச்சல் எதுவுமே வராது, இந்த இழப்புடன் மிளகாய் சிவப்பு நிறமான பழமாக அறுவடை செய்யப்பட்டு காயவைக்கும் போது கடும் சிவப்பு நிறமாக இருத்தல் வேண்டும். இந்த நிறத்தை மிளகாய் இந்தாலோ அல்லது அதில் குறை வந்தாலோ சந்தை விலை குறைந்து விடும். எதிர்பார்த்திருக்கும் இலாபம் வராது.

இவ்வாறாக சந்தை விற்பனை விலையில் பாதிப்பை ஏற்படுத்த இந்நோயின் பாதிப்பு குறிப்பாக அறிகுறிகுறிகள் உதவி விடும். நோயின் தீவிரத்தன்மை அதிகரித்த வேளைகளில் அந்திரக்னோசு பூஞ்சணத்தினது தொற்றுதல் மிளகாயிலும் தெரியும். இவ்வாறு பூஞ்சண தொற்றுக்குள்ளான அல்லது பாதிக்கப்பட்ட மிளகாய்ப் பழங்கள் வெள்ளைச் செத்தலாக மாறும்.

இது பின்னர் தயாரிக்கப்படும் மிளகாய்த் தூளின் நிறத்தில் பாதிப்பை ஏற்படுத்துவதனால் வெள்ளைச் செத்தலுக்கான கேள்வி மிகவும் குறைவாகவே இருக்கும். " வீட்டுக்கு வந்தது வாசல்படியோடு போன" கதையாகிவிடும்.

(தொடரும்)

# தயாமாஸ்டர், ஜோர்ஜ் மாஸ்டரின் விசாரணை அறிக்கையை சமர்ப்பிக்குமாறு உத்தரவு

(கொழும்பு)

விடுதலைப் புலிகளின் முன்னாள் ஊடகப் பேச்சாளர் தயா மாஸ்டர் மற்றும் மொழிப் பெயர்ப்பாளர் ஜோர்ஜ் மாஸ்டர் ஆகியோர் சம்பந்தமாக தயாரிக்கப்பட்டுள்ள விசாரணை அறிக்கையை உடனடியாக தாக்கல் செய்ய நடவடிக்கை எடுக்குமாறு கொழும்பு பிரதான நீதவான் ரஸ்மி சிங்கப்புலி நேற்றுமுன்தினம் குற்றப் புலனாய்வுத்திணைக்களத்திற்கு உத்தர விட்டுள்ளார்.

இது தொடர்பான வழக்கு விசாரணை நேற்று முன்தினம் நடைபெற்ற போது குற்றப் புலனாய்வு, திணைக்களத்தினர் முன்வைத்த விடயங்களைக் கவனத்தில் கொண்ட நீதவான் இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளார்.

வழக்கு விசாரணைகளின் போது பிணையில் விடுவிக்கப்பட்டுள்ள சந்தேக நபர்கள் இருவரும் தனிப்பட்ட ரீதியில் ஆஜராகியதுடன் முறைப்பாடு சார்பில் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தினர் விடயங்களை முன்வைத்தனர்.

சந்தேக நபர்கள் நீதிமன்றத்தில் வழங்கிய வாக்குமூலத்தின் அடிப்படையில் நடவடிக்கை எடுப்பதற்காக சட்டமா அதிபரின் ஆலோசனை பெறப்படவுள்ளதாக குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தினர் தெரிவித்தனர்.

(ஸ்ரீ-2)

# அரசுடன் இணைந்தமைக்கான காரணத்தை முன்வைக்காவிடின் கட்சி உறுப்புரிமை இரத்து

## பிரபாகணேசனுக்கு மனோகணேசன் எச்சரிக்கை

(கொழும்பு)

அரசாங்கத்துடன் இணைந்து கொண்டமைக்கான காரணங்களை முன்வைக்காவிட்டால் பாராளுமன்ற உறுப்பினர் பிரபா கணேசனின் கட்சி உறுப்புரிமை இரத்துச் செய்யப்படும் என ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

பிரபா கணேசனின் கட்சி உறுப்புரிமை இடை நிறுத்தப்படடுள்ளதாக தெரிவித்த அவர் ஆளும் கட்சியில் இணைந்து கொண்டமைக்கான காரணங்களை முன்வைக்குமாறு பிரபா கணேசனுக்கு அறி விக்கப் பட்ட போதிலும், இதுவரையில் அதற்கான பதில் கிடைக்க வில்லை என தெரிவித்துள்ளார்.



கட்சியின் உத்தரவிற்கு அமைய ஆளும் கட்சியிலிருந்து விலகியமை மற்றும் 18 ஆவது திருத்தச் சட்டமூலத்திற்கு ஆதரவாக வாக்களித்தமை ஆகியன பாரிய குற்றங்களாகும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

பிரபா கணேசன் இதுவரை காலமும் வகித்து வந்த சகல பதவிகளிலிருந்தும் அவர் நீக்கப்பட்டுள்ளதாக மனோகணேசன் அறிவித்துள்ளார்.

எதிர்வரும் 23ஆம் திகதிக்கு முன்னதாக பிரபாகணேசன் அரசாங்கத்துடன் இணைந்து கொண்டமைக்கான காரணத்தை கட்சிக்கு அறிவிக்கத் தவறினால் அவரது கட்சி உறுப்புரிமை இரத்துச் செய்யப்படும் என குறிப்பிடப்படுகிறது.

(ஸ்ரீ-2)



யாழ்.வல்வை சிவகுரு வித்தியாசாலையில் வல்வை நலன்புரிச் சங்கம் பிரித்தானியக் கிளையின் அனுசரணையுடன் மாணவர்களுக்கு அண்மையில் பாதணிகள் வழங்கப்பட்டன. இந்நிகழ்வில் பாடசாலை அதிபர் ஆ.சிவநாதன், பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட வல்வை ஒன்றியத் தலைவர் எக்ஸ்.குலநாயகம் ஆகியோர் உரையாற்றுவதையும், அத்துடன் பாதணிகள் வழங்கும் நிகழ்வை ஆரம்பித்துவைப்பதையும் பாடசாலை மாணவர் சங்கத் தலைவர் எஸ்.தர்மகுலசிங்கம் மாணவி ஒருவருக்கு பாதணிகள் வழங்குவதையும் படங்களில் காணலாம். (படங்கள்:- அல்வாய் நிருபர்)

# ஐப்பசி மாத இராசி பலன்கள்

## 18.10.2010 முதல் 16.11.2010 வரை




(சித்திரை 3, 4 ஆம் பாதங்கள், சுவாதி, விசாகம் 1, 2, 3 ஆம் பாதங்கள்)

**வசீகரப் பேச்சால் வருவோர்களை வளைக்கும் துலாம் இராசி நேயர்களே!**

நீங்கள் சந்தோஷமாக வாழ்வதை இலட்சியமாகக் கொண்டவர்கள். யோசிக்காமல் எந்த முடிவும் எடுக்க மாட்டீர்கள். விடாமுயற்சியின் பயனால் வாழ்க்கையின் பிற்பாதியில் வசதி, வாய்ப்புகளை உருவாக்கிக் கொள்வீர்கள். சாமர்த்தியசாலிகள் என்று சமுதாயத்தில் உங்களை அழைப்பர்.

பயணங்களில் அதிக ஆர்வம் காட்டும் நீங்கள் மற்றவர்களின் மனதைப் புரிந்து கொண்டு, செயல்பட்டால் மகத்தான வெற்றி காணலாம்.

ஐப்பசி மாத கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, உங்கள் இராசியிலேயே சூரியன், புதன், செவ்வாய், சுக்ரன் ஆகிய நான்கு கிரகங்களும் கூடி கூட்டுக்கிரக யோகத்தை உண்டாக்குகிறார்கள். அந்த அடிப்படையில் பார்க்கும் பொழுது, வரவும்-செலவும் சமமாகும் என்றாலும், விரய ஸ்தானத்தில் சனி சஞ்சரித்து ஏழரைச் சனியின் ஆதிக்கத்தை வலுப்படுத்துவதால், விரயங்கள் ஒரு மடங்கு கூடும்.

ஆறில் குரு வக்ரம் பெற்றிருப்பது யோகம் தான். என்றாலும், மாதத்தின் பிற்பகுதியில் ஐந்தாமிடத்தில் குரு உங்கள் ராசிநாதன் சுக்ரனுக்கு பகை கிரகம் என்பதால், குருப் ரீதியும், சுக்ர ப்ரீதியும் முறையாகச் செய்வது நல்லது.

**செல்வ நிலையை உயர்த்தும் செவ்வாய் பெயர்ச்சி!**

எதிர்வரும் 20ஆம் திகதி விருச்சிக இராசியில் செவ்வாய் சஞ்சரிக்கப் போகிறார். இதன் விளைவாக, தன ஸ்தானம் வலுவடைகிறது. எனவே, பணப்புழக்கம் அதிகரிக்கும். பக்கபலமாக இருப்பவர்களின் எண்ணிக்கை கூடும். மனதளவில் நினைத்திருந்த கரியமொன்றை மடமடவென செய்து முடிப்பீர்கள். வீட்டு பராமரிப்புச் செலவில் ஆர்வம் கூடும். வீட்டை விரிவுபடுத்தி கட்ட வேண்டுமென்ற எண்ணம் மேலோங்கும். சகோதரர்கள் பாகப் பிரிவினைகளை சுமுகமாக முடித்துக் கொள்ள முன்வருவர். சாந்த சொரூப அம்பிகையை வழிபட்டால் சிறந்த பலன் கிடைக்கும்.

**பொன்னான புதனின் பெயர்ச்சி!**

எதிர்வரும் 31ஆம் திகதி விருச்சிக இராசியில் புதன் சஞ்சரிக்கப் போகிறார். இதன் விளைவாக, விரயத்திற்கேற்ற தன இலாபம் வந்துகொண்டேயிருக்கும். வெளிநாட்டு அனுகூலம் உண்டு. கொடுக்கல்-வாங்கல்களில் நீண்டநாள் பாக்கிகள் வசூலாகும். விலை உயர்ந்த பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள். பிரிட்ஜ், கிரைண்டர் போன்றவற்றை வாங்கி வீட்டுத் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ள முன்வருவீர்கள்.

**கும்ப குருவின் ஆதிக்கம்!**

இதுவரை மீன இராசியில் வக்ர கதியில் இயங்கிய குரு நவம்பர் மாதம் 7ஆம் திகதி மீண்டும் கும்ப இராசிக்கு வருகிறார். கும்ப குருவின் ஆதிக்கத்தால் கொடுக்கல், வாங்கலில் பிரச்சினை உருவாகலாம். பூர்வீக சொத்துத் தகராறுகள் அதிகரிக்கும். பிள்ளைகள் வழியில் பெரும் விரயங்களும் உருவாகலாம்.

உத்தியோகம் மற்றும் தொழில் துறையில் திடீர் மாற்றங்களும், கூட்டாளிகள் குணம் மாறி நடக்கும் சூழ்நிலையும் ஏற்படலாம். எனவே முறையாக சர்ப்ப சாந்தியை செய்வதோடு, தென்முகக்கடவுளையும் திருப்தியாக வழிபடுவது நல்லது. இம்மாதம் இனிய மாதமாக மலர வடக்கு நோக்கிய துர்க்கையை வழிபட்டு வாருங்கள்.

**பெண்களுக்கான சிறப்புப் பலன்கள்**

இம்மாதம் குடும்பச் செலவுகள் கூடும். குழந்தைகள் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள். மனக்குழப்பம் அகல மாற்றினத்தவர் ஒத்துழைப்புச் செய்வர். அசதியும், அலைச்சலும் அடிக்கடி உருவாகும். உடன்பிறப்புகள் எதிரியாக மாறலாம். உள்ளத்தில் ஒன்றும், உதட்டில் ஒன்றும் வைத்துப் பேசுபவர்களை இனம் கண்டுகொள்ளுங்கள். மாதத்தொடக்கத்தில் இருக்கும் மகிழ்ச்சி மாதக்கடைசியில் குறையும். எனவே, இறைவழிபாடு இனம்புரியாத கவலையைப் போக்கும்.




(விசாகம் 4ஆம் பாதம், அனுஷம், கேட்டை)

**வெற்றி ஒன்றையே குறிக்கோளாகக் கொண்டு செயல்படும் விருச்சிக ராசி நேயர்களே!**

நீங்கள் நல்ல மனதிற்கு சொந்தக்காரர்கள். உங்களைப் புரிந்து கொண்டவர்கள் உங்களுடன் சேர்ந்திருக்கவே பிரியப்படுவார்கள். ஆன்மீக நாட்டம் அதிகமாகவே உங்களிடம் இருக்கும். தொழிலிலும் நிர்வாகத் திறமை அதிகம் பெற்றவர்களின பட்டியலில் முதலிடம் பிடிப்பீர்கள். தன் பேச்சு தனக்கு எதிரி என்பது போல, நீங்களே சில சமயங்களில் எதிர்ப்புகளைத் தேடிக் கொண்டு மீண்டும் சமாதானம் அடைவீர்கள். புகழ் ஏணியின் உச்சியில் இருக்க வேண்டுமென்று விரும்புவீர்கள்.

ஐப்பசி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, இராசிநாதன் செவ்வாய் சூரியன், புதன், சுக்ரன் ஆகிய மூன்று கிரகங்களுடனும் இணைந்து பன்னிரண்டாம் இடத்தில் சஞ்சரிக்கின்றன. அதேநேரத்தில் அள்ளிக்கொடுக்கும் இராகு தன ஸ்தானத்தில் சஞ்சரிக்கிறார். எனவே, ஒரு பக்கம் வருமானம் அதிகமாக வந்து கொண்டே இருக்கும். மற்றொரு பக்கம் செலவு நடைகளும் கூடிக் கொண்டே செல்லும்.

இருப்பினும், குருவின் பார்வை உங்கள் இராசியில் பதிவதால், தேவையான பொருட்களை வாங்க, தேவையான நேரத்தில் பணம் வந்து கொண்டேயிருக்கும். குரு வக்ர நிலையில் இருப்பதால், அதைப் பலப்படுத்த வியாழன் தோறும் விரதமிருப்பதோடு, தென்முகக் கடவுளை திருப்தியாக வழிபட்டால் நன்மைகள் அனைத்தையும் வரவழைத்துக் கொள்ள இயலும்.

**சிறப்பு தரும் செவ்வாய் பெயர்ச்சி!**

விரயச் செவ்வாய் மாறி எதிர்வரும் 20ஆம் திகதி முதல் விருச்சிக இராசியிலேயே சஞ்சரிக் கப்போவதால் ஆரோக்கியம் சீராகும். மருத்துவச் செலவுகள் குறையும். நோய்க்கான அறிகுறி எப்படி மாறியது என்று நீங்கள் ஆச்சரியப்படுவீர்கள். இறைவழிபாடு உங்களுக்கு எல்லா வழிகளிலும் கைகொடுத்து உதவும். இராசிநாதன் பலம் பெறும் இந்த நேரத்தில் தொட்ட காரியங்கள் அனைத்தும் வெற்றி பெறும். தொழில் வளம் மேலோங்கும். கூட்டு முயற்சிகளில் இலாபம் கிடைக்கும்.

**இலாபாதிபதி ராசியில் சேரும் நேரம்!**

எதிர்வரும் 31ஆம் திகதி விருச்சிக இராசியில் இலாபாதிபதி புதன் சஞ்சரிக்கப் போகிறார். அஷ்டமாதிபதியாக புதன் விளங்கினாலும், 6க்கு அதிபதியாக விளங்கும் செவ்வாயுடன் இணைவதால், விபரீத இராஜயோகம் செயல்படப்போகிறது. எனவே, திட்டமிடாது செய்யும் காரியங்கள் வெற்றிபெறும். செல்வ நிலையில் மேலும் ஒருபடி உயரும். உறவினர்கள் உங்கள் இல்லம் தேடி வந்து பாராட்டுவர்.

**கும்ப குருவின் ஆதிக்கம்!**

நவம்பர் 7ஆம் திகதி கும்ப இராசியில் குரு வக்ரத்தோடு சஞ்சரிக்கிறார். அதன் பார்வை பலத்தால் உங்கள் இராசிக்கு 8, 10, 12 ஆகிய இடங்கள் புனிதமடைகின்றன். எனவே, தொழில், உத்தியோகத்தில் நல்ல முன்னேற்றங்கள் வந்து சேரும். பயணங்களால் பலன் கிடைக்கும். சொத்துக்களால் ஆதாயம் உண்டு.

**சிவல்புரி சிங்காரம்**

இம்மாதம் இனிய மாதமாக அமைய கற்பக விநாயகரை வழிபட்டு வாருங்கள். விநாயகர் வழிபாடு உங்கள் விருப்பங்களை நிறைவேற்றும்.

**பெண்களுக்கான சிறப்பு பலன்கள்**

இம்மாதம் குடும்ப முன்னேற்றம் கூடும் மாதமாக அமையப்போகிறது. தன வரவு தாராளமாக வந்து சேரும். குடும்பத்தில் உங்கள் சொல் மேலோங்கியிருக்கும். ஆடை, ஆபரண சேர்க்கை அதிகரிக்கும். நவம்பர் மாதம் முதல் வாரத்தில் நல்ல தகவல்கள் உங்கள் இல்லம் தேடி வந்து சேரும். உடன்பிறப்புகள் உதவி செய்ய முன்வருவர். உற்சாகத்தோடு செயல்படும் விதத்தில் உடல் ஆரோக்கியம் அமையும். மகிழ்ச்சி அதிகரிக்க மாயவனையும், வேலவனையும் வழிபட்டு வாருங்கள்.

(தொடரும்)








யா/நல்லூர் இந்து தமிழ் பெண்கள் பாடசாலையின் ஆசிரியர் தின விழாவில் யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் வாழ்த்துரை வழங்குவதையும் பாட சாலையின் மூத்த ஆசிரியை திருமதி சு.யோகேஸ்வரன், பிரதம விருந்தினரும் முன்னாள் அதிபருமான திருமதி. சி. காங்கேயன், யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர், பாடசாலை அதிபர் எம். கஜேந்திரன் ஆகியோர் மேடையில் அமர்ந்திருப்பதையும் பாடசாலையின் பழைய மாணவரான நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீல ஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகள் அருளாசி வழங்குவதையும் படங்களில் காணலாம்.

## 25 வருடங்களின் பின்னர் வடபகுதி அதிஉயர் பாதுகாப்பு வலயங்களை மீள்வரைவு செய்ய இராணுவம் தீர்மானம்

25 வருடங்களின் பின்னா வடபகுதியிலுள்ள அதிஉயர் பாதுகாப்பு வலயங்களை மீள்வரைவு செய்ய இராணுவம் தீர்மானித்துள்ளது. இந்தத் திட்டத்தின் கீழ் அதிஉயர் பாதுகாப்பு வலயத்திலுள்ள 2 ஆயிரத்து 392 வீடுகள் உரிமையாளர்களிடம் வழங்கப்படவுள்ளன.

இதன் மூலம் 11 ஆயிரத்து 960 குடும்பங்கள் நன்மையடையும் இதில் 26 கோயில்கள், 2 ஆயிரத்து 153 கிணறுகள் ஏழு பாடசாலைகள் அதிஉயர் பாதுகாப்பு வலயங்களில் காணப்படுகின்றன. இந்தப் பிரதேசங்களில் தற்பொழுது கண்ணிவெடி அகற்றும் பணிகள் இடம்பெற்று வருவதாக பாதுகாப்பு உயர் அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

இதனைத் தவிர வடக்கில் தனியார் காணிகளில் அமைக்கப்பட்டுள்ள இராணுவ முகாம்கள் அகற்றப்பட்டு அவை உரிமையாளர்களிடம் வழங்கப்படவுள்ளது. இவ்வாறு அகற்றப்படும் இராணுவ முகாம்கள் அரச காணிகளில் ஸ்தாபிக்கப்படவுள்ளன. (ஸ்ரீ-2)

## வாக்காளர் இடாப்பில் பதியுமாறு வடபகுதி மக்களிடம் கோரிக்கை

வாக்காளர் இடாப்பில் தங்களை பதிவு செய்து கொள்ளுமாறு வடபகுதி மக்களிடம் தேர்தல் செயலகம் கோரிக்கை விடுத்துள்ளது.

புதிதாக வடக்கில் குடியேறியுள்ள மக்கள் தங்களை வாக்காளர் இடாப்பில் பதிந்து கொள்ளுமாறு துணைத்தேர்தல் ஆணையாளர் பீ.குகநாதன் கோரிக்கை விடுத்துள்ளார்.

அத்துடன் எதிர்வரும் நவம்பர் மாதம் 30 ஆம் திகதிக்கு முன்னதாக தங்களைப் பதிவு செய்து கொள்ளுமாறு கோரிக்கை விடுக்கப் பட்டுள்ளது.

இவ்வாண்டுக்கான வாக்காளர் பதிவு நடவடிக்கைகள் அடுத்த ஆண்டுக்குள் பூர்த்தி செய்யப்படும் எனவும் தெரிவிக்கப்படுகிறது. இதேவேளை வாக்காளர் பதிவு நடவடிக்கைகளைப் பார்வையிடும் நோக்கில் மேலதிக தேர்தல் ஆணையாளர் சிறிவர்தன அண்மையில் யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்தமை குறிப்பிடத்தக்கது.

கடந்த 2009 ஆம் ஆண்டு வாக்காளர் இடாப்பிற்கு அமைவாக யாழ்ப்பாண மாவட்டத்தில் 8 இலட்சத்து 16 ஆயிரத்து 996 வாக்காளர் காணப்படுவதாகத் தெரிவிக்கப் படுகிறது. (ஸ்ரீ-2)

# இலங்கைத் தமிழ் ஆய்வில் பெண்கள் ③

**கிளிநொச்சி இந்துக் கல்லூரியில் கடந்த 2, 3, 4 ஆம் திகதிகளில் நடைபெற்ற தமிழ் இலக்கிய விழா ஆய்வரங்கில் அருட்திரு தமிழ்நேசன் அடிகளாரால் சமர்ப்பிக்கப்பட்ட கட்டுரை இங்கு பிரசுரமாகின்றது**

இவர் ஆங்கிலத்திலும் சிறந்த புலமை மிக்கவர். சமகால அரசியல் பற்றிய ஆணித் தரமான கருத்துக்களைக்கொண்ட கட்டுரை களை அடிக்கடி ஆங்கிலப் பத்திரிகைகளில் எழுதிவரும் இவர், ஆங்கிலத்தில் "பெண் களும் சிறுகைத்தொழில்களும்", 'இடம் பெயர்ந்தோருக்கான திட்டங்கள்', 'கிழக்கிலங் கையில் மக்கள் நிறுவனங்கள்' என்பன பற்றிய ஆய்வுக் கட்டுரைகளையும் எழுதியுள் ளார்.

அவற்றைத் தமிழாக்கம் செய்து 'வறுமை யின் பிரபுக்கள்' (2002) என்ற தலைப்பில் தமிழில் நூலாக வெளியிட்டுள்ளார். அபிவி ருத்தி, கலை மற்றும் அரசியல் ஈடுபாடுகளை இவருடைய பன்முகப்பட்ட வெளிப்பாடுகளா கக் கொள்ளலாம். இதில் ஒரு அம்சமான அபிவிருத்தித்துறையில் கடந்த பன்னிரண்டு வருட அனுபவங்களின் அடிப்படையில் சமகால சமூக மாற்றங்கள் பற்றிய அவரின் கருத்தியல்கள், செயற்பாடுகள் என்பவற்றின் வெளிப்பாடாக இக்கட்டுரைத்தொகுதி அமை கின்றது. இந்நூல் பற்றி சாந்தி கூறும் வார்த் தைகள் நமது ஆழமான அவதானிப்புக் குரியதாகிறது.

"நான் கனவில் கண்டுகொண்டிருக்கும் புதிய சமூகத்தைப் பற்றிய தரிசனத்தை இந் நூல் கருத்துருவில் வெளிக்கொணர்ந்திருக் கின்றது. பங்கேற்புமுறை ஜனநாயகம், பெண் விமோசனம், மனித உரிமைகள் பேணப்படல், வறிய மக்கள் தம்மைச் சுற்றி யுள்ள வளங்களைத் தமது கட்டுப்பாட்டினுள் கொண்டு வருவதன் மூலம் தம் வாழ்வை விருத்தியடையச் செய்தல் என்கின்ற சகல வளர்ச்சிகளும் ஒன்றுடன் ஒன்று பின்னிப் பிணைந்திருக்கும். ஒன்றிலொன்று தங்கி நிற்கும் செயற்பாடாகக் காணும் தரிசனமே இது. இதை வாசிக்கும் அபிவிருத்தி ஆர்வ லர்கள் அத்தரிசனத்தைக் காண்பதுடன் மட்டும் நின்றுவிடாது, அதனை எய்துவதற்கு புத்தாக்கம் மிகுந்த உபாய மார்க்கங்களைப் பயன்படுத்தி வெற்றி அடைய வேண்டும் என்பதே எனது அவா."

'பெண்களும் தொடர்பு ஊடகங்களும்' என்னும் கட்டுரைத்தொகுப்பு நூலின் ஆசிரி யராகவும் இவர் இருக்கின்றார். தமிழிலும் ஆங்கிலத்திலும் இவர் அபிவிருத்தி தொடர் பாக எழுதிய கட்டுரைகள் பல சஞ்சிகைகளை அலங்கரித்துள்ளன.

அபிவிருத்தி மட்டுமல் லாது பல அரசியல் கட்டுரைகளையும் இலங்கையின் தமிழ் ஆங்கிலப் பத்திரிகைகளில் வெளியிட்டுள் ளார். 'தினக்கதிர்' என்ற பத்திரிகையில் 'சஞ்சயன்' என்னும் புனை பெயரில் 75க் கும் மேற்பட்ட கட்டுரைகளை எழுதியுள்ளார். பெண்ணியம் தொடர்பாக விளக்கமான பயிற்சிக்கையேடுகள் பலவற் றையும் இவர் எழுதியுள்ளார்.

**திருமதி பத்மா சோமகாந்தன்**

இலங்கையில் உள்ள பெண்ணிய ஆய் வாளர்களில் குறிப்பிடத்தக்கவராக திருமதி பத்மா சோமகாந்தன் அவர்கள் விளங்கு கிறார். இவர் ஆக்க இலக்கியப் படைப்பாளி யாக மிளிர்ந்தாலும் ஆய்வு முயற்சிகளிலும் தடம்பதித்துள்ளார்.

இந்து கலாசார அமைச்சு 2003இல் நடத்திய அகில உலக இந்து மாநாட்டில் 'தமிழ்ச் சூழலில் பெண்கள்' – என்ற கருப் பொருளில் 'நவீன காலத்துப் பெண்கள்' எனும் தலைப்பில் சமர்ப்பிக்கப்பட்ட ஆய்வுக் கட்டுரை, 'பெண்நிலைச் சிந்தனையில் இராஜம் கிருஷ்ணனின் நாவல்கள்' (பெண் கள் கல்வி ஆய்வு வட்டம் நடாத்திய கருத்த ரங்கில் வாசிக்கப் பெற்ற கட்டுரை), சுவாமி விவேகானந்தரின் இளைஞருக்கான வழி காட்டல்களும் சிந்தனைகளும்' என்ற ஆய்வுக் கட்டுரை போன்றவை இவருடைய ஆய்வு முயற்சிகளாகும்.

இதைவிட 'ஈழத்து மாண்புறு மகளிர்' (2003) என்ற தலைப்பில் இவர் எழுதிய நூலில் ஈழத்தின் 25 மகளிர் பற்றிய அரிய தகவல்களை வெளிக்கொணர்ந்துள்ளார். இந்நூல் பற்றி திருமதி பத்மா சோமகாந்தன் அவர்கள் குறிப்பிடுகையில்,

"நமது தேசத்தின் தமிழ்ப் பெண்களில் சிறுதொகையினரே பல்வேறு துறைகளிலும் ஈடுபட்டுள்ள போதிலும் தாம் ஈடுபட்டுள்ள துறைகளில் சாதனைகளை ஏற்படுத்தி வரு கின்றனர். நம் கண் முன்னால் வாழ்ந்து கொண்டிருக்கும் இவர்களது திறமைகளை எல்லோரும் அறிந்துகொள்ளவும், குறிப்பாக இளைய சமுதாயம் விளங்கிக்கொண்டு தாமும் தமது ஆற்றல்களை வளர்த்துக் கொள்ளவும், புலம் பெயர்ந்துள்ள பெருந் தொகையானோர் தெரிந்துகொள்ளவும், மற்றும் ஏனையோருக்கும் இத்தகைய தக வல்கள் ஓர் உந்துசக்தியை – தாமும் ஏதாவது சாதிக்க வேண்டுமென்ற ஆர்வத்தை – ஏற் படுத்துமென்ற திடமனத்தோடு இவை பதிவு செய்யப்பட வேண்டுமென அவாவினேன்." என்கிறார்.

இவருடைய பெண்நிலைவாதக் கருத்துக் கள் தெளிவானவை, யதார்த்தத்தை தோலு ரித்துக் காட்டுபவை.

" கல்வி அறிவு ஊட்டப்படாமையால் பெண்கள் அறியாமை, மூடத்தனம், கோழை த்தனம் முதலியவற்றில் சென்ற நூற்றா ண்டின் முற்பகுதிவரை மூழ்கிக் கிடந்தார் கள்.வேதகாலத்தில், கல்வியில் மேம்பட்டு, அக்கால அறிஞர்களுடன் வாதம் புரிந்து, தம் ஞான நிலையை நிறுவிய பெண்கள், பிரபுத்துவ காலத்தில் வெறும் கூலிகளாக , அடிமைகளாக பின்தள்ளப்பட்ட னர். பெண், வாரிசைப் பெற்றுக்கொடுக்கும் ஆணின் உடைமைப் பொருள் என்ற கருத்துக்களால் கட்டுண்ட அக்காலச் சமுதாயம் அவளை வீட்டுக்கேயுரியவளாக்கிற்று. வம்ச விருத் திக்காக குழந்தைகளைப் பெறுவது, அவர் களைப் பராமரிப்பது, சமைப் பது என அவளின் கடமைகள் வரையறுக்கப்பட்டன" என பெண்களின் அடிமைப்படுத் தப்பட்ட நிலையை விளக்குகிறார்.

**அருட்திரு தமிழ்நேசன் அடிகளார்**

" பெண்ணிலைவாதம் பற்றிய எழுச்சி இன்று உலகளாவிய ரீதியில் வெளிச்சத் திற்கு வந்துவிட்டது. அதைப் பொறுத்துக் கொள்ள முடியாத ஆணாதிக்க மூடத்தனத் தில் இருந்து வெளியே வர விரும்பாதவர்கள் சுளகினால் சூரியனை மறைக்க முயன்ற வனைப் போல நச்சுத்தனமாக கொச்சைப் பேச்சுக்களைப் பேசிக்கொண்டு நா உலரும் வரை இருக்கவேண்டியதுதான். ஒரு சொட்டுப் பச்சைத் தண்ணீரைக் கூட எந்தப் பெண்ணும் அவர்களுக்கு தூக்கிக்கொடுக்க இனி வரமாட்டாள்" என்கிற பத்மா சோம காந்தனின் வார்த்தைகளில் பெண்களுக் கான உரிமைக்குரல் ஒலிப்பதை அவதா னிக்கலாம். (தொடரும்)




பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலையின் வருடாந்த பரிசளிப்பு விழாவை இலங்கை மெதடிஸ்த திருச்சபை போதகர் அருட்திரு என்.அருள்நாதன் அடிகளார் மங்கல விளக்கேற்றி ஆரம்பிப்பதையும் மாணவிகள் தமிழ்த்தாய் வாழ்த்து இசைப்பதையும் பிரதி அதிபர் திருமதி ஐ.ஸ்ரீரங்கன் வரவேற்புரை நிகழ்த்துவதையும் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட இளைப்பாறிய அதிபர் திருமதி ஆர்.நந்தகுமார் பரிசில் வழங்குவதையும் படங்களில் காணலாம்.

## உழவு இயந்திர உரிமையாளர்கள், தொழிலாளர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறித்து ஆராய்வு

(கொழும்பு)

உழவு இயந்திர உரிமையாளர்களும், தொழிலாளர்களும் எதிர்நோக்கி வரும் நெருக்கடிகளுக்கு சாதகமான முறையில் தீர்வு காண நடவடிக்கை எடுக்கப்படுமென பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறு தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

யாழ்.மாவட்டத்திலுள்ள உழவு இயந் திரங்கள், சிறு உழவு இயந்திரங்கள் ஆகிய வற்றின் உரிமையாளர்கள், சாரதிகள் மற்றும் கல் உடைக்கும் தொழிலாளர்கள் எதிர் நோக்கி வரும் இடர்ப்பாடுகள் குறித்த கலந்து ரையாடலின் போதே அமைச்சர் மேற்கண் டவாறு தெரிவித்தார்.

இங்கு அவர் மேலும் கருத்துத் தெரிவிக் கையில்,

கடந்த காலங்களில் நாட்டிலிருந்த அசா தாரண சூழ்நிலைகளால் சிவில் நிர்வாகம் இங்கு சரியாக இயங்க முடியாத நிலையில் தற்போது நிலைமை மாறி சிவில் நிர்வாகம் நடைமுறைக்கு வந்துள்ளது.

இந்த நிலையில் சில சட்ட திட்டங்களுக்கு ஏற்றவாறே நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டு வரும் நிலையில் உழவு இயந்திர உரி மையாளர்கள், சாரதிகள் மற்றும் கல்லு டைக்கும் தொழிலாளர்களும் பாதிப்புக்குள் ளாக வேண்டிய அவல நிலை தோன்றியுள் ளது.

இருந்தபோதிலும் நீங்கள் எதிர்நோக்கி வரும் பிரச்சினைகளுக்கு உரிய அதிகாரி களுடன் கலந்துரையாடி நியாயமான சாதக மான முடிவு காணப்படுமென்றும் அமைச்சர் உறுதிபடத் தெரிவித்தார்.

அமைச்சரின் மாவட்டச் செயலகத்தில் நடைபெற்ற இந்தக் கலந்துரையாடலில் 150க்கும் அதிகமானோர் கலந்துகொண் டனர். (ஸ்ரீ)

## புதிய வரவு-செலவுத்திட்டம் துரித அபிவிருத்திக்கு அடித்தளம் இடும்

### அமைச்சர் அநுர பிரியதர்ஷன யாப்பா தெரிவிப்பு



(கொழும்பு)

நாட்டின் அபிவி ருத்தியைத் துரிதப் படுத்த அடித்தளம் இடும் வகையில் அடுத்த மாதம் பாரா ளுமன்றத்தில் சமர் ப்பிக்கப்படவுள்ள அடுத்த ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டம் அமையும் என சுற்றாடல் அமைச்சரும் அமைச்சரவைப் பதில் பேச்சாளருமான அநுர பிரியதர்ஷன யாப்பா தெரிவித்துள்ளார்.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் வாராந்த ஊடகவியலாளர் சந்திப்பு நேற்று முன்தினம் அரசாங்கத் தகவல் திணைக் களத்தில் நடைபெற்ற போதே அவர் இவ் வாறு கூறினார். ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்வியொன்றுக்கு பதிலளித்த அமைச்சர்,

இன்று நாடு முழுவதும் அபிவிருத்தி நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இவற்றை துரிதப்படுத்த அடித்தளம் இடும் வகையில் அடுத்த வரவு -செலவுத் திட்டம் அமையும்.

நாட்டில் இப்போது அமைதியான சூழல் நிலவுகிறது. இதனைக் கட்டிகாத்து பொருளா தார ரீதியிலான ஒரு முன் பாய்ச்சலுக்கு நாட்டைத் தயாராக்கும் வகையிலும் புதிய வரவு -செலவு திட்டம் அமையும் என்றும் கூறினார். (ஸ்ரீ-2)

# அடுத்த வருடத்திற்கான பாடநூல்கள் வடக்கு கிழக்குக்கு அனுப்பி வைப்பு

## கல்வி வெளியீட்டு திணைக்கள ஆணையாளர் தெரிவிப்பு

(கொழும்பு)

அடுத்த வருடத்திற்கு தேவையான பாட நூல்களில் 45 சதவீத மானவை வடக்கு கிழக்கு உட்பட்ட பல பாகங்களுக்கும் விநியோகிக்கப்பட்டுள்ளதாக கல்வி வெளியீட்டு திணைக்கள ஆணையாளர் டபிள்யூ. எம்.என்.ஜே. புஸ்ப குமார தெரிவித்துள்ளார்.

நாட்டின் சகல பாடசாலைகளின் அதிபர்களினால் கோரப்பட்ட கோரிக்கைக்கு அமைய இந்த புத்தகங்கள் அனுப்பப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளதுடன் தமிழ், சிங்களம் மற்றும் ஆங்கில மொழிகளிலான சுமார் 364 வகை புத்தகங்கள் இந்த முறை அச்சிடப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

மொத்தமாக சுமார் 34 மில்லியன் புத்தகங்கள் அச்சிடப்பட்டுள்ளதாகவும் இவற்றுக்கென சுமார் 3000 மில்லியன் ரூபாய் செலவிடப்பட்டுள்ளதாகவும் ஆணையாளர் மேலும் தெரிவித்துள்ளார். (ஸ்ரீ-2)

# இலங்கை அகதிகள் தொடர்பில் கனேடிய பல்கலைக்கழகத்தில் திறந்த விவாதம்

கனடா சென்றுள்ள இலங்கை அகதிகள் தொடர்பில் விவாதிப்பதற்காக கனடாவின் வில்ஃபர்ட் லோரியா பல்கலைக்கழகம் நிபுணர் குழு ஒன்றை நியமித்துள்ளது.

இந்த குழு நாளை மறுதினம் பல்கலைக்கழகத்தில் திறந்த விவாதம் ஒன்றை நடத்தவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. பாரிய அகதிவருகையும் வெளிநாட்டு நடவடிக்கை மற்றும் கனடாவின் பொறுப்பு என்ற தொனிப் பொருளில் இந்த விவாதம் நடைபெற வுள்ளது.

இதன் போது அகதிகளால் ஏற்படுகின்ற தேசிய பாதுகாப்பு பிரச்சினைகள், குடிவரவு சட்ட மீறல்கள், ஆட்கடத்தல்காரர்களின் நடவடிக்கைகள் என்பன குறித்து கலந்துரையாடப்படவுள்ளன. இதில் 5 முக்கிய நிபுணர்கள் இணைக்கப் பட்டுள்ளனர். கனேடிய அகதிகள் கொள்கை மற்றும் மாற்றங்கள் என்ற தொனிப் பொருளில் அரசியல் துறை பேராசிரியர் கிரிஷ் அன்டர்சன் கருத்து வெளியிடவுள்ளார்.

கனேடிய ஊடக பொறுப்புக்கள் என்பதன் கீழ் வில்பேர்ட் பல்கலைக் கழகத்தின் சமயக்கல்வி பேராசிரியர் அமர்நாத் அமரசிங்கம் கருத்துரைக்கவுள்ளார். தமிழ் காங்கிரசின் சட்டத்தரணி, ரியர்சன் பல்கலைக் கழகத்தின் அரசியல் துறை பேராசிரியர் அபர்னா சுந்தர் மற்றும் எலிஸ்டார் எட்ஜர் என்ற ஐக்கிய நாடுகள் முறைமையின் பணிப்பாளர் ஆகியோர் இதில் கலந்து கொள்ளவுள்ளனர். அவர்கள் இலங்கையின் இறுதி யுத்தம் தொடர்பில் தமது கருத்துக்களை முன்வைக்கவுள்ளதாக இணையத்தள தகவல்கள் தெரிவிக்ககின்றன. (ஸ்ரீ-2)

# நாட்டில் மார்பகப் புற்றுநோயால் பாதிக்கப்பட்டுள்ளோர் அதிகரிப்பு

(கொழும்பு)

நாட்டில் மார்புப் புற்றுநோய் உள்ளவர்களின் எண்ணிக்கை கடந்த 2001 ஆம் ஆண்டிற்குப் பின்னர் அதிகரித்து வந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. மஹரகம தேசிய புற்றுநோய் தொடர்பான நிபுணர் நீலமணி பானகம இந்தத் தகவலை வெளியிட்டுள்ளார்.


இலங்கை மக்களில் ஒரு இலட்சம் மக்களுள் 18.7 சதவீதமான பெண்களுக்கு மார்பகப் புற்று நோய் இருப்பதாக கண்டறியப்பட்டுள்ளது.

எதிர்வரும் 25 ஆம் திகதி அனுஷ்டிக்கப் படவுள்ள சர்வதேச புற்று நோய் எதிர்ப்புத் தினத்தை முன்னிட்டு கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்வொன்றின் போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

பெரும்பாலும் 50 வயதைத் தாண்டிய பெண்களே இதனால் பாதிக்கப்படுகின்றனர். கடந்த 2005 ஆம் ஆண்டு இறுதியாக மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளின் அடிப்படையில் ஆயிரத்து859 பேருக்கு இந்த நோய் இருப்பதாகத் தெரிவிக்கப் படுகிறது. (ஸ்ரீ-2)

# நெருக்கடியான நிலைமைகளின் போது இந்தியா காத்திரமான ஒத்துழைப்பு

## அமைச்சர் பீரிஸ் சுட்டிக்காட்டு




நெருக்கடியான நிலைமைகளின் போது இந்தியா காத்திரமான ஒத்துழைப்புக்களை இலங்கைக்கு வழங்கியதாக வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

இறுதிக் கட்ட யுத்தத்தின் போது இந்திய அரசாங்கம் நேரடியாகவும் மறைமுகமாகவும் வழங்கிய ஆதரவினையே அமைச்சர் இவ்வாறு குறிப்பிடுவதாக ஆங்கில ஊடகம் சுட்டிக் காட்டியுள்ளது.

நான்காம் ஈழப்போரின் போது இந்தியா காத்திரமான வழிகளில் ஒத்துழைப்பு வழங்கியதாகவும் இரண்டு நாடுகளுக்கும் இடையில் நீண்ட காலமாக உறவு நீடித்து வருவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் இந்திய வெளிவிவகார அமைச்சரை சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார். யுத்தத்தின் போது இடம்பெயர்ந்த 2 இலட்சத்து 97 ஆயிரம் பேரில் தற்போது 20 ஆயிரம் பேர் மட்டுமே இடம் பெயர் முகாம்களில் எஞ் சியிருப்பதாக அமைச்சர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை உள்துறை அமைச்சர் பா. சிதம்பரம் மனித வள அபிவிருத்தி அமைச்சர் கபில் ஷிபால் வர்த்தக அமைச்சர் ஆனந் சர்மா மற்றும் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் சிவ் சங்கர் மேனன் ஆகியோரை அமைச்சர் பீரிஸ் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்த உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ஸ்ரீ-2)



வடமராட்சி கல்வி வலய முறைசாராப் பிரிவினால் யா/வேலாயுதம் மகாவித்தியாலயத்தில் அமைக்கப்பட்ட பருத்தித்துறை சமூக கற்கை நிலைய கண்காட்சி கூடத்தை வடமராட்சி வடக்கு பிரதேச செயலர் இரா. வரதீஸ்வரன் நாடா வெட்டி திறந்து வைப்பதையும் அருகில் வடமராட்சி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் (நிர்வாகம்) செ.உதயகுமார் நிற்பதையும் படத்தில் காணலாம்.

(படம்:- அல்வாய் நிருபர்)




- 1775-ஐக்கிய அமெரிக்காவில் மேய்ன் மாநிலத்தின போர்ட்லண்ட் நகரம் பிரித்தானியரால் எரிக்கப்பட்டது.
- 1781-ஜோர்ஜ் வோஷிங்டன் வேர்ஜீனியாவின் யோர்க்டவுன் நகரைக் கைப்பற்றினார்.
- 1793 - பிரெஞ்சுப் புரட்சி: பிரான்சின் பதினாறாம் லூயி மன்னனின் மனைவி மரீ அண்டொனெட் கழுத்து வெட்டி மரணதண்டனைக்குட்படுத்தப்பட்டாள்.
- 1799 -பாஞ்சாலங்குறிச்சி மன்னன் கட்டபொம்மன் ஆங்கிலேயரால் தூக்கிலிடப்பட்டான்.
- 1813 - ஆறாவது கூட்டணி நாடுகள் நெப்போலியன் பொனபார்ட் மீது லீப்சிக் நகரில் தாக்குதலை ஆரம்பித்தன.
- 1834 - லண்டன் வெஸ்ட்மின்ஸ்டர் அரண்மனையின் தொன்மைப் பொருட்கள் பல எரிந்து சேதமடைந்தன.
- 1905 - ரஷ்ய இராணுவம் எஸ்தோனியாவில் மக்கள் கூட்டமொன்றின் மீது சுட்டதில் 94 பேர் கொல்லப்பட்டனர்.
- 1905 - பிரித்தானிய இந்தியாவில் வங்காளப் பிரிப்பு இடம்பெற்றது.
- 1923 -வால்ட் டிஸ்னி நிறுவனம் ஆரம்பிக்கப்பட்டது.
- 1934 - குவோமின்டாங்குகளுக்கு எதிரான சீனக் கம்யூனிஸ்டுக்களின் தாக்குதல் ஆரம்பமானது.
- 1939 - இரண்டாம் உலகப் போர்: பிரித்தானியா மீதான ஜெர்மனிய வான் படையின் முதலாவது தாக்குதல் இடம்பெற்றது.
- 1942 - பம்பாயில் இடம்பெற்ற வெள்ளப் பெருக்கில் 40ஆயிரம் பேர் கொல்லப்பட்டனர்.
- 1949 - கிரேக்க கம்யூனிசத் தலைவர் நிக்கலாஸ் சக்காரியாடிஸ் தற்காலிக போர்நிறுத்தத்தை அறிவித்தார். கிரேக்க உள்நாட்டுப் போர் முடிவுக்கு வந்தது.
- 1964 - மக்கள் சீனக் குடியரசு தனது முதலாவது அணுவாயுதச் சோதனையை மேற்கொண்டது.
- 1973 - ஹென்றீ கிசிங்கர், லே டுக் தோ அமைதிக்கான நோபல் பரிசு பெற்றனர்.
- 1975 - கிழக்குத் தீமோரில் அவுஸ்திரேலிய தொலைக்காட்சி ஊடகவியலாளர்கள் ஐந்து பேர் இந்தோனேசியப் படைகளினால் சுட்டுக் கொல்லப்பட்டனர்.
- 1984 - தென்னாபிரிக்காவின் டெஸ்மண்ட் டூடு அமைதிக்கான நோபல் பரிசு பெற்றார்.
- 1987 - தெற்கு இங்கிலாந்தில் இடம்பெற்ற சூறாவளியில் 23 பேர் கொல்லப்பட்டனர்.
- 1996 - குவாத்தமாலாவில் உதைப்பந்தாட்டப் போட்டி நிகழ்வில் ஏற்பட்ட நெரிசலில்சிக்கி 84 பேர் கொல்லப்பட்டனர்.
- 1998 - சிலியின் முன்னாள் சர்வாதிகாரி ஆகுஸ்டோ பினொச்சே லண்டனில் கைது செய்யப்பட்டார்.
- 2003 - தமிழ் விக்கிப்பீடியாவில் முதலாவது கட்டுரை சிரின் எபாடி பற்றி எழுதப்பட்டது.
- 2006 - ஈழப்போர்: இலங்கை, ஹபரணையில் நடத்தப்பட்ட தற்கொலைக் குண்டுத்தாக்குதலில் 102 கடற்படையினர் கொல்லப்பட்டனர்.
- 2006 - இலங்கையில் 1987 இல் இலங்கை-இந்திய ஒப்பந்தத்தை அடுத்து இணைக்கப்பட்டிருந்த வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் இணைப்பு செல்லுபடியற்றது என்று இலங்கை உயர் நீதிமன்றம் அறிவித்தது.

### பிறப்புகள்

- 1854 - ஆஸ்கார் வைல்டு, ஐரிய எழுத்தாளர் (இ. 1900)
- 1963 - சூசை, கடற்புலிகளின் தலைவர்
- 1975 - ஜாக் காலிஸ், தென்னாபிரிக்கத் துடுப்பாட்டக்காரர்

### இறப்புகள்

- 1799 - கட்டபொம்மன், பாஞ்சாலங்குறிச்சி மன்னன் (பி. 1760)
- 1951 - லியாகட் அலி கான், பாகிஸ்தானின் முதலாவது பிரதமர் (பி. 1896)

**1951 - பாகிஸ்தானின் முதலாவது பிரதமர் லியாகட் அலி கான் ராவல்பிண்டியில் சுட்டுக் கொல்லப்பட்டார்.**



# பாகிஸ்தானின் அணு ஆயுதங்கள் பயங்கரவாதிகளிடம் சிக்கும் அபாயம்!

## அமெரிக்க அமைப்பு எச்சரிக்கை

பாகிஸ்தானிடம் உள்ள அணு ஆயுதங்கள் பயங்கரவாதிகளிடம் சிக்கும் அபாயம் உள்ளது என்று அமெரிக்காவின் ஆய்வறிக்கை எச்சரித்துள்ளது.

அணு ஆயுதங்கள் பத்திரமாக உள்ளதாக பாகிஸ்தான் தொடர்ந்து உறுதிமொழி அழித்து வந்தபோதிலும் பயங்கரவாதிகளிடம் சிக்குவதற்கான ஆபத்து உள்ளது என்று அமெரிக்கா தொடர்ந்து எச்சரித்து வருகின்றது.

இப்போது அமெரிக்க நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு ஆய்வறிக்கை அளிக்கும் அமைப்பு சி.எஸ்.ஆர் இந்த அறிக் கையை அளித்துள்ளது.


பாகிஸ்தானில் நிலவும் அரசியல் ஸ்திரமற்ற நிலை காரணமாக அந்த நாட்டு அரசியல் தலைவர்கள் அளிக்கும் உறுதிமொழியின் நம்பகத்தன்மை கேள்விக்குறியாக உள்ளது.

பாகிஸ்தானில் செயல்படும் பயங்கரவாதிகள் கையில் அணு ஆயுதங்கள் சிக்கும் அபாயம் உள்ளது. பயங்கரவாதிகளின் ஆதரவாளர்களிடம் அணுசக்தி தொழில்நுட்பம் சென்றாலும் அதன் மூலம் பயங்கரவாதிகளுக்கு அணு ஆயுதம் கிடைக்கும் அபாயங்கள் உள்ளது என்று அவ்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மொத்தம் 24 பக்கங்கள் கொண்ட இந்த அறிக்கையில் பாகிஸ்தானிடம் 60 அணு குண்டுகள் இருப்பதாகத் தெரிகிறது. இதை விட கூடுதல் எண்ணிக்கையில்தான் இருக்கக் கூடும் என்று அறிக்கையில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. (ஸ்ரீ-2)

# பாகிஸ்தான் பிரதமரையும் அமைச்சரையும் கொல்லச் சதி

## 7 பயங்கரவாதிகள் கைது



(லாகூர்)

பாகிஸ்தான் பிரதமர் கிலானி, வெளியுறவு அமைச்சர் ஷா மெஹ்மூத் குரேஷி ஆகியோரைக் கொல்ல சதி செய்ததாக 7பயங்கரவாதிகளை அந்நாட்டுப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இவர்கள் அனைவரும் தடை செய்யப்பட்ட தெஹ்ரி -இ-தலிபான் பாகிஸ்தான் அமைப்பைச் சேர்ந்தவர்கள்.

இது குறித்து, பொலிஸ் உயரதிகாரிகள் கூறுகையில், மூல்தான் நகருக்கு பிரதமர் கிலானி, வெளியுறவு அமைச்சர் ஷா மெஹ் மூத் குரேஷி ஆகியோர் வரும் போது அவர்களை கொலை செய்ய இந்தப் பயங்கரவாதிகள் திட்டமிட்டுள்ளனர்.

பிரதமருக்கும் அமைச்சருக்கும் மூல்தான் நகர் தான் சொந்த ஊர். இதனால் அவர்கள் அங்கு அடிக்கடி வருவது வழக்கம். இதனை தங்களுக்குச் சாதகமாக பயன்படுத்திக் கொள்ள பயங்கர வாதிகள் திட்டமிட்டுள்ளனர்.

பயங்கரவாதிகள் பதுங்கியிருப்பதாக கிடைத்த தகவலையடுத்து பஞ்சாப் மாகாண பொலிஸார் அஹ் மத்பூர் கிராமத்தில் நேற்று முன்தினம் சோதனை மேற்கொண்டனர். அப்போது அங்கு பதுங்கியிருந்த பயங்கரவாதிகள் பிடிபட்டனர். அவர்களிடம் நடத்திய விசாரணையில் அவர்கள் பெரியளவில் சதித்திட்டம் தீட்டியிருந்தது தெரிய வந்தது.

பாகிஸ்தானில் நடைபெற்ற பல்வேறு குண்டு வெடிப்புச் சம்பவங்களிலும் ஷியா பிரிவு தலைவர்கள் கொலைகளிலும் இந்தப் பயங்கரவாதிகளுக்கு தொடர்பு உண்டு.

கடந்த ஆண்டுமூல்தான் நகரில் ஐ.எஸ். ஐ அலுவலகத்தில் குண்டு வைத்து 12 பேரை கொன்றதும் இந்தப் பயங்கரவாதிகள் தான் என்று பொலிஸார் தெரிவித்தனர். (ஸ்ரீ-2)






சிலி நாட்டில் சுரங்கத்திலிருந்து மீட்கப்பட்ட 33 பேருடன் அந்நாட்டு ஜனாதிபதி செபஸ்டியன் பினீரா பத்திரிகையாளர்கள் மத்தியில் நிற்பதைக் காணலாம்

# ஒபெக்கின் தலைமைப் பொறுப்பை ஈரான் ஏற்றுக் கொண்டுள்ளது



பெற்றோலிய பொருள் ஏற்றுமதி நாடுகளின் முதன்மை நிறுவனமாகக் கருதப்படும் ஒபெக் அமைப்பின் தலைமைப் பொறுப்பை ஈரான் ஏற்றுக்கொண்டுள்ளது.

கடந்த 36 வருடங்களில் முதல் தடவையாக ஒபெக் அமைப்பின் தலைமைப் பொறுப்பு ஈரானுக்கு வழங்கப்பட்டுள்ளதுடன் ஈரானிய எண்ணெய் வள அமைச்சர் மாசூட் மிர் காசீமி ஒபெக் அமைப்பின் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார்.

ஒபெக் அமைப்பில் 12 முக்கிய பெற்றோலிய உற்பத்து நாடுகள் அங்கம் வகிக்கின்றன. அடுத்த ஆண்டு ஜனவரி முதல் ஒபெக் அமைப்பின் தலைமைப் பொறுப்பை ஈரான் ஏற்றுக்கொள்ளவுள்ளது. இதேவேளை இதன் தற்போதைய தலை மைப் பொறுப்பை ஈக்வடோர் வகித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ-2)

# ஐந்து வருடங்களில் 77ஆயிரம் ஈராக்கியர்கள் கொலை

## அமெ.இராணுவம் தகவல்

ஈராக்கில் கடந்த 5 வருட காலத்தில் சுமார் 77 ஆயிரம் ஈராக்கியர்கள் கொல்லப்பட்டுள்ளதாக அமெரிக்க இராணுவம் கணக்கிட்டுள்ளது. இந்த எண்ணிக்கையில் பொதுமக்கள் மற்றும் இராணுவத்தினர் உள்ளடங்குகின்றனர். இதுவரை அமெரிக்க இராணுவத்தினால் வெளியிடப்பட்ட கணக்கெடுப்புக்களில் இது மிகவும் விரிவானதென தெரிவிக்கப்படுகின்றது.

இக்கணக்கெடுப்பு கடந்த 2004 ஆம் ஆண்டு ஜனவரி முதல் 2008 ஓகஸ்ட் வரையுள்ள காலப்பகுதிக்குரியது எனக் கூறப்படுகின்றது.

இதுவே ஈராக்கின் இருளடைந்த காலப் பகுதியாகக் கருதப்படுகின்றது. ஆனால், ஈராக்கிய மனித உரிமைகள் அமைச்சு, கடந்த வருடம் வெளியிட்ட கணக்கெடுப்பில் 85 ஆயிரத்து 694 பேர் கொல்லப்பட்டார்கள் எனத் தெரிவித்திருந்தது.

(ஸ்ரீ-2)

# மொரீஷியஸின் 2 தீவுகள் இந்தியாவிடம் ஒப்படைப்பு?



இந்தியப் பெருங்கடலில் உள்ள நாடான மொரீஷியஸ் இந்தியாவிடம் 2 அழகிய தீவுகளை ஒப்படைக்க உள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

இந்திய பெருங்கடலின் கிழக்குப் பகுதியில் உள்ள அந்தமான் நிக்கோபார் தீவுகள் மேற்குப்பகுதியில் உள்ள இலட்சத்தீவுகள் இப்போது இந்தியாவிடம் உள்ளன.

இந்த நிலை இந்தியா பெருங்கடலில் அகலோக என்ற 2தீவுகளை மொரீஷியஸ் நிர்வகித்து வருகிறது. எனினும் ஆபிரிக்காக் கண்டத்தில் இடம்பெற்றுள்ள அந்நாட்டில் இருந்து அகலோகா தீவுகள் சுமார் ஆயிரத்து100 கி.மீ.தூரத்தில் உள்ளன. ஆனால் இந்தியாவில் இருந்து தூரம் அதைவிடக் குறைவு.


அத்துடன் அகலேகா தீவுகள் மீது மொரீஷியஸ் அதிக கவனம் செலுத்தவில்லை அங்கு செல்லும் மொரீஷியஸ் மக்கள் தங்கள் சொந்த ரிஸ்கில் செல்லவே அனுமதிக்கிறது. அங்கு குறைந்த அளவே மக்கள் குடியேறி தங்கள் தேவைக்கு மட்டும் விவசாயம் செய்கின்றனர்.

இந்நிலை அழகிய அகலோகா தீவுகள் விமான நிலையம் உட்பட அனைத்து வசதி ஏற்படுத்தி சுற்றுலா மையங்களாக நிர்வகித்து மொரீஷியஸ் அரசிடம் இந்தியா விருப்பம் தெரிவித்தது.

இது தொடர்பாக கடந்த 5 ஆண்டுக்கு முன்பே பேச்சு நடந்தது. எனினும் மொரீஷியஸ் அரசியலில் நிலவிய எதிர்ப்பு காரணமாக அதில் இழுபறி ஏற்பட்டது.

இந்நிலையில் அகலேகா தீவுகளை நீண்டகால குத்தகை அடிப்படையிலே அல்லது நிரந்தர கட்டுப்பாட்டு உரிமைக்காகவோ இந்தியாவிடம் ஒப்படைக்க மொரீஷியஸ் அரசு தயாராகி வருவதாக தகவல்கள் வெளியாகி உள்ளது. அது நடந்தால் இந்திய பெருங்கடலில் இந்தியா வசமுள்ள தீவுகள் எண்ணிக்கை அதிகரிக்கும்.

ஏற்கனவே அந்த பகுதியில் அவுஸ்திரேலியா, பிரான்ஸ், மலேசியா, இந்தோனேசியா, அமெரிக்கா நாடுகளுக்கு தீவுகள் இருக்கின்றன. (ஸ்ரீ-2)



நெதர்லாந்து ஹாக் நகரில் அந்நாட்டு புதிய பிரதமர் மார்க் ரூட் (இடது) மற்றும் முன்னாள் பிரதமர் ஜோன் பீட்டர் (வலது) ஆகியோர் பிரதமர் மாளிகையில் சந்தித்து கலந்துரையாடினர்.

# எதிர்பார்ப்பை ஏற்படுத்தியுள்ள ஒபாமாவின் இந்தியப் பயணம்

## அமெரிக்காவுக்கான இந்தியத்தூதுவர் தெரிவிப்பு

(வோஷிங்டன்)

அமெரிக்க ஜனாதிபதி ஒபாமாவின் இந்தியப் பயணம் மிகுந்த எதிர்பார்ப்பை ஏற்படுத்தியுள்ளது. இரு நாடுகளிடையிலான உறவில் ஒபாமாவின் பயணம் புதிய அத்தியாயமாக இருக்கும் என்று அமெரிக்காவுக் கான இந்திய தூதுவர் மீரா சங்கர் தெரிவித்தார்.

ஜோர்ஜ் வோஷிங்டன் பல்கலைக்கழக மாணவர்களிடம் பேசிய அவர், ஒபாமாவின் இந்தியப் பயணம் இரு நாடுகளிடையிலன உறவை மேலும் வலுப்படுத்துவதோடு, அணைத்துத்துறைகளிலும் இணைந்து செயல்படுவதற்கான வாய்ப்புகளைப் பிரகாரசப் படுத்தியுள்ளது. இரு நாடுகளின் நலன் மட்டுமன்றி, சர்வதேச அளவில் பயன் பெறும் வகையில் ஒபாமாவின் இந்தியப் பயணம் அமையும். இருநாடுகளில் நிலவும் உறுதியான அரசியல் சூழல் இதற்கு உறுதுணையாக உள்ளது. பொதுவாக இரு நாடுகளும் பயனடையும் விடயங்களில் கவனம் செலுத்துவதோடு, புதிதாக உருவெடுக்கும் சர்வதேச அச்சுறுத்தல் மற்றும் சவால்களைச் சேர்த்து சமாளிப்பது குறித்தும் உத்திகள் வகுக்கப் படும்.

எதிர்காலத்தில் சேர்ந்து செயற்படும் துறைகளைக் கண்டறிந்து அதற்குரிய உத்திகளை வகுக்கவும் இந்தப் பயணம் உதவிகரமாக அமையும். ஆப்கானிஸ்தான் மற்றும் பாகிஸ்தான் குறித்து அமெரிக்காவும் இந்தியாவும் தொடர்ந்து கருத்துக்களைப் பரிமாறிக்கொண்டு வருகிறது. இதுதவிர, தெற்காசியப் பிராந்தியத்தில் ஏற்படும் நிகழ்வுகள் குறித்த பரிமாற்றமும் அவ்வப்போது மேற்கொள்ளப்படுகிறது.

கிழக்கு ஆசியா குறித்துப் பேச்சுவார்த்தை நடத்த முடிவு செய்யப்பட்டுள்ளது. இதன் மூலம் ஆசியான் நாடுகளிடையே பொருளாதாரம் மற்றும் பாதுகாப்பு கட்டமைப்புக்கள் குறித்து தகவல் பரிமாறவும்,அதை வலுப் படுத்துவது குறித்தும் ஆராயப்படும். இரு நாடுகளும் இணைந்து ஆபிரிக்காவை மேம்படுத்துவது குறித்தும் விரிவாக பேசப்படும்.

இருநாடுகள் மட்டுமே சார்ந்த விடயங்கள் அல்லது சர்வதேச சமூகத்தைக் காக்கும் பணிகளில் இணைந்து செயல்படுவது குறித்து ஆராயப்படும். குறிப்பாக கடல்பாதுகாப்பு, அதிகரித்து வரும் இணையத்தள மோசடி, குற்றங்களைத் தடுப்பது குறித்தும் இரு நாடுகளும் விவாதிக்கும்.

இந்தியா மற்றும் அமெரிக்கா இடையிலான உறவின் புதிய பரிமாணமாக ஆக்க பணிகளில் அணுசக்தியை பயன்படுத்துவதற்கான ஒப்பந்தம் கையெழுத்தாகியுள்ளதுடன் இருநாடுகளிடையிலான கூட்டு முயற்சியில் இதுவரை அணுசக்தித் துறையிலான ஒத்துழைப்பு இல்லாமல் இருந்தது. அணு சக்தி ஒப்பந்தம் கையெழுத்தானதால் அத்துறையிலும் இனி இருநாடுகளும் கூட்டாக ஈடுபடும் வாய்ப்பு பிரகாசமடைந்துள்ளது.

அமெரிக்க நிறுவனங்களுடன் இணைந்து அணு மின் நிலையங்களுக்குத் தேவையான அணு உலைகளைத் தயாரிப்பதற்கான வர்த்தக ரீதியலான பேச்சுவார்த்தை விரைவில் தொடங்கும். இதேபோல இந்திய விண்வெளி ஆய்வில் அமெரிக்காவுடனான கூட்டு புதிய அத்தியாயத்தை ஏற்படுத்த உதவும்.

நீராதாரம்,பருவநிலை நிலவரம் , வானியல் ஆய்வு,விமான சேவை உள்ளிட்டவற்றில் இணைந்து செயல்படுவதற்கான வாய்ப்பு அதிகரித்துள்ளது. மேலும் ஐக்கிய நாடுகள் பாதுகாப்புக் கவுன்சில் நிரந்தர உறுப்பினர் இடத்தைப் பிடிக்க இந்தியாவுக்கு அமெரிக்க உதவும். இதற்காக பாதுகாப்பு கவுன்சில் விரிவாக்க நடவடிக்கையை அமெரிக்கா ஏற்றும் என நம்புவதாக மீரா சங்கர்கூறினார். (ஸ்ரீ-2)

## சீனாவும் பாகிஸ்தானும் இந்தியாவின் பாதுகாப்புக்கு மிகப்பெரிய அச்சுறுத்தல்

### இந்திய இராணுவத் தளபதி தெரிவிப்பு

(டில்லி)

இந்தியாவின் பாதுகாப்பிற்கு சீனாவும் பாகிஸ்தானும் மிகப் பெரிய அச்சுறுத்தலாக விளங்குவதாக இராணுவத் தலைமை தளபதி வி.கே.சிங். தெரிவித்துள்ளார்.

அண்மைக்காலமாக காஷ்மீரில் பாகிஸ்தான் தீவிரவாதிகள் தொடர்ந்து ஊடுருவி வருகின்றனர். இதேபோல அருணாசலத்தில் சீனப் படைகள் அத்துமீறி நுழைந்திருப்பதுடன் அப்பகுதி தங்களுக்கு சொந்தம் என்றும் பிரசாரம் செய்து வருகிறது.

இந்நிலையில் செய்தியாளர்களிடம் பேசிய இந்திய இராணுவத் தலைமை தளபதி வி.கே. சிங் நாட்டின் பாதுகாப்பிற்கு சீனாவும் பாகிஸ்தானும் மிகப் பெரிய அச்சுறுத்தலாக இருப்பதாக குற்றம் சாட்டியுள்ளார்.

இதனால் இதற்கான நடவடிக்கை விரைவில் எடுக்கப்பட வேண்டும் என்பதும் மிக அவசியமானது என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ஸ்ரீ-2)



பொதுநலவாய விளையாட்டு போட்டியின் நிறைவு விழா நிகழ்ச்சியில் பங்கேற்க இந்தியா வந்த இலங்கை ஜனாதிபதியை கண்டித்து, காந்திரபும் தமிழ்நாடு விடுதி முன்பு நேற்று முன்தினம் ஆர்ப்பாட்டம் செய்த ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ கைது செய்யப்பட்டார்.

# காஷ்மீரில் மீண்டும் ஊரடங்கு; 6 மாவட்டங்களில் பதற்றம்



(ஸ்ரீநகர்)

காஷ்மீர் மாநிலத்தில் 3 மாதமாக நடந்த கலவரத்தை அடுத்து அங்கு தொடர்ந்து ஊரடங்கு உத்தரவு பிறக்கப்பட்டு வந்தது. மத்திய அரசு எடுத்த சமரச முயற்சிகளை அடுத்து ஓரளவு அமைதி திரும்பியது. இதனால் 3 வாரங்களுக்கு முன்பு ஊரடங்கு உத்தரவு வாபஸ் பெறப்பட்டது.

இதற்கிடையில் பிரிவினைவாத அமைப்பினர் போராட்டம் அறிவித்ததால் ஒருநாள் மட்டும் ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டு பின்னர் வாபஸ் பெறப்பட்டது.

நேற்று தொழுகை தினத்தை ஒட்டி பொது மக்கள் ஏராளமானோர் தெருவில் கூடினர். இதனால் வன்முறை வெடிக்கலாம் என்ப தால் ஸ்ரீநகர் உள்ளிட்ட 6 மாவட்டங்களில் மீண்டும் ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டு உள்ளது. ஸ்ரீ நகரில் 6 பொலிஸ் நிலைய எல்லைக்கு உட்பட்ட பகுதிகளில் மட்டும் ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப் பட்டுள்ளது.

இந்தப் பகுதிகளில் பொலிஸார் ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றனர். மக்கள் யாரும் வெளியே வரவேண்டாம் என்று ஒலிபெருக்கி மூலம் அறிவிப்பு செய்தனர்.

இதற்கிடையே பாம்போர் என்ற இடத்தில் கடந்த 7 ஆம் திகதி நடந்த பொலிஸ் தாக்குதலில் காயம் அடைந்த குலாம் நபிமிர் என்பவர் நேற்று முன்தினம் சிகிச்சை பலனின்றி உயிர் இழந்தார். இதனால் அந்த பகுதியில் பதற்றம் நிலவுகிறது. இவருடன் சேர்த்து காஷ்மீர் கலவரத்தில் இறந்தவர்களின் எண்ணிக்கை 106 ஆகியுள்ளது. (ஸ்ரீ-2)

# நைஜீரியாவில் இந்திய ஆசிரியை கடத்தல்

(லாகோஸ்)

ஆபிரிக்க நாடான நைஜீரியாவில் உள்ள எகேத் என்ற இடத்தில் எண்ணெய் கிணறு நிறுவனம் உள்ளது. இந்த நிறுவனம் பாடசாலை ஒன்றையும் நடத்தி வருகிறது. இதன் தலைமை ஆசிரியராக இந்தியப் பெண் பணியாற்றி வந்தார்.

இவர் அந்த பகுதியில் ஜீப்பில் சென்று கொண்டிருந்த போது துப்பாக்கியுடன் வந்த மனிதர்கள் ஜீப் சாரதி மற்றும் பாதுகாப்புக்கு சென்ற பொலிஸ்காரர் ஆகியோரை சுட்டுக் கொன்றனர்.


பின்னர் தலைமை ஆசிரியை கடத்தி சென்று பணம் பறிப்பது வழக்கம். எனவே இவரையும் அவர்கள்தான் பணம் பறிப்பதற்காக கடத்திச் சென்றனர். அவர் கதி என்னவென்று தெரியவில்லை. கடத்தியவர்கள் தீவிரவாதிகளா? அல்லது ரவுடிக் கும்பலா ? என்று தெரியவில்லை.

நைஜீரியாவில் ரவுடிக் கும்பல் ஆட்களைக் கடத்திச் சென்று பணம்பறிப்பது வழக்கம். எனவே இவரையும் அவர்கள்தான் பணம் பறிப்பதற்காக கடத்திச் சென்றிருக்கலாம் என கருதப் படுகிறது.

அவரை மீட்க நைஜீரிய பொலிஸார் தேடுதல் வேட்டையில் ஈடுபட்டுள்ளனர்.

கடந்த மாதம் நைஜீரியாவில் 15 மாணவர்களை ரவுடி கும்பல் கடத்தி சென்று பணம் கேட்டு மிரட்டியது. 5 நாட்களுக்கு பின் பொலிஸார் அவர்களை பத்திரமாக மீட்டனர்.(ஸ்ரீ-2)

# விஜய் மல்லையாவுக்கு விருது



(லண்டன்)

மாநிலங்களவை உறுப்பினரும் தொழிலதிபருமான விஜய் மல்லையாவுக்கு சிறந்த தொழில திபருக்கான சர்வதேச விருது வழங்கப் பட்டுள்ளது. இந்த ஆண்டின் சிறந்த வர்த்தக தலைவர் விருதை ஜிஜி2 சர்வதேச அமைப்பு வழங்கியுள்ளது.

லண்டனில் நடைபெற்ற விழாவில் பல்வேறு சமூகம் மற்றும் பிற நாடுகளைச் சேர்ந்தவர்களுக்கு இவ்விருது வழங்கப்பட்டது. யுபி குழுமத்தை மிகச் சிறப்பாக செயல்படுத்தி வருவதற்காகக மல்லையாவுக்கு இவ்விருது வழங்கப்பட்டுள்ளது.

லண்டனைச் சேர்ந்த ஹோட்டல் அதிபர் ஜோகிந்தர் சாங்கேருக்கு சுற்றுலா மேம்பாட்டுக்கு பாடுபட்டதற்காக விருது வ்ழங்கப் பட்டது.

(ஸ்ரீ-2)




# தலைமன்னாரிலுள்ள படகுகளை மீட்க 17 தமிழக மீனவர்கள் இலங்கை வருகை

(இராமேஸ்வரம்)

தலைமன்னாரில் உள்ள இரு படகுகளை மீட்பதற்றகாக இராமேஸ்வரம் மீனவர்கள் 17 பேர் இலங்கைக்கு நேற்று முன்தினம் இலங்கை வருகை தந்துள்ளனர்.

இராமேஸ்வரத்திலிருந்து ஜுலை 17 ஆம் திகதி மீன் பிடிக்கச் சென்ற செல்லத்துரை என்பவருக்கு சொந்தமான விசைப்படகை இலங்கை மீனவர்கள் வெடிகுண்டு வீசி கடலில் மூழ்கடித்தனர். இப்படகை மீட்கச் சென்ற மற்றொரு விசைப்படகையும் கடந்த ஜுலை 19 ஆம் திகதி வெடிகுண்டு வீசி மூழ்கடித்தனர்.

பின்னர் இரு படகுகளையும் இலங்கைக் கடற்படையினர் மீட்டு தலைமன்னார் கரையில் நிறுத்தி வைத்தனர். இப் படகுகளை மீட்டுத் தருமாறு மத்திய மாநில் அரசுகளிடம் இராமேஸ்வரம் மீனவர்கள் கோரிக்கை விடுத்தனர். இதனையடுத்து படகுகளை மீட்பதற்கு அனுமதி கிடைத்தது.

அதன்படி இராமேஸ்வரம் இந்தியக் கடற்படை அலுவலகத்தில் இருந்து செல்லத்துரை, பால்துரை ஆகியோருக்குச் சொந்தமான 3 விசைப்படகுகளில் 17 மீனவர்கள் கொண்ட மீட்புக் குழுவினர் நேற்று முன்தினம் காலை இலங்கைக்குப் புறப்பட்டனர்.

இவர்களை இந்தியக் கடலோரக் காவல் படையினர் பாதுகாப்பாக அழைத்துச் சென்று சர்வதேச கடல் எல்லையில் காத்திருக்கும் இலங்கைக் கடற்படையிடம் ஒப்படைப்பர்.

பின்னர் தலைமன்னாரில் உள்ள இரு படகுகளின் பழுதுகளை நீக்கி ஓரிரு நாட்களில் படகுகளுடன் மீட்புக் குழுவினர் இரா மேஸ்வரம் திரும்புவர் என மீனவர்கள் தெரிவித்தனர். (ஸ்ரீ-2)





யா/ உயரப்புலம் மெ.மி.த.க.பாடசாலையின் வாணிவிழா நிகழ்வில் பாடசாலையின் அதிபர்.எஸ்.புஸ்பரட்ணம் உரையாற்றுவதையும் ஆசிரியர்களின் பட்டிமன்றம் மற்றும் மாணவர்களின் கலைநிகழ்வையும் படங்களில் காணலாம். (படங்கள்:-என்.குமார்)

## கௌரவிப்பு விழா

(யாழ்ப்பாணம்)

இணுவில் கண்ணகா பரமேஸ்வரி ஆலயத்திலுள்ள காயத்திரி பீடத்தால் ஜனாதிபதியின் இந்துமத அலுவல்கள் விவகார இணைப்பாளர் பிரம்ம ஸ்ரீஇராமச்சந்திரக்குருக்கள் பாபு சர்மா இன்று காலை 7 மணிக்கு மேற்குறித்த ஆலயத்தில் வைத்து கௌரவிக்கப்படவுள்ளார்.

காயத்திரி பீடாதிபதியும் தர்ம சாஸ்தா அந்தண குருகுல வேதாகம சமஸ்கிருத பாடசாலை அதிபருமான தாணு மகாதேவக் குருக்கள் இக் கௌரவிப்பு நிகழ்வினை நடத்தவுள்ளார். (ஸ்ரீ-2)

## காணாமல் போனோரை மீட்டுத்தருவதாக கூறி பணம் பறித்த பெண் விளக்கமறியலில்

(கொழும்பு)

மட்டக்களப்பு பிரதேசத்தில் காணாமற் போனவர்களை கண்டுபிடித்து தருவதாக ஏமாற்றி இலட்சக்கணக்கான பணம் அபகரித்த பெண்ணொருவர் விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

பெண்ணின் வங்கிக்கணக்கில் இலட்சக் கணக்கான ரூபாய் பணம் புழக்கத்தில் இருந்ததை மட்டக்களப்பு தலைமையக பொலிஸ் குற்றத்தடுப்பு பிரிவினர் விசாரணைகளில் கண்டு பிடித்துள்ளனர்.

மட்டக்களப்பு வைத்தியசாலை உப தபாலகத்தில் கடமையாற்றிய ஊழியர் ஒருவரின் குடும்பத்தாரிடம் இருந்து குறித்த ஊழியரை கண்டுபிடித்து தருவதற்கு வங்கி மூலமும் நேரடியாகவும் நான்கு இலட்சத்து முப்பத்தாராயிரத்து இருநூறு ரூபாய் பணம் கப்பமாக பெற்றுக் கொண்டதாக மட்டக்களப்பு சின்ன ஊறணி எல்லை வீதியைச் சேர்ந்த பெண் ஒருவருக்கு எதிராக பொலிஸாரிடம் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது. அதையடுத்து பெண் பொலிசாரால் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் கடந்த 11 ஆம் திகதி ஆஜர் செய்யப்பட்டிருந்தார்.

குறித்த பெண்ணை மட்டக்களப்பு நீதவான் நீதிமன்ற நீதிபதி வீ.ராமகமலன் முன்நாளை மறுதினம் வரை குறித்த பெண் சந்தேக நபரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

குறித்த சந்தேகப் பெண் பற்றி விசாரணைகளை மேற்கொண்டு வரும் பொலிஸார் நிரந்தர தொழிலற்ற இப்பெண்மணியின் வங்கிக்கணக்கில் இலட்சக்கணக்கான ரூபாய் பணம் வைப்பில் இட்டிருந்ததை கண்டுபிடித்ததாக தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பாக மட்டக்களப்பு மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஐ.எம். கருணாதிலக்கவின் அறிவுறுத்தலுக்கமைய மட்டக்களப்பு தலைமை பொலிஸ் அதிகாரி நிலுபுல் சோமசிங்கவின் மேற்பார்வையில் குற்றத்தடுப்பு பொலிஸ் பிரிவினர் மேலதிக விசாரணைகள் மேற்கொண்டு வருகின்றனர். (ஸ்ரீ-2)

## நலம் தரும் நவராத்திரி



## நவராத்திரி 9 ஆம் நாள்

**சகல செல்வங்களையும் தந்திடும் சரஸ்வதி வடிவம்**



காரியங்களில் வெற்றி பெற கலைவாணியின் அருள் கேட்டு வழிபடும் திரு நாள் தான் இந்த சரஸ்வதி பூஜையாகும். எனவே இன்றைய தினம் அன்னையின் அம்சத்தை சரஸ்வதியாக அலங்கரித்து வழிபட வேண்டும்.

கொலு மண்டபத்தில் நடுவில் எழுதுகோல், கரும்பு, நோட்டு, புத்தகங்கள், இளம் பெண்கள், இளைஞர்களின் பொம்மைகள், வீணை, மத்தளம், புல்லாங்குழல் போன்ற பொம்மைகளை அதிகம் இடம் பெறச் செய்ய வேண்டும். அம்பிகையின் கைகளில் வீணை வைத்து அலங்கரிக்க வேண்டும். கழுத்தில் பூமாலைகளும், பாமாலைகளும் இணைப்பது நல்லது. ஆபரணங்களில் வைடூரியம் மற்றும் நீலம் கலந்து அணி விக்க வேண்டும்.

வசந்த இராகத்தைச் சரஸ்வதியின் முன்னால் பாடி வழிபட்டால் வசந்த காலம் நமக்கு பிறக்கும் சர்க்கரைப்பொங்கல், அவல் ஆகியவற்றைப் பிரசாதமாக வழங்க வேண்டும்.

நாளை ஞாயிற்றுக்கிழமை என்பதால் மஞ்சள் வண்ண பட்டாடைகளை அன்னைக்கு அணிவிப்பது நல்லது. செந்தாமரை, வெண்தாமரை மலர்களால் அன்னையை அர்சித்து வழிபட வேண்டும். கலைமகளே நீ வந்திடுக! கலைகள் அனைத்தும் தந்திடுக! நிலவுகளில் நான் புகழ்பெறவே நிலையாய் நாவில் அமர்ந்திடுக! என்று அந்த கலைவாணியின் முன்னால் பாடல்கள் பாடினால் கலைவாணியின் அருளால் உங்கள் கனவெல்லாம் நனவாகும்.

இந்த நேரத்தில் சரஸ்வதி படம் பொம்மை வைத்து, அருகில் விநாயகர், இலட்சுமி படங்களையும் வைத்து குத்து விளக்கேற்றித கோலமிட்டு, புத்தகம், பேனா மற்றும் நைவேத்தியப்பொருட்கள் அனைத்தும் வைத்து சரஸ்வதிக்கு உகந்த பாடல்களைப் பாடி வழிபட்டுத் தீபம் பார்க்க வேண்டும். வைத்த பொருட்களை மறுநாள் விளக் கேற்றித் தீபம் பார்த்த பிறகு எடுப்பது உத்தமம். இதனால் கல்வி விருத்தி, செல்வம், செல்வாக்கு அதிகரிக்கும்.

### வெற்றிகளைக் குவிக்கும் விஜயதசமி

புது முயற்சியில் ஈடுபட கல்வி கற்க தொடங்குவது முதல், கலைகள் கற்க பயிற்சி எடுப்பது வரை எதிர்கால நலனுக்காக எடுக்கும் முயற்சிகள் அத்தனைக்கும் உகந்த நாள் தான் விஜயதசமி ஆகும். எனவே ஞாயிற்றுக்கிழமை (17.10.2010) முழுநாளும் உகந்தது என்றாலும் காலை 9 மணிக்கு மேல் 12 மணிக்குள் அல்லது இரவு 6.30 மணிக்கு மேல் 7.30 மணிக்குள் புது முயற்சியில் ஈடுபடலாம். அன்று முழுவதும் அமிர்தம் என்பதால் செய்யும் முயற்சிகளில் எல்லாம் சிறப்பான வெற்றி கிடைக்கும்.

பிள்ளைகளை பள்ளியில் சேர்க்கும் செயல் முதல் பெருமைக்குரிய காரியங்கள் அத்தனையும் செய்ய இந்தநாளை உப யோகப்படுத்திக் கொள்வது நல்லது.

ஞானசக்தியாக வீற்றிருக்கும் அம்பிகையை இன்று வெற்றிமாலை, வாகை மாலை சூட்டி வழிபட வேண்டும். கொலு பொம்மைகளில் சூலம் மற்றும் வில் ஏந்திய தெய்வ பொம்மைகளை அதிகம் வைக்க வேண்டும். தேவியின் கழுத்தில் நவரத்தின மாலை, வைரம், வைடூரியம், தங்கம் கலந்த ஆபரணங்களை அணிவிக்க வேண்டும்.

சிவப்பு மற்றும் மஞ்சள் பட்டு ஆடைகளை அணிவிப்பது நல்லது. சர்க்கரை பொங்கல், அவல், பொரிகடலை, லட்டு ஆகியவற்றை பிரசாதமாக வழங்க வேண்டும். ''வசந்த'' ராகத்தில் தேவிக்குரிய பாடல்களைப் பாடினால் வளர்ச்சியைக் கூட்டிக்கொள்ளலாம். அருகிலுள்ள ஆலயங்களுக்கு சென்று அம்பிகை அம்பு போடும் வைபவத்தில் கலந்து கொண்டு அரக்க குணம் மாறி, இரக்ககுணம் உருவாக நட்டு வைத்த வாழை மரத்தில் நாமும் அமபு செலுத்தி வழிபட்டு வருவது நல்லது.

வெற்றி என்ற ''மூன்று'' எழுத்தை ஒவ்வொருவரும் தேடிக் கொண்டு இருக்கிறார்கள். அது கிடைத்து விட்டால் மகிழ்ச்சி அடைகிறார்கள். அந்த வெற்றியை ஆதிபராசக்தி பெற்ற திருநாளே'' விஜயதசமி'' என்றழைக்கப்படுகிறது. அந்த இனிய திருநாளில் அன்னையை வணங்கி நாமும் வெற்றி களை குவிப்போம். வெற்றி திருமகளை, அம்பிகையை நாம் வீட்டிற்கு அழைத்திடு வோம். அவள் சுற்றம் போற்றும் வாழ்வை தந்திட தொழுது பணிந்திடுவோம். **சிவல்புரி சிங்காரம்**

## மீள் சுழற்சி பெறும் இலத்திரனியல் கழிவுகள்

(கொழும்பு)

இலத்திரனியல் கழிவுப் பொருள்களை மீள் சுழற்சிக்கு உட்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மத்திய சுற்றாடல் அதிகார சபை மேற்கொண்டுள்ளது.

இதுதொடர்பான திட்டம் அடுத்த மாதத் தொடக்கத்தில் ஆரம்பிக்கவுள்ளதாக அதிகார சபை யின் தலைவர் சரித்த ஹேரத் கூறியுள்ளார்.

நாட்டில் கையடக்கத் தொலைபேசிகள், தொலைக்காட்சிகள் மற்றும் கணனிகள் உள்ளிட்ட இலத்திரனியல் கழிவுப் பொருட்களும் அதிகளவில் சேர்வதாக மத்திய சுற்றாடல் அதிகார சபை சுட்டிக்காட்டியுள்ளது.

உத்தேசத் திட்டத்தின் கீழ் இலத்திரனியல் கழிவுப் பொருட்களைச் சேகரிப்பது தொடர்பாக ஆலோசனைகள் வழங்கப்படவுள்ளதாக அதிகார சபையின் தலைவர் சரித்த ஹேரத் மேலும் கூறியுள்ளார். (ஸ்ரீ-2)

வெற்றிக்கான பாதை ஒன்றே ஒன்றுதான் உள்ளது. அதுதான் நேர்மை வழிப் பாதை மற்றப்பாதைகள், பாதைகளே அல்ல.
– ஸரதுஸ்கிர்

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

## பாட்டும் நானே! பாவமும் நானே! ஆணவச் செருக்கறுத்த சர்வதேசம்

கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு முன் சாட்சியமளிக்க மூன்று சர்வதேச அமைப்புகள் மறுத்தமை இலங்கை அரசுக்கு விழுந்த முதலாவது சர்வதேச அடியென்று கூறலாம்.

யுத்தம் தொடர்பில் விசாரணை நடத்தும் மேற்படி ஆணைக்குழுவானது சர்வதேச மனித உரிமைகள் கண்காணிபகம், சர்வதேச மன்னிப்புச் சபை, சர்வதேச நெருக்கடிகள் குழு ஆகிய அமைப்புக்களை சாட்சியமளிக்க அழைத்திருந்தது.

ஆனால் அந்த அழைப்பை மேற்படி சர்வதேச அமைப்புகள் அடியோடு நிராகரித்து விட்டன.

இலங்கையில் யுத்தம் தொடர்பில் விசாரணை நடத்துவதற்காக அந்நாட்டு ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட குறித்த ஆணைக்குழு மீது எமக்கு நம்பிக்கையில்லை. ஆகையினால் நாங்கள் சாட்சியமளிக்க வரமுடியாது என அந்த அமைப்புகள் கூறியமையினால் இலங்கை அரசு தீட்டிய திட்டம் படுதோல்வியடைந்துள்ளது.

அதாவது வன்னியில் நடந்த யுத்தம் தொடர்பில் விசாரணை நடத்துவதற்காக ஐ.நா.சபை முயற்சிகளை மேற்கொண்டுள்ள வேளையில், அந்த முயற்சிகளை முறியடிப்பதற்கு இலங்கை அரசு அவசர அவசரமாக ஆணைக்குழுவொன்றை அமைத்தது.

பாட்டும் நானே! பாவமும் நானே!என்பதாக அமைக்கப்பட்ட விசாரணை குழுவானது விசாரணை நடத்தி நீதி காண்பதென்பதைவிட அந்த ஆணைக்குழுவை அங்கீகாரமுள்ள அமைப்பாக்கி, அதன் விசாரணை முடிவுகளை சர்வதேச ரீதியில் ஏற்றுக்கொள்ளவைக்கும் வகையில் திட்டங்கள் தீட்டப்பட்டன.

இத்திட்டத்தின் மூலம் ஐ.நா. சபை யுத்தக் குற்ற விசாரணையை மேற்கொள்வதைத் தடுப்பதே முதன்மை நோக்கமாகும். அரசின் இத்திட்டத்திற்கு தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தரும் உடன்பட்டிருந்தார். விசாரணைக்கு அழைத்தால்,

கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் முன்பாக சாட்சியமளிக்க தயார் என இரா.சம்பந்தர் தெரிவித்திருந்தார். அவரின் கருத்து வெளியாகியபோது அது மிகப் பெரும் தவறு, யுத்தம் தொடர்பில் விசாரணை மேற்கொள்வதற்கு அரசு அமைத்த ஆணைக்குழு முன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சாட்சியமளிக்குமாயின் அதனை தமிழர் தரப்பு அங்கீகரிப்பதாக முடியும். இது ஐ.நா.சபையின் விசாரணைக் குழுவை தூக்கி எறியச் செய்யும் என்று இவ்விடத்தில் பிரஸ்தாபித்திருந்தோம்.

எதை எழுதினாலும் அதைத் தமக்கு விரோதமாகப் பார்க்கும் பரிதாப நிலையில், மூன்று சர்வதேச அமைப்புக்கள், ஆணைக்குழு முன் சாட்சியமளிக்க மறுத்ததன் மூலம் பிரஸ்தாப ஆணைக்குழுவின் விசாரணைகளை சர்வதேச சமூகம் ஏற்றுக்கொள்ளவில்லை என்பது உறுதியாகி விட்டது.

மிகவும் முதன்மை வாய்ந்த சர்வதேச அமைப்புக்களால் நிராகரிக்கப்பட்ட இலங்கை ஆணைக்குழுவின் விசாரணைகளால் எந்தப் பயனும் இல்லை என்பதே தற்போதய முடிவு.

## ஓசியானிக் கப்பலில் சென்ற 17 பேருக்கு அகதி அந்தஸ்து

(கொழும்பு)

அவுஸ்திரேலியா நோக்கி பயணித்துக்கொண்டிருந்த வேளையில் சிறிது காலத்துக்கு முன் ஓசியானிக் வைக்கிங் கப்பலால் காப்பாற்றப்பட்டு, கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டிருந்த 78 பேரில் 17 பேருக்கு நேற்று அகதி அந்தஸ்து வழங்கப்பட்டுள்ளது.

அதற்கு மேலதிகமாக ஏற்கெனவே அவுஸ்திரேலியா 15 பேரை அகதிகளாக ஏற்றுக்கொண்டு அந்த நாட்டில் வாழ அனுமதியளித்துள்ளது.

மிகுதி 40 பேரும் ஐக்கிய நாடுகள் அமைப்பின் அகதிகளுக்கான உயர் ஸ்தானிகராலயத்தின் உதவியுடன் ஐக்கிய அமெரிக்கா, கனடா, நியூசிலாந்து, நோர்வே போன்ற நாடுகளில் குடியேற்றப்படுவதற்காக ருமேனியாவில் தங்க வைக்கப்பட்டுள்ளதாக தெரியவருகிறது.

ஆனாலும் அவுஸ்திரேலியாவில் குடியேற்றப்படவுள்ள 17 அகதிகள் தொடர்பில் மீள் கணிப்பீடொன்று மேற்கொள்ளப்படவேண்டும் என்று அவுஸ்திரேலியாவின் எதிர்க்கட்சி கோரிக்கை விடுத்துள்ளது.

ஓசியானிக் வைக்கிங் கப்பலால் காப்பாற்றப்பட்ட 78 அகதிகளும் உண்மையான அகதிகள் என்று யூ.என்.எச்.சி.ஆர் அமைப்பினால் உறுதிப்படுத்தப்பட்டிருந்ததையும் அவுஸ்திரேலியாவின் எதிர்க்கட்சியினர் கேள்விக்குட்படுத்தியிருந்தனர்.

இருந்த போதிலும் அவர்களின் குற்றச்சாட்டை மறுத்த அவுஸ்திரேலியாவின் குடிவரவுத்துறை அமைச்சர் கிரிஸ் போவன், அவர்களின் அகதி அந்தஸ்தை உறுதிப்படுத்தியதுடன் அவர்கள் அனைவரும் மீண்டும் இலங்கை திரும்பிச்செல்ல முடியாத நிலையில் இருப்பது உறுதி செய்யப்பட்டிருப்பதாகவும் தெரிவித்துள்ளார். (ச-5)

## ஐ.தே.கவின் புதிய யாப்புத் தயார் டிசம்பர் மாதம் அங்கீகாரத்துக்கு!

(கொழும்பு)

மறுசீரமைப்புக்கான முன் மொழிவுகளின் அடிப்படையில் ஐ.தே.கவின் புதிய யாப்பு தயாரித்து முடிக்கப்பட்டுள்ளதாக ஐ.தே.க. பொதுச்செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்தார்.

எதிர்வரும் டிசெம்பர் மாதம் நடைபெறவுள்ள கட்சியின் வருடாந்த மாநாட்டில் இந்த யாப்பு அங்கீகரிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுவதாகவும் அவர் கூறினார்.

புதிய யாப்பை தயாரிப்பதற்காக நியமிக்கப்பட்ட குழுவின் தலைவரான முன்னாள் அமைச்சர் திலக் மாரப்பன இது குறித்த அறிக்கையை செயற்குழுவிடம் நேற்று கையளித்துள்ளதாகவும் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்தார்.

எனினும் வருடாந்த மாநாட்டிற்கான திகதி இன்னும் தீர்மானிக்கப்படவில்லை என அவர் கூறினார். நாடாளுமன்றில் வரவு செலவுத்திட்ட விவாதம் டிசெம்பர் மாதம் நடைபெறவுள்ளது. எனவே அவ்விவாத நடவடிக்கைகளுடன் சிக்கல் ஏற்படாத விதத்தில் கட்சி மாநாட்டிற்கான திகதி தீர்மானிக்கப்படவேண்டும். நாடாளுமன்ற அமர்வுகளுக்கான திகதிகள் அறிவிக்கப்பட்ட பின்னர் இவ்விடயத்தில் கட்சி மாநாட்டிற்கான திகதி தீர்மானிக்கப்படும் என அவர் கூறினார். (ச-5)

## கட்சியின் முன்மொழிவுகளை ஏற்காவிட்டால் வாக்களிப்பில்லை

### ஸ்ரீலங்கா மு.கா. அறிவிப்பு

(கொழும்பு)

உத்தேச உள்ளூராட்சி திருத்தச் சட்டமூலம் தொடர்பில் எமது கட்சியின் முன்மொழிவுகள் மாகாண சபைகளில் ஏற்றுக்கொள்ளப்படாத பட்சத்தில் வாக்களிப்பில் கலந்துகொள்ளமாட்டோம் என ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் செயலாளர் நாயகம் ஹசன் அலி தெரிவித்தார்.

எனினும் எமது கட்சியின் முன்மொழிவுகள் மாகாண சபைகளில் ஏற்றுக்கொள்ளப்படும் பட்சத்தில் ஆதரவாக வாக்களிப்போம் என அவர் கூறினார். அடுத்த வாரம் மாகாண சபைகளில் சமர்ப்பிக்கப்படவுள்ள உத்தேச உள்ளூராட்சி திருத்தச் சட்டமூலம் தொடர்பில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் மாகாண சபை உறுப்பினர்களுக்கு விளக்கமளிக்கும் கூட்டம் கட்சித் தலைமையகமான தாருஸ்ஸலாமில் நேற்று மாலை இடம்பெற்றது.

இது தொடர்பில் மேலும் கருத்துத் தெரிவித்த அவர்,

உத்தேச உள்ளூராட்சி திருத்தச் சட்டமூலத்தில் சிறுபான்மை இனத்தவருக்கு சாதகங்களும், பாதகங்களும் காணப்படுகின்றன. அத்துடன் இச் சட்டமூலத்தில் சில தெளிவின்மைகள் காணப்படுகின்றன. இத்தெளிவின்மைகள் தொடர்பில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுடன் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளது.

கடந்த சில வருடங்களுக்கு முன் உத்தேச உள்ளூராட்சி திருத்தச் சட்டமூலம் முன்வைக்கப்பட்ட போது சிறுபான்மையினருக்கு முற்றிலும் பாதிப்பு எனத் தெரிவித்து ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்திருந்தது.

இதன் பின்னர் உள்ளூராட்சி திருத்தச் சட்டமூலம் தொடர்பிலான நாடாளுமன்றக் குழுவுடன் பேச்சுவார்த்தை நடத்தி எமது கட்சியின் முன் மொழிவுகளைத் தெரிவித்தோம். தற்போது புதிதாக முன்வைக்கப்பட்டுள்ள உத்தேச உள்ளூராட்சி திருத்தச் சட்டமூலத்தில் சில தெளிவின்மை காணப்படுகின்றன.

இச்சட்டமூலத்தில், உள்ளூராட்சி மன்றங்களில் சமர்ப்பிக்கப்படும் வரவு செலவுத்திட்டம் இரண்டு தடவைகள் தோற்கடிக்கப்படின் குறித்த சபை ஆணையாளரின் நேரடி கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்படும் என்றார். (ச-5)

## வாணிவிழா

(யாழ்ப்பாணம்)

ஸ்ரீ பரராசசேகரப் பிள்ளையார் திருநெறிய தமிழ் மறைக் கழகமும் அறநெறிப் பாடசாலையும் இணைந்து நடத்தும் வாணிவிழா இன்று ஸ்ரீபரராசசேகர பிள்ளையார் ஆலய கல்யாண மண்டபத்தில் காலை 8.15 மணிக்கு தலைவர் ச.முகுந்தன் தலைமையில் இடம்பெற உள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக உடுவில் பிரதேச செயலக கலாசார உத்தியோகத்தர் தி.அ.சிவஞானசீலன் கலந்து கொள்கிறார்.

சிறப்பு விருந்தினராக ஓய்வுபெற்ற அதிபர் பொ.சுந்தரலிங்கம், வாழ்த்துரையினை யாழ். பல்கலைக்கழக முகாமைத்துவ பீடாதிபதி பேராசிரியர் க.தேவராஜா நிகழ்த்த உள்ளார். (ச)

## கொக்குவிலில் திருடர் தொல்லை தேடுதலில் இளைஞர் குழுக்கள்

(யாழ்ப்பாணம்)

கொக்குவில் பகுதியில் திருடர்களின் தொல்லைகள் அதிகரித்துள்ளதாக அப்பகுதி மக்கள் தெரிவித்தனர்.

பகலில் நோட்டமிடுவது இரவில் வீடுகளுள் புகுவது என திருடர்களின் அட்காசம் அண்மைய நாட்களில் இடம்பெற்று வருவதாக அவர்கள் தெரிவித்தனர். இரவு வேளைகளில் வீடுகளுள் புகும் திருடர்கள் நீண்ட நேரம் காத்திருந்து அவதானித்து வீட்டில் இருப்பவர்கள்உறங்கியபின்னர் யன்னல் கம்பிகளை உடைத்து உள்ளே புக முயற்சிப்பதாக தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை அப்பகுதியில் உள்ள இளைஞர்கள் இராணுவம் மற்றும் பொலிஸாரின் அனுமதியுடன் இரவு வேளைகளில் தேடுதல் வேட்டையில் ஈடுபட்டு வருகின்றனர்.

இரவு வேளைகளில் சந்தேகத்துக்கு இடமாக நடமாடுபவர்கள், மற்றும் ஆட்டோக்கள் என்பவற்றை மறித்து சோதனையிடுவது, அப்பகுதிகளில் விழிப்புக் குழுக்களை அமைத்து இரவு நேரங்களில் கண்காணிப்பது போன்ற செயற்பாடுகளில் ஈடுபட்டு வருகின்றனர். (எ)

## சுவாமி விவேகானந்தரின்

### உண்மையான மகிழ்ச்சி



✪ உங்கள் தவறுகளைப் பெரும் பேறாக நினையுங்கள். அவை நம்மை அறியாமலே நமக்கு வழிகாட்டும் தெய்வங்கள் என்றால் மிகையில்லை.




✪ அழுகை பலவீனத்தின் அறி குறி அடிமைத்தனத்தின் அறிகுறி. தோல்விகள் இல்லாத வாழ்க்கையால் பயனேதும் இல்லை. போரரட்டம் இல்லாத வாழ்க்கை சுவையாக இருக்காது.

✪ தன்னலத்தை ஒழிப்பதில் தான் உண்மையான மகிழ்ச்சி இருக்கிறது. உன்னைத்தவிர யாராலும் உன்னை மகிழ்விக்க முடியாது.

✪ கோபப்படும் மனிதனால் அதிக அளவோ அல்லது செய்யும் பணியைச் சிறப்பாகவோ செய்ய முடியாமல் போய் விடும். ஆனால் அமைதியானவனோ சிறப்பாகப் பணி யாற்றுவான்.

✪ மன்னிக்கக் கூடியதும் சமநோக்குடையதும் நிலை தடுமாறாததுமான மனதை எவன் பெற்றிருக்கிறானோ அவனே ஆழ்ந்த அமைதியில் திளைத்திருப்பான்.

✪ கருணை என்பது சொர்க்கத்தைப் போன்றது. நாம் அனைவரும் கருணையுள்ளவர்களாக மாறி சொர்க் கத்தில் மகிழ்ந்திருப்போம்.



யாழ். மாநகராட்சி மன்றத்தின் வண்ணார் பண்ணை சுகாதாரப் பரி சோதகர் பிரிவு மற்றும் ஜே/ 101 நீரா வியடி குடும்பநல உதவியாளர் பிரிவு ஆகிய இரு பிரிவினரும் இணைந்து நடத்திய சர்வதேச முதியோர் , சிறு வர் கௌரவிப்பு விழா அண்மையில் நீராவியடி சைவ பரிபாலன சபையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் யாழ். மாவட்ட தாய் சேய் நலவைத்திய அதிகாரி திருமதி எஸ். திருமகள் குடும்ப நல மருத்துவமாது ஒருவரால் வரவேற்கப்படுவதையும் யாழ். மாநகர சபை செயலாளர் இ. இரட்ணசிங்கம் முதியவர் ஒருவருக்கு பரிசில் வழங்குவதையும் யாழ். மாநகரசபை சுகாதார வைத்திய அதிகாரி வைத்திய கலாநிதி எம்.மரியதாசன் முதியவர் ஒருவரிடம் ஆசீர்வாதம் பெறுவதை யும் சிறுவர்களின் கலைநிகழ்வையும் நிகழ்வில் பங்குபற்றியோரையும் படங்களில் காணலாம்.

## ஆங்கில சான்றிதழ் கற்கைநெறிக்கான பதிவுகள்

(யாழ்ப்பாணம்)

இலங்கை திறந்த பல்கலைக்கழக யாழ்ப்பாணப் பிராந்திய நிலையத்தில் ஆங்கில சான்றிதழ் கற்கை நெறிக்கு விண்ணப்பித்த மாணவர்கள் எதிர்வரும் 19, 21 ஆம் திகதிகளில் காலை 9 மணி தொடக்கம் மாலை 4 மணிவரை யாழ். பிராந்திய நிலையத்தில் பதிவுகளை மேற் கொள்ள முடியுமென இவ் நிலைய இணைப்பாளர் அறிவித்துள்ளார். (ஸ்ரீ-2)

## அதிர்ஷ்ட இலாப சீட்டிழுப்பு முடிவுகள்

(யாழ்ப்பாணம்)

யாழ்.விழிப்புலனற்றோர் சங்கத்தினால் உற்சவ காலங்களை முன்னிட்டு விற்பனை செய்யப்பட்டு வந்த அதிஷ்ட இலாப சீட்டிழுப்பு முடிவுகள் வெளியாகியுள்ளது.

இதன் அடிப்படையில் அதிஷ்ட எண்களான 05149,25089,53390 ஆகிய எண்களுக்கு முறையே முதலாம், இரண்டாம், மூன்றாம் பரிசுகள் கிடைக்கப் பெற்றுள்ளன.

அதிஷ்டசாலிகள் தமக்குரிய பரிசில்களை எதிர்வரும் நவம்பர் மாதம் 16 ஆம் திகதிக்கு முன்னர் யாழ்.விழிப்புலனற்றோர் சங்க காரியாலயத்தில் கடமை நாட்களில் உரிய அத்தாட்சி மூலம் உறுதிப்படுத்திப் பெற்றுக் கொள்ளலாமென யாழ்.விழிப்புலனற்றோர் சங்க பொருளாளர் அறிவித்துள்ளார். (ஸ்ரீ-2)

## நாட் பாடசாலை

இலங்கை திறந்த பல்கலைக்கழக யாழ்.பிராந்திய நிலையத்தின் பட்டமேற்கல்வி டிப்ளோமா 2010/2011 ஆம் கல்வியாண்டுக்கான முதலாவது நாட்பாடசாலை இன்றும் நாளையும் காலை 9 மணிக்கு யாழ். பிராந்திய நிலையத்தில் நடைபெறுமென இணைப்பாளர் அறிவித்துள்ளார். (ஸ்ரீ-2)

## கற்கை நெறிக்கான பதிவுகள்

இலங்கை திறந்த பல்கலைக்கழக யாழ்ப்பாணப் பிராந்திய நிலையத்தில் விசேட தேவை பட்ட மேற்கல்வி டிப்ளோமா கற்கை நெறிக்கு விண்ணப்பித்த மாணவர்கள் எதிர்வரும் 19, 20 ஆகிய திகதிகளில் காலை 9 மணிக்கு தொடக்கம் மாலை 4 மணி வரை யாழ்.பிராந்திய நிலையத்தில் பதிவுகளை மேற்கொள்ள முடியுமென இணைப்பாளர் அறிவித்துள்ளார். (ஸ்ரீ-2)

## பொன்சேகாவின் கைது குறித்து சர்வதேச பாராளுமன்றத்தின் விசாரணைகள் ஆரம்பம்

(கொழும்பு)

ஜனநாயகத் தேசியக்கூட்டமைப்பின் தலைவர் சரத்பொன்சேகாவிற்கு தண்டனை விதிக்கப்பட்ட விவகாரம் தொடர்பில் சர்வதேச அனைத்து பாராளுமன்ற ஒன்றியம் விசாரணைகளை ஆரம்பித்துள்ளது.

சர்வதேச அனைத்துப் பாராளுமன்ற ஒன்றியத்தின் மனித உரிமை கமிட்டியினால் இந்த விசாரணைகள் நடத்தப்படு வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

சரத்பொன்சேகாவிற்கு 30 மாத சிறைத் தண்டனை விதிக்கப்பட்டமை குறித்து விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

பாராளுமன்ற உறுப்பினர் என்ற ரீதியில் சரத்பொன்சேகாவின் சிறப்புரிமை மற்றும் அடிப்படை மனித உரிமை மீறப்பட்டுள்ளதாக அண்மையில் அனைத்து பாராளுமன்ற ஒன்றிய மாநாட்டில் கலந்துகொண்ட ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் டாக்டர் ஜயலத் ஜயவர்த்தன முறைப்பாடு செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக ஒன்றியத்தின் செயலாளர் இன்ங்போர்க் செச்வார்ஸ், ஜனநாயக தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் டிரான் அலஸிற்கு மின் அஞ்சல் மூலம் அறிவித்துள்ளார்.

இதேவேளை, சரத்பொன்சேகா தொடர்பான முறைப்பாட்டை மனித உரிமைகள் கமிட்டி நிராகரித்துள்ளதென ஆளும் கட்சி அமைச்சர் மஹிந்த சமரசிங்க கருத்து வெளியிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

எவ்வாறெனினும், மனித உரிமை கமிட்டியில் மேற்கொள்ளப்பட்ட முறைப்பாடு நிராகரிக்கப்படவில்லை என ஒன்றியத்தின் செயலாளர் இன்ங்போர்க் செச்வார்ஸ், டிரான் அலஸிற்கு அனுப்பிவைத்துள்ள மின் அஞ்சலில் சுட்டிக்காட்டியுள்ளார். (ஸ்ரீ-2)

## சன்சீ கப்பலின் உரிமையாளரென பெண்ணொருவர் மீது விசாரணை

இலங்கையில் இருந்து கனடாவுக்கு அகதிகளை ஏற்றிச் சென்ற சன் சீ கப்பலின் உரிமையாளர்கள் என்ற அடிப்படையில் பெண் ஒருவர் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார். கனேடிய குடிவரவு மற்றும் அகதிகள் சபையின் பேச்சாளர் ஒருவர் இதனை தெரிவித்துள்ளார்.

குறித்த பெண் அகதியாக கனடா சென்றுள்ள நிலையில் குடியுரிமை தொடர்பில் தமது நான்காம் கட்ட விசாரணைக்கு உட்படுத்தப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

எனினும் அவரது அடையாளம் உறுதிப்படுத்தப்படாத நிலையில் தொடர்ந்தும் அவர் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. குறித்த பெண்ணின் கணவரும் இந்த குற்றச்சாட்டு தொடர்பில் விசாரிக்கப்படுகிறார். அவர் வன்குவார் சீர்திருத்த முகாமில் தனியாக தடுத்து வைக்கப்பட்டுள்ளதாக கனேடிய செய்திகள் தெரிவிக்கின்றன.

விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ள பெண் விசாரணையின் போது சமர்ப்பித்த பெயருக்கும் அவரது ஆவணங்களில் உள்ள பெயருக்கும் வித்தியாசம் காணப்படுகின்ற நிலையில் இந்த தாமதம் ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. இதற்கிடையில் அவர் கருத்தரித்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பில் தகவல் வெளியிட்டுள்ள அகதிகள் ஆர்.வலர் றொன் யமாச்சி அவரது பிறப்பு சான்றிதழ் மற்றும் அடையாள அட்டை என்பவற்றில் உள்ள பெயருக்கும் திருமண சான்றிதழில் உள்ள பெயருக்கும் வித்தியாசம் இருப்பதாக சுட்டிக்காட்டியுள்ளார். தமது கணவரின் விருப்பத்தின் பேரிலேயே தாம் பெயரை மாற்றிக் கொண்டதாக விசாரணைகளில் குறித்த பெண் தெரிவித்துள்ளார்.

எவ்வாறாயினும் தமிழ் பெண்கள் திருமணத்தின் பின்னர் தமது பெயரை கணவன் பெயருடன் இணைத்துக் கொள்வார் என்பதை அதிகாரிகள் ஏற்றுக் கொண்டுள்ளனர். இது தொடர்பான விசாரணைகள் இடம்பெறுகின்றன. (ஸ்ரீ-2)

## போராட்டத்தில் ஈடுபடுவது 1000 மாணவர்களாயினும் அவர்களை கைது செய்ய அரசாங்கம் தயங்காது

### உயர்கல்வியமைச்சர் தெரிவிப்பு

மாணவர் போராட்டங்களில் ஈடுபடும் பல்கலைக்கழக மாணவர்களில் ஒன்றிரண்டல்ல ஆயிரம் மாணவர்கள் என்றாலும் கைது செய்து சிறையில் அடைப்பதற்கு அரசாங்கம் தயங்காது என்று உயர்கல்வி அமைச்சர் எஸ்.பி. திசாநாயக்க தெரிவித்துள்ளார்.

நேற்றுமுன்தினம் உயர்கல்வி அமைச்சின் முன்பாக பல்கலைக்கழக மாணவர்கள் மேற்கொண்ட ஆர்ப்பாட்டம் தொடர்பாக வினவியபோதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

பேராதனைப் பல்கலைக்கழகத்துக்கு தான் விஜயம் செய்தபோது தனக்கெதிராக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டு கற்களை எறிந்த மாணவர்கள் பகிடிவதை மற்றும் வன்முறைத் தடுப்பு சட்டத்தின் கீழ் கைது செய்து சிறையிலடைக்கப்பட்டுள்ளதைச் சுட்டிக்காட்டிய அமைச்சர் அவ்வாறான சட்டத்தில் கைது செய்யப்படும் ஒருவர் இலகுவில் பிணையில் வெளிவர முடியாது என்பதையும் சுட்டிக்காட்டினார்.


மேலும் குறித்த சட்டத்தை தொடர்ந்தும் பிரயோகிக்கும் நிலைப்பாட்டில் அரசாங்கம் உறுதியாக இருப்பதாகவும் அமைச்சர் உறுதிபடத் தெரிவித்தார்.


இலங்கையில் வழக்கிலிருக்கும் சட்ட விதிகளின் பிரகாரம் பகிடிவதை மற்றும் வன்முறைத் தடுப்பு சட்டத்தின் கீழ் கைது செய்யப்படும் ஒருவர் சாதாரண மஜிஸ்திரேட் நீதிமன்றத்தின் ஊடாக பிணை கோர முடியாது.மேல்நீதிமன்றம் மட்டுமே அவர்களுக்குப் பிணை வழங்கும் அதிகாரத்தைக் கொண்டிருக்கின்றது. அதற்கும் பல மாதங்கள் வரை காலம் எடுக்கும்.


அது மட்டுமன்றி குறித்த சட்டத்தின் கீழ் கைது செய்யப்படுபவர்களுக்கு ஏழு வருடங்கள் வரை சிறைத்தண்டனை வழங்குவதற்கான அதிகாரம் நீதிமன்றங்களுக்கு உள்ளது.

நேற்றுமுன்தினம் ஆர்ப்பாட்டத்தின் போது சுமார் 2 ஆயிரம் பல்கலைக்கழக மாணவர்கள் கலந்து கொண்டிருந்ததுடன் அவர்களில் 21 பேர் மட்டுமே கைது செய்யப்பட்டுள்ளனர். (ஸ்ரீ-2)











யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியின் பரிசுத்தின நிகழ்வில் விருந்தினர்கள் அழைத்துச் செல்லப்படு வதையும் வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர் எல்.இளங்கோவன், பாடசாலை அதிபர் வி.கணேசராசா ஆகியோர் உரையாற்றுவதையும், திருமதி கிருபாகரி இளங்கோவன் மாணவன் ஒருவருக்கு பரிசில் வழங்குவதையும் நிகழ்வில் கலந்துகொண்வர்களையும் படங்களில் காணலாம்.

–படங்கள்: கரன், குமார்

# காமன்வெல்த் போட்டிகளில் பங்கேற்ற அவுஸ்திரேலிய வீரர்கள் ரகளை

(புதுடில்லி)

பொதுநலவாய (காமன்வெல்த்) விளையாட்டுகிராமத்தில் தங்கியிருந்த அவுஸ்திரேலிய வீரர்கள் பயங்கர ரகளையில் ஈடுபட்டுள்ளனர். கிரிக்கெட்டில் ஏற்பட்ட தோல்விக்கு காரணமான இந்திய வீரர் சச்சின் டெண்டுல்கருக்கு எதிராக கோஷமிட்டு, அறையில் இருந்த பொருட்களை உடைத்தனர். மாடியில் இருந்து வோஷிங்மெஷினை தூக்கி வெளியே எறிந்துள்ளனர்.

இதுதொடர்பில் இந்திய ஊடகங்களில் வெளியாகியுள்ள செய்திகளில் டில்லியில் 19வது பொதுநலவாய (காமன்வெல்த்) போட்டி வெற்றிகரமாக நடந்தது. இதற்கு முதல்நாள், பெங்களூரில் நடந்த இரண்டாவது டெஸ்டில் இந்திய அணி அவுஸ்திரேலியாவை வீழ்த்தி, தொடரை வென்றது. இது பொதுநலவாய போட்டியில் பங்கேற்க வந்த அவுஸ்திரேலிய வீரர்களை பெரிதும் கோபப்பட வைத்துள்ளது.

சச்சின் இரட்டை சதம் அடித்த அன்று முதல், அதாவது கடந்த 12ம் திகதி முதல் விளையாட்டு கிராமத்தில் பெரும் ரகளையில் ஈடுபட ஆரம்பித்தார்கள். கிரிக்கெட் தோல்விக்கு காரணமாக சச்சினுக்கு எதிரான கோஷங்களை எழுப்பினர். அவர்களது அறையில் இருந்த கட்டில், மெத்தை உள்ளிட்ட பொருட்களை உடைத்தனர். பின் எலக்ட்ரிக் பொருட்களை அடித்து நொறுக்கினர்.

இதன் உச்சக்கட்டமாக அதிகாலை 4 மணிக்கு, எட்டாவது மாடியில் இருந்து வோஷிங் மெஷினை தூக்கி கீழே வீசினர்.

## சம்பவம் உண்மை

இதுகுறித்து விளையாட்டு கிராமத்தில் பாதுகாப்பில் ஈடுபட்ட உயர் பொலிஸ் அதிகாரி ஒருவர் கூறுகையில், அவுஸ்திரேலிய வீரர்களின் அடாவடித்தனத்தை நிறுத்துமாறு துப்புரவுத் தொழிலாளர்கள் கூறினார். ஆனால், தொடர்ந்து ரகளையில் ஈடுபட்டனர். கடந்த 13ஆம் திகதி இந்திய அணி, அவுஸ்திரேலியாவை தோற்கடித்தது என்ற செய்தியை கேட்டவுடன், வோஷிங்மெஷினை தூக்கி வெளியே எறிந்தனர். கடவுள் அருளால் யாருக்கும் காயம் ஏற்படவில்லை என்றார்.

விளையாட்டுக்கிராமத்தின் பொறுப்பாளர் லெப்டினன்ட்ஜெனரல்அசோக்குமார்கூறுகையில், வீரர்களின் செயலால் பெரிய அளவில எந்த பாதிப்பும் இல்லை. அவர்கள் விளையாட்டாகத் தான் இப்படி செய்தனர். வோஷிங்மெஷின் வெளியே எறியப்பட்டதற்கு, அணி நிர்வாகம் மன்னிப்பு கேட்டது என்றார்.


# 2010 க்கான சிறந்த அணித் தெரிவில் யாழ்.பல்கலைக்கழக அணி முதலிடம்!

யாழ்.சென்றல் விளையாட்டு கழகம் நடத்தும் 2010ம் ஆண்டிற்கான சிறந்த கழக அணி தெரிவில் கடந்த 10ஆம் திகதி வரை நடைபெற்ற 68 போட்டிகளின்படி யாழ்.பல்கலைக்கழக அணி 11 போட்டிகளில் பங்குபற்றி 9 போட்டிகளில் வெற்றி பெற்று 38 புள்ளிகளை பெற்று முதலாம் இடத்தில் உள்ளது. ஜொலிஸ்ரார் கழக அணி 14 போட்டிகளில் பங்கு பற்றி 10 போட்டிகளில் வெற்றி பெற்று 31 புள்ளிகளை பெற்று 2ம் இடத்திலும், யாழ்.சென்றல் கழக அணி 10 போட்டிகளில் பங்கு பற்றி 8 போட்டிகளில் வெற்றி பெற்று 28 புள்ளிகளை பெற்று 3ம் இடத்திலும் உள்ளன. கே.சீ.சீ.சீ. கழக அணி 16 புள்ளிகளைப் பெற்று 4ம் இடத்திலும், சிறி காமாட்சி கழக அணி 15 புள்ளிகளை பெற்று 5ம் இடத்திலும் உள்ளன. கிறாஸ் கொப்பர்ஸ் கழக அணி, ய்ாழ். ஜொனியன்ஸ் கழக அணி, அரியாலை சென்றல் கழக அணி ஆகியன தலா 8 புள்ளிகளை பெற்று 6ம் இடத்திலும் உள்ளன, ஈகிள்ஸ் கழக அணி 7ம் இடத்திலும், மானிப்பாய் பரீஸ் கழக அணி, ஸ்ரான்லி கழக அணி ஆகியன 8ம் இடத் திலும், ஓல்ட் கோல்ஸ் கழக அணி சென்றலைட்ஸ் கழக அணி தலா 5 புள்ளிகளை பெற்று 9ம் இடத்திலும் உள்ளன. வேவி கிறிக்கற் கழக அணி, யங்ஸ்ரார் கழக அணி, ஸ்கந்தா ஸ்ரார் கழக அணி ஆகியன தலா 3 புள்ளிகளை பெற்று 10ம் இடத்திலும் உள்ளன. (ச–5)

# யாழ்ப்பாண பல்கலைக்கழகத்துக்கு கராத்தே போட்டியில் 4 பதக்கங்கள்

(யாழ்ப்பாணம்)

02.10.2010 இல் கொழும்பு ஸ்ரீஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற 10 ஆவது அனைத்துப் பல்கலைக் கழகங்களுக்கிடையிலான கராத்தே போட்டியில் யாழ். பல்கலைக்கழகம் 4 பதக்கங்களைப் பெற்றுக் கொண்டது. ரி.ஜெயதர்சன் – வெள்ளிப் பதக்கத்தையும், வி.நவநீதன், க.நிருபன், எஸ்.கஜேந்திரன் ஆகியோர் வெண்கலப்பதக்கத்தினையும் பெற்றுக் கொண்டனர்.



இடமிருந்து வலமாக – ரி.ஜெயதர்சன், வி.நவநீதன், ஜி.டி.மதியழகன் – போதனாசிரியர், உடற் கல்வி அலகு, மா.இரத்தினசோதி – கராத்தே பயிற்றுநர், கே.கணேசநாதன் – பணிப்பாளர், உடற்கல்வி அலகு, க.நிருபன், எஸ்.கஜேந்திரன்

# 8 ஆண்டுகளின் பின் டெண்டுல்கர் முதலிடம்

(டுபாய்)

ஐ.சி.சி., டெஸ்ட் துடுப்பாட்ட வீரர்களுக்கான தரவரிசையில் பட்டியலில், இந்திய நட்சத்திர துடுப்பாட்ட வீரர் சச்சின் டெண்டுல்கர் 8 ஆண்டுகளுக்கு பின் மீண்டும் "நம்பர்-1' இடத்துக்கு முன்னேறியுள்ளார்.

டெஸ்ட் அரங்கில் சிறந்து விளங்கும் வீரர்களுக்கான தரவரிசைப் பட்டியலை சர்வதேச கிரிக்கெட் சபை (ஐ.சி.சி ) டுபாயில் நேற்று முன்தினம் வெளியிட்டது.

இதில் துடுப்பாட்ட வீரர்களுக்கான தரவரிசையில் இந்திய வீரர் சச்சின் டெண்டுல்கர் 891 புள்ளிகள் பெற்று முதலிடம் பிடித்தார். இதற்கு சமீபத்தில் நடந்த அஸ்திரேலியாவுக்கு எதிரான 2 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் சாதித்ததே காரணம்.

இத்தொடரில் சச்சின் டெண்டுல்கர் ஒரு இரட்டைச் சதம் உட்பட 403 ஓட்டங்கள் குவித்து, தொடர் நாயகன் விருது வென்றார். இதன் மூலம் 8 ஆண்டுகளுக்கு பின் டெஸ்ட் துடுப்பாட்ட வீரர்களுக்கான தரவரிசையில் சச்சின் டெண்டுல்கர் முதலிடத்துக்கு முன்னேறினார்.

முன்னதாக கடந்த 2002ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் முதலிடம் பிடித்திருந்தார். தவிர இவர், 9வது முறையாக தரவரிசையில் நம்பர்–1 இடத்தை கைப்பற்றியுள்ளார்.

முதன் முதலில் டெண்டுல்கர் கடந்த 1994ம் ஆண்டு நவம்பர் மாதம் முதலிடம் பிடித்தார்.

இவரை தொடர்ந்து இலங்கையின் சங்கக்கார (874 புள்ளி), இந்தியாவின் சேவாக் (819 புள்ளி) உள்ளனர். மற்ற இந்திய வீரர்களான ராகுல் டிராவிட் (22வது இடம்), லட்க்ஸ்மன் (8வது இடம்) தங்கள் இடத்தை தக்க வைத்துக் கொண்டனர்.



சச்சின்

பெங்களூர் டெஸ்டில் சதமடித்த தமிழக வீரர் முரளி விஜய், 29 இடங்கள் முன்னேறி 57வது இடம் பிடித்தார்.

## சகீர் முன்னேற்றம்

பந்து வீச்சாளர்களுக்கான தரவரிசையில் இந்தியாவின் சகீர் கான் (4வது இடம்), ஹர்பஜன் சிங் (8வது இடம்) ஒரு இடம் முன்னேறினர். அஸ்திரேலிய வேகப்பந்து வீச்சாளர் பென் ஹில்பென்ஸ், ஒரு இடம் முன்னேறி 19வது இடம் பிடித்தார்.

# புனர்வாழ்வு பெற்ற புலி உறுப்பினர்கள் 500 பேர் நேற்று விடுதலையாகினர்

(வவுனியா)

முன்னாள் விடுதலைப்புலி உறுப்பினர்களான 500 பேர் நேற்று வெள்ளிக்கிழமை விடுதலை செய்யப்பட்டனர். இவர்களில் 300 பேர் பெண்களும் 200 பேர் ஆண்களுமே விடுதலை செய்யப்பட்டவர்களாவர்.

வவுனியா நகரசபை கலாசார மண்டபத்தில் நடைபெற்ற இந்த விடுதலை வைபவத்தில் புனர்வாழ்வு மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சின் செயலாளர் ஏ.திசாநாயக்க பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு விடுதலை பெற்றுச் செல்பவர்களில் சிலரை வைபவரீதியாக அவர்களது பெற்றோர்களிடம் கையளித்தார்.

இந்த 500 பேருடன் இதுவரையில் புனர்வாழ்வு பயிற்சி பெற்ற 4 ஆயிரத்து 500 பேர் விடுதலையாகி சமூகத்துடன் இணைக்கப்பட்டுள்ளதாகவும், இன்னும் 6 ஆயிரம் பேர்வரையில் இவ்வாறு சமூகத்துடன் இணைக்கப்பட வேண்டியிருப்பதாகவும் புனர்வாழ்வு ஆணையாளர் நாயகம் பிரிகேடியர் சுதந்த ரணசிங்க தெரிவித்துள்ளார். புனர்வாழ்வு நிலையங்களில் மிஞ்சியுள்ளவர்கள் இரண்டு வாரத்திற்கு ஒரு தடவையென்ற ரீதியில் தொடர்ந்து விடுதலை செய்யப்படவுள்ளனர்.

தொழிற் பயிற்சி மட்டுமல்லாமல், கலை, கலாசாரத்துறைகளிலும், அழகியலிலும் புனர்வாழ்வு நிலையங்களில் ஆண்களுக்கும் பெண்களுக்கும் வழங்கப்பட்டு வருகிறது. அவ்வாறு பயிற்சி பெற்ற பலர் தமது திறமைகளை நடனம், பாட்டு அழகியல் ஆகியவற்றின் ஊடாக இந்த விடுதலை வைபவத்தின் போது வெளிப்படுத்தத்தக்க ஒரு நிகழ்வாகவும் இந்த நிகழ்வு அமைக்கப்பட்டிருந்ததாகவும் பிரிகேடியர் சுசந்த ரணசிங்க தெரிவித்துள்ளார். (ச-5)

# நிதியுதவிகள் குறைக்கப்பட்டதால் கண்ணிவெடி அகற்றும் பணி தாமதம்

## மிதிவெடி செயற்பாட்டு அலுவலர் விளக்கம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்களில் கண்ணிவெடி அகற்றல் பணியில் ஈடுபடும் தொண்டு நிறுவனங்களுக்கு வழங்கும் நிதியுதவியின் அளவை கொடையாளர்கள் குறைத்தமையினால் கண்ணிவெடி அகற்றும் நடவடிக்கை தாமதமாவதாக யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்களின் மிதிவெடி செயற்பாட்டு அலுவலகர் வ.முருகதாஸ் தெரிவித்தார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்களில் கண்ணிவெடி அகற்றும் பணிகளில் ஹலோ ரெஸ்ற், டெனிஸ் மற்றும் மாவட்ட கண்ணிவெடி செயற்பாட்டுப் பிரிவு ஆகியன கண்ணிவெடி அகற்றும் பணிகளில் ஈடுபட்டுள்ளன.

இவற்றுக்கு கொடையாளி நாடுகளினால் வழங்கப்படும் நிதியுதவி 50 வீதத்திற்கும் மேலாகக் குறைக்கப்பட்டுள்ளது.

இதனால் குறித்த நிறுவனங்கள் புதிய அணிகளை உருவாக்கி கண்ணிவெடி அகற்றும் செயற்பாட்டை துரிதமாக்கிச் செயற்பட முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

எனினும் கிளிநொச்சி மாவட்டத்தில் ஹலோ ரெஸ்ற் நிறுவனம் புதிதாக 8 அணிகளுக்குபயிற்சிகளை வழங்கிவருகின்றது என அவர் தெரிவித்தார். (ச-5)

# தமிழ்மக்களுக்கு அரசியல்...

இந்தியப் பிரதமர் மன்மோகன்சிங்கிற்கும் இலங்கை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவிற்கும் இடையில் நேற்று புதுடில்லியில் இடம்பெற்ற சந்திப்பின்போது தமிழர்களின் மனங்களை வெல்லும் நடவடிக்கை குறித்து கலந்துரையாடப்பட்டதாக த ஹிந்து தெரிவித்துள்ளது. மகிந்தராஜபக்ஷவிற்கு பகல் போசனத்தை வழங்கிய மன்மோகன்சிங் பின்னர் அவருடன் நடத்திய சந்திப்பின்போது பல்வேறு விடயங்கள் குறித்து கருத்துக்கள் பரிமாறப்பட்டன.

முள்வேலி முகாம்களில் அடைக்கப்பட்டிருக்கும் இலங்கைத்தமிழர்களை அவர்கள் சொந்த இடங்களில் மீண்டும் குடியமர்த்து மாறு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை இந்தியப் பிரதமர் மன்மோகன்சிங் வலியுறுத்தியுள்ளார். முகாம்களில் எஞ்சியுள்ள தமிழர்களை விரைவில் சொந்த இடங்களுக்கு அனுப்புமாறும் கேட்டுக்கொண் டார்.

இலங்கை ஜனாதிபதித் தேர்தல் முடிந்துவிட்டதால் இலங்கைத் தமிழர்களுக்கு அரசியல் தீர்வு வழங்க இதுவே சரியான தருணம் என்று ஜனாதிபதியிடம் மன்மோகன்சிங் வலியுறுத்தியுள்ளார்.

இலங்கைத் தமிழர்கள் மறுவாழ்வுக்காக இந்தியா அளித்துள்ள நிதி எந்த விதத்தில் செலவு செய்யப்பட்டுள்ளது என்றும் போரினால் பாதிக்கப்பட்ட வடகிழக்குப் பகுதியில் புனரமைப்புப் பகுதிகள் குறித்தும் ஆலோசனை நடத்தினார்.

இலங்கைத் தமிழர்கள் மீள்குடியேற்றம் குறித்து பார்வையிட இம்மாத இறுதியில் இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் எஸ்.எம். கிருஷ்ணா இலங்கை வரவுள்ளமை குறிப்பிடத்தக்கது. இதேவேளை இலங்கையின் இனப் பிரச்சினை தீர்வுக்கு தாம் முன்வைக்கப் போகும் அதிகாரப்பகிர்வு குறித்து இலங்கை ஜனா திபதி இந்தியப் பிரதமருக்குவிளக்கியதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கு அப்பால் இலங்கையில் சீனா செலுத்திவரும் செல்வாக்குக் குறித்து இந்தியா இலங்கையிடம் தமது அதிருப்தியை வெளியிட்டதாக தகவல்கள் வெளியாகியுள் என.

இதேவேளை ஜனாதிபதி தேர்தலுக்கு முன்னர் உறுதியளித்தபடி இலங்கை ஜனா திபதி மகிந்த ராஜபக்ஷ தமிழ் மக்கள் மத்தியில் அதிகாரப்பகிர்வை மேற்கொண்டு அவர்களின் மனங்களை வெல்லவேண்டும் என இலங்கையின் வெளியுறவு அமைச்சர் ஜி.எல். பீரிசை நேற்று முன்தினம் சந்தித்த இந்திய வெளியுறவு அமைச்சர் எஸ்.எம். கிருஷ்ணா வலியுறுத்தியுள்ளார். (ச-5)

# வலிகாமம் கல்விப் பணிப்பாளர் திங்களன்று பதவியேற்பு

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளராக நியமிக்கப்பட்டுள்ள எம்.இராஜேந்திரம் எதிர்வரும் திங்கட்கிழமை தனது கடமைகளை பொறுப்பேற்கவுள்ளதாக கல்வியமைச்சு வட்டாரங்கள் தெரிவித்தன.

யாழ்.வலய பிரதிக் கல்விப் பணிப்பாளராக கடமையாற்றி வந்த எம்.இராஜேந்திரம் வடக்கு மாகாண ஆளுநர் ஜீ.ஏ.சந்திரசிறியின் அறிவுறுத்தல்களுக்கமைய வடக்கு மாகாண கல்வி அமைச்சினால் வலிகாம வலயகல்விப் பணிப்பாளராக நியமிக்கப்பட்டுள்ளார். (ச-5)

# வெடிபொருட்களால்...

காரணமாகாது.

மிதிவெடி அகற்றல் செயற்பாட்டின் போது இரண்டு முறைகள் கடைப்பிடிக்கப்படுகிறது. மிதிவெடிகள் உள்ள பிரதேசம் ஒன்றை தொழில்நுட்ப முறை சாரா ஆய்வு மேற்கொண்டு மிதிவெடி வயல் தவிர்ந்த ஏனைய பகுதி மீள்குடியேற்றத்திற்கு அனுமதிக்கப்படும்.

எனினும் இவ்வாறு மீள் குடியேற்றத்திற்கு அனுமதிக்கப்பட்ட இடங்களில் வெடிக்காத நிலையில் வெடிபொருட்கள் காணப்படலாம்.

இதற்காகவே மிதிவெடிகள் அகற்றல் செயற்பாட்டில் ஈடுபட்டுள்ள தொண்டு நிறுவனங்கள் மீள் குடியேறுவதற்கு முன்னர் மக்களுக்கு முகாங்களிலேயே மிதிவெடி, வெடிபொருட்களின் அபாயங்கள் தொடர்பில் விழிப்புணர்வு செயற்பாடுகளை வழங்கியுள்ளன.

அத்துடன் ஏனையவர்களுக்கும் விழிப்புணர்வை ஏற்படுத்த பல திட்டங்கள் வழங்கப்படுகிறது. எனினும் விழிப்புணர்வு வழங்கப்பட்ட மக்களும் தவறான முறையிலும் பொறுப்பற்ற விதத்திலும் செயற்படுகின்றனர்.

இதனாலேயே அண்மைக்காலமாக வெடிவிபத்துக்களினால் உயிரிழப்புக்கள் ஏற்படுகின்றன. குறிப்பாக யாழ். மாவட்டத்தில் வெடிபொருட்கள் உள்ள பிரதேசங்களிலிருந்து வெடிக்காத பொருட்களை எடுத்து வந்து பொதுமக்களுள்ள இடங்களில் வைத்து தமது தேவைகளுக்காக வெடிமருந்துகளை எடுக்கும் செயற்பாடுகளில் ஈடுபடுகின்றனர்.

இது போன்ற செயற்பாடுகளில் ஈடுபடுவதனால் பொதுமக்களுக்கு உயிராபத்துக்கள் ஏற்படும் சம்பவங்களே நடந்துள்ளது-நடக்கும்.

எனவே பொதுமக்கள் விழிப்பாக இருக்கும்போதுதான் வெடிவிபத்துக்களிலிருந்து தப்பிக்க முடியும்.

சந்தேகத்திற்கிடமாக காணப்படும் வெடிபொருட்கள் தொடர்பில் பொதுமக்கள் யாழ். மாவட்ட மிதிவெடி செயற்பாட்டு அலுவலக தொலைபேசி இலக்கமான 021 222 3886 அழைத்து தெரிவிக்கவும்.

மாறாக அப்பொருளை எடுத்து வேறு தேவைகளுக்கு பயன்படுத்த முற்பட வேண்டாம். அத்துடன் குப்பைகளை ஒரே இடத்தில் போட்டு வெடி பொருள் அபாயத்தை தவிர்க்க வேண்டுமென அவர் கேட்டுள்ளார். (ச-5)

# வெள்ளைக்கொடி விவ...

2ஆம் திகதி வரை ஒத்திவைத்தது.

இதேவேளை நேற்றுமுன்தினம் இடம்பெற்ற குறுக்கு விசாரணையின் போது வெள்ளைக் கொடி செய்திக்காக தமக்கு இலங்கையின் பத்திரிகை ஆசிரியர் சங்க விருது கிடைக்காமைக்கு 2010 ஆகஸ்ட் முதலாம் திகதியன்று தாம் விமர்சித்து எழுதிய கடிதம் தொடர்பான தகவல்கள் தமக்கு ஞாபகம் இல்லை என பிரட்றிக்கா ஜேன்ஸ் நேற்று முன்தினம் தெரிவித்ததன் அடிப்படையில் நேற்று விசாரணை தொடர்ந்தது.

குறுக்கு விசாரணையை மேற்கொண்ட சரத் பொன்சேகாவின் சட்டத்தரணி நளின் லதுவாஹெட்டி இரண்டு மாதங்களுக்கு முன்னர் எழுதிய கடிதம் நினைவில்லை என்றால் 2009ஆம் ஆண்டு டிசம்பர் 13ஆம் திகதியன்று வெளியான வெள்ளைக்கொடி சம்பந்தமான தகவல்கள் உங்களுக்கு எவ்வாறு நினைவிருக்கும் என குறுக்குக் கேள்வி எழுப்பினார்.

இதற்கு பதிலளிக்கையில் சரத் பொன்சேகாவிடம் தாம் பெற்ற பேட்டியை தமது பதிவுப் புத்தகத்தில் வைத்துள்ளமையால் நினைவுடன் சாட்சியம் வழங்கக் கூடியதாக இருப்பதாக பிரட்றிக்கா ஜேன்ஸ் தெரிவித்தார்.

இதன் போதே மின்சாரத் தடை ஏற்பட்டது. அதனால் வழக்கு விசாரணை வரும் நவம்பர் மாதம் 2ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது. (ச-5)

# துப்பாக்கி...

இடையிலான கைகலப்பின்போது துப்பாக்கி வெடித்ததாக பொலிஸ் தரப்பு தகவல்கள் தெரிவிக்கின்றன. முனைக்காடு பிரதேசத்தைச் சேர்ந்த 35 வயதான நபர் ஒருவரே உயிரிழந்துள்ளார். (ச-5)

# மனித உரி...

பட்டிருந்த அழைப்பை மனித உரிமைகள் கண்காணிப்பகம், சர்வதேச மன்னிப்புச்சபை, சர்வதேச நெருக்கடிகள் குழு ஆகிய மனித உரிமை அமைப்புக்கள் நேற்றுமுன்தினம் நிராகரித்திருந்தன.

யுத்தம் குறித்து பக்க சார்பின்றி விசாரணை செய்ய இந்த குழுவுக்கு அதிகாரமோ அருகதையோ இல்லை என்று இந்தக் குழுக்கள் விமர்சித்திருந்தன.

இது குறித்து பதிலளித்த அக்குழுவின் அதிகாரியொருவர், சர்வதேச மனித உரிமை அமைப்புக்கள் இவ் ஆணைக்குழுவின் செயற்பாட்டை முழுமையாக புரிந்து கொள்ள வேண்டும் எனக் கூறியுள்ளார். (ச-5)

# சிறையை உடைத்...

கைதிகளுடன் இணைந்து சிறைக் கதவுகளை உடைத்தெறிந்து வெளியேறி, நாட்டு மக்களை காப்பாற்ற தயார்.

அரசினால் கைது செய்யப்படும் நடவடிக்கைகள் தொடர்ச்சியாக இடம்பெறும். ரஞ்சன் ராமநாயக்க கைது செய்யப்பட்டுள்ளார். இன்னும் ஆயிரக்கணக்கானவர்கள் விரைவில் கைது செய்யப்படலாம்.

பொது மக்களைப் பாதுகாப்பதற்காக ஏனைய கைதிகளுடன் இணைந்து சிறைச்சாலைக் கதவுகளை உடைத்தெறிவதற்கும் நான் தயங்கப்போவதில்லை.

சிறைச்சாலையை விட்டு தாம் வெளியேறி விட்டால் நாட்டுமக்களின் சுதந்திரத்தையும், பாதுகாப்பையும் உறுதிப்படுத்த முடியும் என அவர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார். வெள்ளைக்கொடி வழக்கு விசாரணைகளுக்கு ஆஜராகி சிறைச்சாலை திரும்பிய போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார். (ச-5)

தீபாவளி வாழ்த்து மடல்கள்
-2010-
இலங்கையின்
முன்னணி வெளியீட்டாளர்களான
சீவம் கிறிற்றிங்ஸ்&றோயல் கிறிற்றிங்ஸ்
- போஸ்காட் சினிமா + சுவாமி – (சிறிது) 50 டிசைன்
- போஸ்காட் சினிமா – (பெரிது) – 25 டிசைன்
- 8X5 அளவு – சினிமா + சுவாமி + பூக்கள் – 100 டிசைன்
- 11X5 அளவு – சினிமா + சுவாமி – 100 டிசைன்
- கட்டிங் காட் – சினிமா

வியாபாரிகளுக்கு தரமான விசேட விலைக்கழிவு வழங்கப்படும்
அன்னை புத்தகசாலை
யாழ்ப்பாணம் – சாவகச்சேரி
222 9881 021 227 0003
(C-1420)

புலமை கல்வி நிறுவனம்
புதிய வகுப்புக்கள் ஆரம்பமாகின்றன.
2011ல் தரம் 5 -பி.ப.1.30
2011ல் தரம் 4 -பி.ப.2.30
காலம் :17.10.2010
அனுமதிகளைப் பெற்றுக்கொள்ளவும்.
ஆசிரியர்: திரு.க.கலாமோகன் (B.A.,Dip.in Teach)
இணுவில் வீதி (பாமசி லேன்), மானிப்பாய்.
(2655)

அரச–அரசசார்பற்ற, தனியார் துறைகளில்
தொழில் உத்தரவாதம் நிறைந்த
பத்திரிகை வானொலி தொலைக்காட்சி இணையம
ஊடகக் கல்வி
IT ORIENTED JOURNALISM COURSE
சிறந்த தேர்ச்சி வழங்கும் 3 மாத கால உலகத்தரம் வாய்ந்த கற்கைநெறி
விரிவான பயிற்சிகள் – நூலக வசதி
கணினி – இணைய ஆய்வுகூடம்
Audio – Video Lab - Basic Photography
நவீன ஒளிப்படக்கலைப் பயிற்சி Professional Photography வகுப்புக்களும்
கற்பனாசக்தி – கலைநுட்பத்துடன் கூடிய Creative Graphic Designing நடைபெறுகின்றன
புதிய பிரிவுகள் ஆரம்பம்: ஒக்டோபர் 17 விஜயதசமி அன்று
சிகரம் ஊடக இல்லம்
இல.221, பலாலி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்
தொ.பே.: 021 300 80 60, நேரடி: 077 77 33 931

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 16.10.2010 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.